LAUNCHING OFFER
1 வருடம்
₹2,520
₹999
60% Off
E-Paper
https://store.hindutamil.in

# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

சென்னை பதிப்பு ● வெள்ளி, பிப்ரவரி 28, 2020

RNI No.TNTAM/2018/76449 Vol.3 No.58

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

https://www.hindutamil.in

● 18 பக்கங்கள் ₹ 7

காமதேனு வார இதழை தபால் மூலம் சிறப்புச் சந்தா விலையில் பெற
₹475 ₹650 அரையாண்டு சந்தா
https://store.hindutamil.in/print-subscription

மாநிலம் ● வீடு ஒதுக்கீடு
இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணுவுக்கு வீடு ஒதுக்கீடு செய்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டது. 6

கருத்து ● எதிர்மறை பிரச்சாரம்
தமிழகத்தில் எதிர்மறை பிரச்சாரமே அதிகம் உள்ளதாக தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கருத்து தெரிவித்துள்ளார். 7

தேசம் ● தொடர்பு?
டெல்லி கலவரத்தில் உளவுத் துறை அதிகாரி கொலையில் ஆம் ஆத்மி கவுன்சிலருக்கு தொடர்பு இருப்பதாக புகார் எழுந்துள்ளது. 10

கடைசிப் பக்கம் ● நடவடிக்கை
தமிழக அரசு ஊழியர்கள் பணியின்போது அடையாள அட்டை அணியாவிட்டால் நடவடிக்கை எடுக்க அரசு முடிவு செய்துள்ளது. 14

இன்றைய நாளிதழுடன்
இந்து டாக்கீஸ்
4 பக்க இணைப்பு கேட்டு வாங்குங்கள்

குடியுரிமை சட்டம் தொடர்பான கலவரத்தை அடுத்து

## வடகிழக்கு டெல்லியில் உச்சக்கட்ட பாதுகாப்பு

● வன்முறைக்கு பலியானோர் எண்ணிக்கை 34-ஆக உயர்வு

■ புதுடெல்லி

குடியுரிமை திருத்தச் சட்டத்தை மையமாக வைத்து வடகிழக்கு டெல்லியில் நடைபெற்ற கலவரச் சம்பவங்களை தொடர்ந்து அங்கு உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் ஒரு பகுதியாக, அப்பகுதிகளில் போலீஸார் நேற்று கொடி அணிவகுப்பு நடத்தினர்.

மத்திய அரசின் குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராக வடகிழக்கு டெல்லியின் ஜாப்ராபாத் பகுதியில் கடந்த சனிக்கிழமை போராட்டம் தொடங்கியது. இதில் 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதற்கு பதிலடியாக, ஜாப்ராபாத்துக்கு அருகே உள்ள மவுஜ்பூர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நூற்றுக்கணக்கானோர் திரண்டு குடியுரிமை சட்டத்துக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது இருதரப்புக்கும் இடையே மோதல் வெடித்து கலவரமாக மாறியது. இதில் ஏராளமானோர் காயமடைந்தனர்.

பின்னர், வடகிழக்கு டெல்லியின் சாந்தாபாக், கோகுல்புரி, கர்டாம்புரி, ஆகிய பகுதிகளிலும் இந்தக் கலவரம் பரவியது. தொடர்ந்து 4 நாட்களாக நடைபெற்ற இந்த கலவரச் சம்பவங்களில் ஏராளமான வீடுகள், கடைகள், வாகனங்கள் ஆகியவை தீக்கிரையாக்கப்பட்டன. 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் டெல்லி மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



▲ வடகிழக்கு டெல்லியில் கலவரம் ஏற்பட்டதை அடுத்து அங்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, வெறிச்சோடி கிடந்த சாலையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் போலீஸார்.



▲ கலவரத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஷிவ் விஹார் பகுதியிலிருந்து தனது குழந்தைகளுடன் வெளியேறுகிறார் ஒருவர். படங்கள்: பிடிஐ

இந்த வன்முறைச் சம்பவங்களுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் இரவு வரை 27-ஆக இருந்தது. இந்நிலையில், நேற்று ஒரே நாளில் வெவ்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த 7 பேர் உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 34-ஆக உயர்ந்துள்ளது.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 130 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கலவரம் தொடர்பான வழக்குகள் அனைத்தும் குற்றப்பிரிவுக்கு மாற்றப்பட்டு உள்ளன. மேலும், இதுகுறித்து விசாரிப்பதற்காக இரண்டு சிறப்பு புலனாய்வுக் குழுக்களை (எஸ்ஐடி) டெல்லி காவல்துறை அமைத்துள்ளது.

### சிஆர்பிஎப் படையினர் குவிப்பு

இதனிடையே, கலவரம் பாதிக்கப்பட்ட வடகிழக்கு டெல்லியில் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மீண்டும் கலவரம் ஏற்படாமல் தடுப்பதற்காக அங்கு ஒரு மாத காலத்துக்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. மேலும், ஆயிரக்கணக்கான போலீஸார் பாதுகாப்புப் பணிகளுக்காக குவிக்கப்பட்டு உள்ளனர். இதுதவிர, கலவரம் ஏற்பட்டால் கட்டுப்படுத்துவதற்காக சிஆர்பிஎப், பிஎஸ்எப் ஆகிய துணை ராணுவப் படைகளில் இருந்து 45 கம்பெனிகள் வரவழைக்கப்பட்டு உள்ளன. ஒரு கம்பெனியில் 120 முதல் 134 வீரர்கள் வரை இருப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மக்களின் அச்சத்தை போக்கும் விதமாக டெல்லி போலீஸார் நேற்று கொடி அணிவகுப்பையும் நடத்தினர்.

### உயர் நீதிமன்றம் அவகாசம்

டெல்லியில் வன்முறையை தூண்டும் விதமாக பேசியதாக பாஜக தலைவர்கள் கபில் மிஸ்ரா, அனுராக் தாக்குர், பர்வேஷ் ஆகிய 3 பேர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி டெல்லி உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த உயர் நீதிமன்றம், அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறு போலீஸாருக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில், இதுதொடர்பான விசாரணை, டெல்லி உயர் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது. அப்போது, டெல்லி காவல்துறை சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா கூறியதாவது:

வெறுப்புணர்வை ஊட்டும் வகையில் பேசியதாக சிலரது பேச்சுகளை மட்டும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வாறு, குறிப்பிட்ட சிலரது பேச்சுகளை மனுதாரரே தேர்ந்தெடுத்து கொடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேசிய பலரது பேச்சையும் இதில் சேர்க்க வேண்டியுள்ளது. எனவே, இதற்கு கால அவகாசம் வேண்டும் எனக் கோரினார்.

இதையடுத்து, வன்முறையை தூண்டும் வகையில் பேசியவர்களை கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க 4 மாத கால அவகாசம் வழங்கி நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### நிவாரணம் - அரசு அறிவிப்பு

இந்த சூழலில், டெல்லி வன்முறை சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் நேற்று அறிவித்தார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

வன்முறைச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கு டெல்லி அரசு சார்பில் ரூ.10 லட்சம் நிவாரண உதவியாக வழங்கப்படும். படுகாயமடைந்தவர்களுக்கு ரூ.2 லட்சம் வழங்கப்படும். அதுமட்டுமின்றி, காயமடைந்தவர்களின் மருத்துவ செலவுகளை அரசே ஏற்கும்.

கலவரச் சம்பவங்களின்போது தீக்கிரையான அல்லது காணாமல் போன முக்கிய ஆவணங்களை திரும்ப வழங்குவதற்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். இவ்வாறு அர்விந்த் கேஜ்ரிவால் கூறினார்.



▲ குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையில் அக்கட்சியின் மூத்த தலைவர்கள், நேற்று சந்தித்து டெல்லி கலவரம் தொடர்பாக மனு அளித்தனர். படம்: பிடிஐ

டெல்லி கலவரத்தை கட்டுப்படுத்த மத்திய அரசு தவறிவிட்டது

## உள்துறை அமைச்சர் அமித் ஷா பதவி விலக வலியுறுத்த வேண்டும்

● குடியரசுத் தலைவரிடம் சோனியா தலைமையிலான குழு மனு

■ புதுடெல்லி

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையிலான குழுவினர் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை நேற்று சந்தித்தனர். அப்போது, டெல்லி கலவரத்தை கட்டுப்படுத்த தவறிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை பதவி விலக வலியுறுத்த வேண்டும் என்று கோரி மனு அளித்தனர்.

மத்திய அரசு புதிதாக இயற்றியுள்ள குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு (சிஏஏ) எதிராக டெல்லியின் ஷாஹின் பாக் பகுதியில் 2 மாதங்களுக்கும் மேலாக தொடர் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், வடகிழக்கு டெல்லியில் கடந்த 23-ம் தேதி சிஏஏ ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இது கலவரமாக மாறியது. 4 நாட்களாக நடைபெற்ற கலவரத்தில் 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். காயமடைந்த சுமார் 200 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். கலவரம் மேலும் பரவுவதைத் தடுக்க அப்பகுதியில் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் கலவரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையிலான குழுவினர், குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை நேற்று சந்தித்து ஒரு மனுவை சமர்ப்பித்தனர். இக்குழுவில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், கட்சியின் மூத்த தலைவர்கள் ப.சிதம்பரம், குலாம் நபி ஆசாத், கே.சி.வேணுகோபால், மல்லிகார்ஜுன கார்கே, பிரியங்கா காந்தி, ஆனந்த் சர்மா, ஏ.கே. அந்தோணி உள்ளிட்டோர் இடம் பெற்றிருந்தனர்.

குடியரசுத் தலைவரை சந்தித்த பிறகு, அவரிடம் வழங்கிய மனுவில் உள்ள அம்சங்கள் குறித்து சோனியா காந்தி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

டெல்லியில் கலவரம் வெடித்த நிலையில் மத்திய அரசும், டெல்லி அரசும் அதைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் இரு அரசுகளும் அமைதியாக இருந்ததால் கலவரம் மேலும் பரவியது. இதனால் பலர் உயிரிழந்துள்ளனர். வீடுகள், கடைகள், வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

டெல்லி போலீஸாரும் தங்கள் கடமையை செய்யத் தவறி உள்ளனர். கலவரம் வெடித்த பகுதியில் குறைவான அளவிலேயே போலீஸார் இருந்தனர். அங்கு கூடுதல் போலீஸாரை பணியில் ஈடுபடுத்தாதது ஏன் என்ற கேள்வி எழுகிறது. உளவுத் துறையும் தோல்வி அடைந்துள்ளது.

இந்த விவகாரத்தில் டெல்லி உயர் நீதிமன்றம் தலையிட்டு, போலீஸார் தங்கள் கடமையைச் செய்யாதது ஏன் என கேள்வி எழுப்பி உள்ளது. இது மத்திய அரசு, உள்துறை அமைச்சகம் மற்றும் அத்துறை அமைச்சருக்கே அவமானம் ஆகும்.


எனவே, தனது கடமையை செய்யத் தவறிய மத்திய உள்துறை அமைச்சர் பதவி விலக வலியுறுத்த வேண்டும் என குடியரசுத் தலைவரிடம் கோரி உள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### மன்மோகன் சிங் கருத்து

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் கூறும்போது, "குடியரசுத் தலைவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தி உள்ளோம். குறிப்பாக, ராஜ தர்மத்தை காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை அவர் வலியுறுத்த வேண்டும். அப்போதுதான், தலைநகரில் அமைதியை நிலைநாட்ட முடியும்" என்றார். - பிடிஐ






## நல்லதே நடக்கும்

• ஜோதிஷபூஷண் வேங்கடசுப்பிரமணியன் •

# 28-02-2020

**வெள்ளிக்கிழமை**

விகாரி 16 மாசி

நத்தம் மாரியம்மன் பால் காவடி உற்சவம். தங்க ரதத்தில் பவனி. திருச்செந்தூர் முருகப்பெருமான், மதுரை இன்மையில் நன்மை தருவார் உற்சவம் ஆரம்பம்.

| | |
|---|---|
| திதி | : பஞ்சமி இன்று முழுவதும். |
| நட்சத்திரம் | : அசுவினி பின்னிரவு 1.45 மணி வரை. பிறகு பரணி. |
| நாமயோகம் | : சுப்பிரம் காலை 9.34 மணி வரை. அதன் பிறகு பிராம்யம். |
| நாமகரணம் | : பவம் மாலை 5.40 மணி வரை. அதன் பிறகு பாலவம். |
| நல்லநேரம் | : காலை 6.00-9.00, மதியம் 1.00-3.00, மாலை 5.00-6.00, இரவு 8.00-10.00 மணி வரை. |
| யோகம் | : அமிர்தயோகம் பின்னிரவு 1.45 மணி வரை. பிறகு சித்தயோகம். |
| சூலம் | : மேற்கு, தென்மேற்கு காலை 10.48 மணி வரை. |
| பரிகாரம் | : வெல்லம் |
| சூரியஉதயம் | : சென்னையில் காலை 6.26 **அஸ்தமனம்:** மாலை 6.17 |

| | | | |
|---|---|---|---|
| ராகு காலம் | காலை 10.30-12.00 | நாள் | வளர்பிறை |
| எமகண்டம் | மாலை 3.00-4.30 | அதிர்ஷ்ட எண் | 1, 3, 7 |
| குளிகை | காலை 7.30-9.00 | சந்திராஷ்டமம் | உத்திரம், அஸ்தம் |

**தென்னை, பலா, மாமரக்கன்றுகள் நட, பசுமாட்டுத் தொழுவம் அமைக்க, அரசு அதிகாரிகளை சந்திக்க நன்று.**

**மேஷம்:** குடும்பத்தாருடன் ஈகோ பிரச்சினை வந்து நீங்கும். மன அழுத்தம் அதிகரிக்க வாய்ப்புண்டு. முன்கோபத்தைக் குறைத்து நிதானமாக செயல்படுங்கள். திடீர் பயணம் உண்டு.

**ரிஷபம்:** வாகனத்தை எடுக்கும் முன் எரிபொருள் இருக்கிறதா என சரி பார்த்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். பழைய பிரச்சினைகள் தலைதூக்கும்.

**மிதுனம்:** சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். சிந்தனைத் திறன் அதிகரிக்கும். விருந்தினர் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் உடல்நலம் சீராக இருக்கும்.

**கடகம்:** கணவன் - மனைவிக்குள் நிலவிய கருத்து வேறுபாடு நீங்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். விருந்தினர், நண்பர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

**சிம்மம்:** அசதி, சோர்வு, கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்கள் உதவுவார்கள். வீடு, வாகன பராமரிப்பை மேற்கொள்வீர்கள்.

**கன்னி:** முக்கிய முடிவுகளை தள்ளிப் போடுங்கள். ஒருவர் மீது ஒருவர் குறைகூறிக் கொண்டிருக்க வேண்டாம். கோபத்தால் பகை உண்டாகும். யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்யாதீர்கள்.

**துலாம்:** பழைய இனிய சம்பவங்களை அடிக்கடி நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன செலவுகள் நீங்கும். கலைப்பொருட்கள் சேரும்.

**விருச்சிகம்:** ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தில் குழப்பம் நீங்கி அமைதி திரும்பும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. பால்ய நண்பரை சந்திப்பீர்கள்.

**தனுசு:** சகோதரர் பாசமழை பொழிவார். இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். ஆடை, ஆபரணங்கள் சேரும். பிரபலங்களின் நட்பு கிட்டும். பணவரவு திருப்தி தரும்.

**மகரம்:** பிள்ளைகள் உங்கள் பேச்சுக்கு மதிப்பளிப்பார்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயம் உண்டு.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். நல்ல நண்பர்களை சந்திப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வாகனம் செலவு வைக்கும்.

**மீனம்:** புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். கணவன் - மனைவிக்குள் இருந்துவந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். வீடு, மனை வாங்குவது குறித்து குடும்பத்தினருடன் ஆலோசிப்பீர்கள்.

# தனியார்மயமாகிறதா தமிழக நில அளவைத் துறை?

● 63 சதவீத காலியிடத்தால் மறு நில அளவை செய்வதில் சிக்கல்

இ.ஜெகநாதன்

■ சிவகங்கை

தமிழகத்தில் நில அளவைத் துறையில் 63 சதவீத பணியிடங்கள் காலியாக இருப்பதால், மறு நில அளவைச் செய்வதில் தொடர்ந்து சிக்கல் நீடிக்கிறது. இந்நிலையில், நில அளவைப் பணியை தனியார்மயமாக்க அரசு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அரசின் கொள்கை முடிவின்படி, நில அளவை மாற்றங்களை அறிய 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிலஅளவை செய்ய வேண்டும். கடந்த 1979-ம் ஆண்டு மாநிலம் முழுவதும் நில உடமைப் பதிவு மேம்பாட்டு திட்டம் (யுடிஆர்) செயல்படுத்தப்பட்டது. அதன் மூலம் அப்போது இருந்த 169 வட்டங்கள் அளவீடு செய்யப்பட்டு 96 லட்சத்துக்கும் மேற்பட்ட பட்டாக்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து 1988-ம் ஆண்டு நத்தம் நிலஅளவைத் திட்டம் மூலம் அப்போது இருந்த 28 மாவட்டங்களில் அளவீடு செய்யப்பட்டு 11.2 கோடி பட்டாக்கள் வரை படத்துடன் வழங்கப்பட்டன. 32 ஆண்டுகள் கடந்த நிலையில் நில அளவையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் அரசு மறுநில அளவை செய்யவில்லை.

சமீபத்தில் வெளியிடப்பட்ட அரசாணையில் மணலி, அரியலூர், ஜெயங்கொண்டான், திருத்தங்கல், தூவாக்குடி, அம்பாசமுத்திரம், விக்ரமசிங்கபுரம் உள்ளிட்ட 29 நகரங்களில் நவீன கருவிகள் மூலம் மறுநில அளவை செய்யப்பட உள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இப்பணி ரூ.30.29 கோடியில் 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்நிலையில், நிலஅளவைத் துறையில் 63 சதவீத பணியிடங்கள் காலியாக உள்ளன. அனுமதிக்கப்பட்ட 1,690 நில அளவையர் பணியிடங்களில் 547 இடங்கள், அனுமதிக்கப்பட்ட 586 பிர்க்கா நில அளவையர் பணியிடங்களில் 306, அனுமதிக்கப்பட்ட 1,536 சார்-ஆய்வாளர் பணியிடங்களில் 956 இடங்கள் காலியாக உள்ளன. இதனால் மறுநிலஅளவை செய்வதில் சிக்கல் நீடிக்கிறது.

> ▼ **சார்-பதிவாளர் அலுவலகங்களில் பத்திரப்பதிவு செய்யப்பட்ட 6.86 லட்சத்துக்கும் மேற்பட்ட நிலங்களுக்கு பட்டா நிலுவையில் இருப்பதால் கிராம நிர்வாக அலுவலர்கள் நில அளவீடு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது.**

இதையடுத்து தனியார் சிலருக்கு பயிற்சி அளித்து நில அளவை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால் நிலங்களின் மதிப்பு உயர்ந்து வருவதால், அதை அளவீடு செய்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. தனியார் மூலம் மேற்கொண்டு, அதில் தவறு நடந்தால் தேவையில்லாத பிரச்சினை ஏற்படும். இதனால் காலியிடங்களை நிரப்பி முறையாக மறுஅளவீடு செய்ய வேண்டுமென, நிலஅளவைத் துறையினர் வலியுறுத்தியுள்ளனர். மேலும் கிராம நிர்வாக அலுவலர்கள் நில அளவை செய்ய அரசு ஒப்புதல் அளித்ததற்கும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து நிலஅளவைத் துறையைச் சேர்ந்த சிலர் கூறியதாவது:

### 8 விதமான திட்டம்

நிலஅளவைத் துறை 1853-ம் ஆண்டில் இருந்து செயல்பட்டு வருகிறது. ஜமீன் ஒழிப்புச் சட்டம், வீடற்ற ஏழைகளுக்கு நில எடுப்பு உள்ளிட்ட 8 விதமான திட்டங்களில் அளவீடு செய்து பட்டா வழங்கப்பட்டுள்ளது.

யுடிஆர்-ல் மட்டும் 30 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் நிலம் எங்கள் துறையினரால் அளவீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் காலப்போக்கில் எங்கள் துறையில் காலியிடங்களை நிரப்பாமல் விட்டுவிட்டனர்.

தற்போது தனியாருக்குப் பயிற்சி அளித்து நிலஅளவை மேற்கொள்ள உள்ளனர். இதன் மூலம் பல குழப்பங்கள் ஏற்படும். ஏற்கெனவே தனியார் மூலம் கணினிமயமாக்கப்பட்டதில் பல குளறுபடிகள் ஏற்பட்டன. அப்பிரச்சினை இன்னும் தீர்க்க முடியாமல் உள்ளது.

பொதுவாக நிலஅளவையை கிராம நிர்வாக அலுவலர்களை ஆய்வு செய்ய வேண்டும். பணிப்பளுவால் அவர்கள் அப்பணியை செய்வதில்லை.

இந்நிலையில் சார்-பதிவாளர் அலுவலகங்களில் பத்திரப்பதிவு செய்யப்பட்ட 6.86 லட்சத்துக்கும் மேற்பட்ட நிலங்களுக்கு பட்டா நிலுவையில் இருப்பதால் கிராம நிர்வாக அலுவலர்கள் நில அளவீடு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த உத்தரவுக்கு விஏஓக்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

நிலஅளவைப் பணியில் தனியாரை ஈடுபடுத்தும் முடிவை கைவிட்டு, இத்துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பி மாநிலம் முழுவதும் மறுநில அளவை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு நிலஅளவைத் துறையைச் சேர்ந்தவர்கள் கூறினர்.

பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களின் பெற்றோரிடம் வேண்டுகோள்

# வீடுகளுக்கு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் தமிழாசிரியை

ந.முருகவேல்

■ விருத்தாசலம்

ப்ளஸ் 1 மற்றும் ப்ளஸ் 2 பொதுத்தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்களின் இல்லங்களுக்குச் சென்று பெற்றோரிடம் தேர்வின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்து, மாணவர்களைத் தொடர்ந்து சிறப்பு வகுப்புக்காக பள்ளிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகோள் விடுத்து வருகிறார் தமிழாசிரியை ஒருவர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் குதிரைச்சந்தல் அரசு மேல்நிலைப் பள்ளியின் தமிழ் பாடப்பிரிவில் முதுநிலை ஆசிரியையாக பணிபுரிபவர் துரை.மணிமேகலை. இவரது கணவர் அமுதன் மலைவாழ் மக்கள் வாழும் பகுதியான கல்வராயன்மலையில் உள்ள பரிகம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

கடந்த சில தினங்களாக மாணவர்களின் இல்லங்களுக்கு தனது ஒரு வயதைக் குழந்தையுடன் செல்லும் ஆசிரியை மணிமேகலை, அம்மாணவரின் பெற்றோரை சந்தித்து பேசுகிறார்.



▲ பல்லகச்சேரி கிராமத்தில் பெற்றோரிடம் ஆலோசனை வழங்கும் தமிழாசிரியை துரை.மணிமேகலை.

"உங்கள் குடும்பச் சூழல் அனைவரும் அறிந்ததே. இருப்பினும் உங்கள் பிள்ளைகள் தற்போது முக்கியமானதை கடந்து செல்ல வேண்டிய தருணம்.எனவே அவர்களைத் தொடர்ந்து கண்காணித்து. பள்ளிக்கு அனுப்பி வையுங்கள். தேர்வு சமயத்தில் அவர்கள் உணவு உட்கொள்ளும்போது, உறங்கும் போது உடனிருந்து கவனித்துக் கொள்ளுங்கள்" என்று அறிவுரை வழங்கி வருகிறார்.

ஆசிரியரின் இந்த அணுகு முறையால் குதிரைசந்தல் கிராமப்புறத்தைச் சேர்ந்த மாணவர்கள் தற்போது தொடர்ந்து சிறப்பு வகுப்புகளுக்குச் சென்று வருகின்றனர்.

இதுபற்றி ஆசிரியை துரை. மணிமேகலையிடம் கேட்டபோது, "ப்ளஸ் 1 மற்றும் ப்ளஸ் 2 மாணவர்களுக்கான செய்முறை தேர்வுகடந்த வாரம் முடிந்துவிட்டது. இதையடுத்து பெரும்பாலான மாணவர்கள் பள்ளிக்கு வருவதை தவிர்ப்பதுண்டு. மாணவர்களை குறைகூற முடியாது.

கிராமப்புற மாணவர்களின் சூழலை நன்கு அறிவேன். வருமானத்துக்காக பெற்றோர் வேலைக்குச் சென்று விடுவர். பிள்ளைகளை கவனிக்க முடியாத சூழலில் அவர்கள் உள்ளனர். வீட்டில் உள்ள வேலைகளையும் பிள்ளைகளே செய்ய வேண்டும். பெண் பிள்ளையாக இருந்தால், வீட்டு வேலைச் சுமை அதிகம்.

இதுதொடர்பாக சில மாணவ-மாணவியர் "எங்கள் வீட்டில் வந்து பேசுங்கள்" எனக் கேட்டுக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து, தனிப்பட்ட முறையில் நானே மாணவர்களின் வீடுகளுக்குச் சென்றுபெற்றோரிடம் பேசினேன். அதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. தற்போது மாணவர்கள் விடுப்பின்றி பள்ளிக்கு வருகின்றனர். இது எனக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது" என்றார்.

## துணை மருத்துவம் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு

■ சென்னை

வேலைவாய்ப்பு, பயிற்சித் துறை இயக்குநர் வி.விஷ்ணு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

துணை மருத்துவப் படிப்புகளை முடித்தவர்களுக்கான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் சென்னையில் வரும் மார்ச் 5-ம் தேதி நடக்க உள்ளது. கிண்டி திருவிக தொழிற்பேட்டையில் டான்சி கார்ப்பரேட் வளாக முதல் தளத்தில் உள்ள மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இந்த முகாம் நடக்கிறது. துணை மருத்துவம் சார்ந்த 10-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இதில் பங்கேற்கின்றன.

பிஎஸ்சி பயோகெமிஸ்ட்ரி, மைக்ரோபயாலஜி உள்ளிட்ட படிப்புகளை படித்துள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பங்கேற்கலாம். முகாமில் பங்கேற்க முன்பதிவு அவசியம் இல்லை. பயணப்படி ஏதும் வழங்கப்படாது. மேலும் விவரங்களுக்கு, மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரிலோ, 044-22500134 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

தாம்பரம், செங்கல்பட்டு, அரக்கோணம் உள்ளிட்ட

# 8 ரயில் நிலையங்களில் விரைவில் பேட்டரி வாகன வசதி

■ சென்னை

சென்னை தாம்பரம், செங்கல்பட்டு, அரக்கோணம் உள்ளிட்ட 8 ரயில் நிலையங்களில் பேட்டரி வாகன வசதியைக் கொண்டு வருவதற்கான பணியை தெற்கு ரயில்வே மேற்கொண்டு வருகிறது.

இதுதொடர்பாக தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: சென்னையில் சென்ட்ரல், எழும்பூர், தாம்பரம் போன்ற பெரிய ரயில் நிலையங்களில் பயணிகள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, முக்கிய ரயில் நிலையங்களில் படிப்படியாக அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வருகிறோம். பெரிய ரயில் நிலையங்களில் மூத்த குடிமக்கள், மாற்று திறனாளிகள், நோயாளிகள் போன்றவர்கள் விரைவு ரயில் பெட்டிகளைக் கண்டறிந்து பயணம் செய்வது சிரமமாக உள்ளது.

அவர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு, ரயில் நிலையங்களில் பேட்டரி வாகன வசதியை விரிவுபடுத்த உள்ளோம். சென்னை சென்ட்ரலில் தற்போது 4 பேட்டரி வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இங்கு கூடுதலாக பேட்டரி வாகனங்களை இயக்க உள்ளோம்.

இதுதவிர, தாம்பரம், காட்பாடி, அரக்கோணம், செங்கல்பட்டு, ஜோலார்பேட்டை, திருவள்ளூர், ஆவடி ஆகிய ரயில் நிலையங்களிலும் பேட்டரி வாகன சேவையை தொடங்க உள்ளோம். இதற்கான, பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த சில மாதங்களில் பேட்டரி வாகன சேவை தொடங்கப்படும்.

# தமிழக கோயில்கள் தல வரலாறு குறித்த ஆவணப்படம் தயாரிப்பு

● இணையதளத்தில் வெளியிட ஏற்பாடு

■ சென்னை

தமிழகத்தின் முக்கிய கோயில்களின் தல வரலாறு, உள்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய ஆவணப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவை விரைவில் இந்துசமய அறநிலையத்துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகம் முழுவதும் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 44,121 கோயில்கள் உள்ளன. இவற்றில், வடபழனி முருகன் கோயில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், பழனி முருகன் கோயில் உள்ளிட்ட 150 முதுநிலை கோயில்கள் உள்ளன.



தமிழகம் மட்டுமின்றி பிற மாநிலங்களில் இருந்து வரும் பக்தர்கள் கோயில்களை பற்றி அறிந்து கொள்வதற்காக 150 முதுநிலை கோயில்களுக்கும் தனிதனியாக தல வரலாறு, கோயிலுக்கு அருகாமையில் உள்ள முக்கிய நகரங்கள், போக்குவரத்து வசதி, உள்கட்டமைப்பு வசதி உள்ளிட்டவை அடங்கிய ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது இந்து சமய அறநிலையத் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் விரைவில் வெளியிடப்பட உள்ளது.

இதுதொடர்பாக, இந்து சமய அறநிலையத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: ஆவணப் படங்கள் அனைத்தும் தயாரிக்கும் பணிகள் முடிந்துவிட்டன. இருப்பினும், ஆவணப்படங்களை ஆராய, குழு அமைக்கும் படி ஆணையர் அறிவுறுத்தியுள்ளார். இக்குழுவினர் மூலம் ஆவணப் படங்களில் அனைத்து தகவல்களும் இடம் பெற்றுள்ளதா, ஏதாவது தகவல்களை இணைக்க வேண்டுமா என்பன உள்ளிட்டவை குறித்து ஆலோசித்து இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளது. இதுவரை இக்குழு அமைக்கப்படவில்லை. இக்குழுவின் மூலம் இறுதி செய்யப்பட்டவுடன் ஆவணப்படங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

குரூப்-4 தேர்வு முறையில் மாற்றம்

# கிராமப்புற தேர்வர்களை பாதிக்குமா?

● டிஎன்பிஎஸ்சி அதிகாரிகள் விளக்கம்

சி.பிரதாப்

■ சென்னை

அரசுப் பணிகளுக்கு தகுதியான பணியாளர்களை தேர்ந்தெடுக்கவே குரூப் - 4 மீண்டும் இரு தேர்வு நடைமுறையாக மாற்றப்பட்டுள்ளது என டிஎன்பிஎஸ்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழக அரசுப் பணியிடங்களை டிஎன்பிஎஸ்சி மூலம் போட்டித் தேர்வுகள் நடத்தி நிரப்பப்படுகின்றன. இந்நிலையில் குரூப்-4 பதவிகளுக்கு மீண்டும் முதன்மைத் தேர்வு அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தால் கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என பரவலாக எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

இதுகுறித்து டிஎன்பிஎஸ்சி அதிகாரிகள் கூறியதாவது: குரூப்-4 பதவிகளுக்கான போட்டித் தேர்வு தற்போது கொள்குறி வகை வினா அடிப்படையில் மொத்தம் 300 மதிப்பெண்களுக்கு நடைபெறுகிறது. இதில் தேர்ச்சி பெற்று பணிக்குச் செல்பவர்களில் சராசரியாக 40 சதவீதம் பேர் போதுமான தகுதியுள்ளவர்களாக இருப்பதில்லை. அடிப்படையான ஆங்கில மொழி புரிதல் இல்லாததுடன், அலுவலககோப்புகள்மற்றும்துறை சார்ந்த குறிப்புகளை பிழையின்றி எழுதவும் கடிதங்களை படித்து புரிந்து கொள்ளவும் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

கொள்குறி தேர்வு முறையில் சமச்சீர் பாடத்திட்டத்தில் இருந்து மட்டுமே கேள்வி கேட்கப்படுவதால் மனப்பாடம் செய்து தேர்ச்சி பெற்றுவிடுகின்றனர். அதன்விளைவு தமிழில்கூட பிழையின்றி எழுத பலர் சிரமப்படுகின்றனர். இதன் காரணமாக அரசு அலுவலக பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்படுவதுடன், பல்வேறு நிர்வாக சிக்கல்கள் ஏற்படுவதாக புகார்கள் வருகின்றன.

### விரிவாக விடை அளித்தல்

அதனால் குறைந்தபட்சம் தமிழ், ஆங்கில மொழி திறன் மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக குரூப் - 4 பதவிகளுக்கு மீண்டும் முதன்மைத் தேர்வு வைக்கப்பட்டுள்ளது. இந்த தேர்வு கட்டுரை, கடிதம் எழுதுதல், பத்தியை படித்து விடை அளித்தல், மொழிப்பெயர்ப்பு, சுருக்கமாக மற்றும் விரிவாக விடை அளித்தல் ஆகியவை இடம்பெறும். இதற்கான பாடத்திட்டங்கள் மற்றும் தேர்வுமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

முதல்நிலை தேர்வு வழக்கம் போல கொள்குறி வகையில் கேட்கப்படும். தமிழக வரலாறு, வளர்ச்சி நிர்வாகம், பண்பாடு, சமூகநல இயக்கங்கள் போன்ற பகுதிகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்து கேள்விகள் கேட்கப்படும்.

இந்த 2 தேர்வுகளிலும் தேர்வர்கள் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தகுதியானவர்கள் பணிக்குத் தேர்வு செய்யப்படுவார்கள். அதனால் இந்த மாற்றம் எவ்விதத்திலும் கிராமப்புற மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

மத்திய பணியாளர் தேர்வாணையமானது இதே 10-ம் வகுப்பு கல்வித் தகுதி கொண்ட அலுவலக ஊழியர் பணியிடங்களுக்கும் முதன்மைத் தேர்வுடன் தட்டச்சு தேர்வும் நடத்தி வருகிறது. தேர்வில் எதிர்மறை மதிப்பெண்ணும் வழங்கப்படுகின்றன. ஆனால், நம் தேர்வுமுறையில் அத்தகைய கடுமை பின்பற்றப்படுவதில்லை. மேலும், தேர்வாணையத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தமிழ்வழி மற்றும் கிராமப்புற மாணவர்களை மனதில் வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, தேர்வர்கள் அச்சமின்றி தேர்வை எதிர்கொள்ளலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

ஆசிரியர் தகுதித் தேர்வில் முறைகேடா?

# ஆதாரத்துடன் புகார் அளித்தால் நடவடிக்கை

● அமைச்சர் செங்கோட்டையன் விளக்கம்

■ சென்னை

ஆசிரியர் தகுதித் தேர்வில் முறைகேடு நடந்துள்ளதாக ஆதாரத்துடன் புகார் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.



தமிழகத்தில் கடந்த 2013-ம் ஆண்டு நடந்த ஆசிரியர் தகுதித் தேர்வில் முறைகேடுகள் நடந்துள்ளதாக, அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் கூட்டமைப்பின் சார்பில் ஆதாரங்களுடன் மனு ஒன்றை ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலகத்தில் நேற்று அளித்தனர். இதுபற்றி செய்தியாளர்களிடம், கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் இளங்கோவன் கூறியதாவது:

கடந்த 2013-ம் ஆண்டில் நடந்த ஆசிரியர் தகுதித் தேர்வில் முறைகேடுகள் நடந்துள்ளன. தேர்வு தினத்தில் காலையில் நடந்த இடைநிலை ஆசிரியருக்கான தகுதித் தேர்வில் 10 அல்லது 20 மதிப்பெண்கள் பெற்றவர்கள், மாலையில் நடந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேர்வில் 130 முதல் 140 மதிப்பெண்கள் வரை பெற்றுள்ளனர். இது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் ஒரே மையத்தில் தேர்வெழுதியவர்கள் அதிக அளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர். அந்த மாவட்டத்தில் 700 பேர் தேர்வாகியுள்ளனர். சில மாவட்டங்களில் குறிப்பிட்ட மையங்களில் தேர்வு எழுதியவர்கள் தேர்ச்சி பெற்று பணியில் சேர்ந்துள்ளனர்.

ஆசிரியர் தேர்வு வாரியத்தில் இருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆதாரங்கள் அடிப்படையில்தான் இந்த குற்றச்சாட்டுக்களை தெரிவித்துள்ளோம். அமைச்சரிடமும் இது தொடர்பாக புகார் அளித்துள்ளோம். தேர்வு முறைகேடு குறித்து சிபிஐ விசாரணைக்கு முதல்வர் உத்தரவிட வேண்டும். அதற்கான ஆதாரங்களை தர தயாராக உள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

புகார் தொடர்பாக அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறும் போது, "தமிழகத்தில் கடந்த 2012-13-ம் ஆண்டு ஆசிரியர் தகுதித் தேர்வில் முறைகேடு நடந்துள்ளதாக கடிதம் வந்தது. அதில் கையெழுத்து எதுவும் இல்லை. மொட்டைக் கடிதமே எல்லோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விசாரணை நடத்தியபோது, தேர்வில் முறைகேடுகள் நடக்கவில்லை என்பது தெரியவந்தது. உரிய ஆதாரங்களுடன் புகார் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.



▲ ஆட்டோவில் ஆயுதங்களுடன் தப்பிய வழிப்பறி கொள்ளையர்களை பூந்தமல்லி காவல் நிலைய போலீஸார் 7 கிலோ மீட்டர் தூரம் விரட்டிச் சென்று நேற்று முன்தினம் கைது செய்தனர். இதைத் தொடர்ந்து, பணியின்போது விழிப்புடன் செயல்பட்ட பூந்தமல்லி காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள் ஆனந்த், சுரேஷ், முதல் நிலைக் காவலர் ஸ்ரீதர், திருவேற்காடு காவல் நிலைய முதல்நிலைக் காவலர் சுரேஷ்பாபு, ஊர்காவல் படை காவலர் எல்லப்பன் மற்றும் காவலர்களுக்கு உதவி செய்த கண்ணபாளையம் பஞ்சாயத்து தலைவர் ஆதிகேசவன் ஆகியோரை நேற்று நேரில் அழைத்து காவல் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதன் பாராட்டினார்.

## சட்டத் துறைக்கு புதிய செயலாளர் நியமனம்

■ சென்னை

தமிழக சட்டத் துறைச் செயலராக கோபி ரவிக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக சட்டத் துறையின் செயலராக கடந்த 2015-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை இருந்த ஜெயச்சந்திரன் திருவள்ளூர் மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இதையடுத்து அப்போது சட்டத் துறை கூடுதல் செயலராக இருந்த பூவலிங்கம், சட்டத் துறைச் செயலராக நியமிக்கப்பட்டார். கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக சட்டத் துறைச் செயலராக இருந்த பூவலிங்கம் சமீபத்தில் ஓய்வுபெற்றார்.

இதையடுத்து, கூடுதல் செயலராக இருந்த கோபி ரவிக்குமார் செயலர் பொறுப்பையும் கூடுதலாக கவனித்து வந்தார். இந்நிலையில், கோபி ரவிக்குமார் முழுமையாக சட்டத் துறைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.



▲ சென்னை பல்கலைக்கழகம் மற்றும் டாக்டர் அம்பேத்கர் மக்கள் கல்வி அறக்கட்டளை அகாடமி சார்பில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரை உள்ளடக்கிய சமத்துவ சமூகம் தொடர்பான அறக்கட்டளை சொற்பொழிவு பல்கலைக்கழகத்தில் நேற்று நடந்தது. அறக்கட்டளை நினைவுச் சொற்பொழிவு ஆற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஜெயக்குமாருக்கு மிசோரம் மாநில முன்னாள் ஆளுநர் ஏ.பத்மநாபன் நினைவுப் பரிசு வழங்கினார். உடன் (இடமிருந்து) துணைவேந்தர் பி.துரைசாமி, அகாடமியின் பொதுச்செயலாளர் ஜெ.ராமலிங்கம், மக்கள் கல்வி அறக்கட்டளை அறங்காவலர் சி.செல்லப்பன் ஆகியோர் உள்ளனர். படம்.பு.க.பிரவீன்

இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

# கோடை காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெப்பம் அதிகரிக்கும்

● தமிழகத்தில் பாதிப்பு இல்லை என எஸ்.பாலசந்திரன் தகவல்

■ சென்னை

இந்த ஆண்டு கோடை காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெப்பம் அதிகரிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதே நேரத்தில் தமிழகத்தில் வெப்பநிலை வழக்கமான அளவே இருக்கும் என்பதால் பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்று இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத் தலைவர் எஸ்.பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்திய வானிலை ஆய்வு மையம் சார்பில் கடந்த 2016-ம் ஆண்டு முதல் நாடு முழுவதும், கோடை மற்றும் குளிர் தொடர்பான பருவகால வானிலை முன்னறிவிப்புகளை வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில் இந்த ஆண்டு பருவமழைக்கு முந்தைய காலமான கோடை காலத்தில் (மார்ச், ஏப்ரல், மே) வெப்பநிலை எப்படி இருக்கும் என்பது குறித்த முன்னறிவிப்பை நேற்று வெளியிட்டது.

அதில், இந்த ஆண்டு கோடை காலத்தில், நாட்டின் வட மேற்கு, மேற்கு மற்றும் மத்திய இந்திய பகுதிகள், தென்னிந்தியாவின் சில பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் வெப்பம் வழக்கத்தை விட உயர வாய்ப்புள்ளதாகவும், அது வெப்ப அலையாக மாறவும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டலத் தலைவர் எஸ்.பாலசந்திரனிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

வெப்பநிலை தொடர்பான இந்த அறிவிப்பு அடுத்து வரும் 3 மாதங்களுக்கானதாகும். இதில் உத்தரப்பிரதேசம், டெல்லி, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், ஒடிசா, கோவா, குஜராத், கடலோர கர்நாடகம், கேரளா, வட கர்நாடகத்தின் உள்பகுதிகளில் வழக்கத்தை விட வெப்பம் அதிகரிக்கும் என்றும், இதர பகுதிகளில் இயல்பை ஒட்டியே இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தமிழகத்தில் கோடை காலத்தில் வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கும். அதனால் பொதுமக்கள் யாரும் வெப்பநிலை உயர்வு தொடர்பாக அச்சப்படத் தேவையில்லை. வெப்பநிலை உயர வாய்ப்பிருந்தால், அது தொடர்பாக உரிய நேரத்தில் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

வண்ணாரப்பேட்டை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள

# முஸ்லிம் கூட்டமைப்பினர் முதல்வர் பழனிசாமியுடன் சந்திப்பு

■ சென்னை

குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக வண்ணாரப்பேட்டையில் போராட்டம் நடத்தி வரும் முஸ்லிம் அமைப்பினர், முதல்வர் பழனிசாமியை அவரது முகாம் அலுவலகத்தில் நேற்றிரவு சந்தித்தனர்.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. அதே நேரத்தில் சட்டத்துக்கு ஆதரவாக பேரணிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. குடியுரிமை சட்டத்துக்கு எதிராக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தி பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் சென்னை வண்ணாரப்பேட்டையில் கடந்த 14-ம் தேதி போராட்டம் நடத்தினர். அப்போது, போலீஸார் தங்கள் மீது தடியடி நடத்தியதாக குற்றம்சாட்டிய முஸ்லிம்கள், இதற்கு கண்டனம் தெரிவித்தும், குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றக் கோரியும் வண்ணாரப்பேட்டையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 14-வது நாளாக நேற்றும் போராட்டத்தை தொடர்ந்தனர்.

குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் பாஜகவினர் இன்று பேரணி நடத்த உள்ளனர். இந்நிலையில், வண்ணாரப்பேட்டையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் முஸ்லிம் கூட்டமைப்பினர் 12 பேர் நேற்றிரவு முதல்வர் பழனிசாமியை சந்தித்து பேசினர். அப்போது, 'குடியுரிமைச் சட்டத்தை தமிழகத்தில் அமல்படுத்த மாட்டோம் என பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அதுவரை போராட்டத்தை கைவிட மாட்டோம்' என முதல்வரிடம் அவர்கள் உறுதியுடன் கூறியதாக தெரிகிறது.

சென்னையில் மார்ச் 1-ம் தேதி

# அரிய வகை நோய் குறித்து விழிப்புணர்வு ஓட்டம்

■ சென்னை

அரிய வகை நோய்கள் குறித்து விழிப்புணர்வு ஓட்டத்தை, அரிய நோய்களுக்கான அமைப்பு (ஓஆர்டிஐ) சார்பில் வரும் மார்ச் 1-ம் தேதி சென்னையில் நடைபெறுகிறது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்க உள்ளனர்.

இதுதொடர்பாக அந்த அமைப்பின் உறுப்பினரும் மருத்துவருமான எஸ்.சுரேஷ், மரபியல் மருத்துவர் பீனா ஆகியோர் கூறியதாவது:

இந்தியாவில் சுமார் 7 கோடி பேர் அரிய வகை நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோய்கள் அரிய வகை நோய்களாக இருக்கின்றன.

இந்த நோய்கள் குறித்து பொதுமக்களிடம் போதிய அளவில் விழிப்புணர்வு இல்லாமல் உள்ளது. அதனால், அவர்கள் அடுத்தடுத்து மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் தெரிவதில்லை.

▼ பெசன்ட்நகரில் உள்ள அக்கார்டு பள்ளி அருகே இந்த ஓட்டம் தொடங்கி, சுமார் 7 கிமீ வரையில் சென்று முடிவடையும்.

இதுதொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஆலோசனை வழங்குதல், உதவிகள் வழங்குதல் போன்ற பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். அந்த வகையில், ஆண்டுதோறும் விழிப்புணர்வு ஓட்டத்தை நடத்தி வருகிறோம்.

**'ரேஸ் ஃபர் செவன்'**

இதற்கிடையே, இந்த ஆண்டு சென்னையில் 2-வது முறையாக, வரும் மார்ச் 1-ம் தேதி பெசன்ட் நகரில் 'ரேஸ் ஃபர் செவன்' என்ற பெயரில் விழிப்புணர்வு ஓட்டம் நடத்த உள்ளோம். நாட்டில் உள்ள 7 ஆயிரம் அரிய வகை நோய்களை குறிக்கும் வகையில் இவ்வாறு பெயரிட்டுள்ளோம். பெசன்ட்நகரில் உள்ள அக்கார்டு பள்ளி அருகே இந்த ஓட்டம் தொடங்கி, சுமார் 7 கிமீ வரையில் சென்று முடிவடையும்.

இந்தப் பேரணியில் பள்ளி மாணவர்கள், மருத்துவம் சார்ந்த அமைப்புகள், அரிய வகை நோய்களால் பாதிக்கப்பட்டோர் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

அரிய வகை நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவ உதவிகளை செய்ய தனியார், அரசு நிறுவனங்கள் முன்வர வேண்டும். மேலும், அரிய வகை நோய்களை வரும்முன் தடுப்பதற்கான மருத்துவ சோதனைகளை விரிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்த நிகழ்வின்போது விழிப்புணர்வு ஓட்டத்துக்கான போஸ்டர்கள் வெளியிடப்பட்டன. அரிய நோய்களுக்கான அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எஸ்.சுதாகரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

டிஎன்பிஎஸ்சி தேர்வு முறைகேடு விவகாரம்

# இடைத்தரகர் ஜெயக்குமார், ஊழியர் மீண்டும் கைது

■ சென்னை

இடைத்தரகர் ஜெயக்குமார், டிஎன்பிஎஸ்சி ஊழியர் ஓம்காந்தன் ஆகிய இருவரையும் கிராம நிர்வாக அலுவலர் தேர்வில் மோசடி செய்ததாக 3-வது முறையாக மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டிஎன்பிஎஸ்சியின் குரூப்-2, குரூப்-2 ஏ, குரூப்-4 தேர்வுகளில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக சிபிசிஐடி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்குகளில் இதுவரை 51 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குரூப்-4 தேர்வில் இடைத்தரகராக செயல்பட்டதாக ஜெயக்குமார், மோசடிக்கு உதவி செய்ததாக டிஎன்பிஎஸ்சி அலுவலக பணியாளர் ஓம்காந்தன் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டனர். இருவரும் தற்போது புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இருவரும் 2018-ம் ஆண்டு நடந்த குரூப்-2 மற்றும் குரூப்-2 ஏ தேர்வுகளிலும் பணம் வசூல் செய்து மோசடியில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து இருவர் மீதும் மேலும் 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கடந்த 18-ம் தேதி 2-வது முறையாக கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே, இடைத்தரகர் ஜெயக்குமார், டிஎன்பிஎஸ்சி பணியாளர் ஓம்காந்தன் ஆகியோர் 2016-ம் ஆண்டு நடந்த கிராம நிர்வாக அலுவலர் தேர்விலும் மோசடி செய்திருப்பது சிபிசிஐடி போலீஸாரின் விசாரணையில் தெரியவந்தது. இதைத் தொடர்ந்து 2 பேர் மீது மீண்டும் வழக்கு பதிவு செய்து 3-வது முறையாக அவர்களை சிபிசிஐடி போலீஸார் நேற்று கைது செய்தனர்.

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு

# மியாட் மருத்துவமனையில் புதிய தொழில்நுட்பம்

■ சென்னை

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தும் புதிய தொழில்நுட்பமும், பிரத்யேக கருவியும் நாட்டிலேயே முதல்முறையாக சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உறுப்பு மாற்று சிகிச்சையைப் பொருத்தவரை சிறுநீரகம், விழித்திரைக்கு அடுத்தபடியாக கல்லீரல்களே அதிக அளவில் தானமாகப் பெறப்பட்டு பயனாளிகளுக்கு பொருத்தப்பட்டு வருகின்றன. ஆனால், கல்லீரலை தானமாக அளிக்க முன்வரும் பலருக்கும் கல்லீரல் கொழுப்பு பாதிப்பு அதிகம் இருக்கிறது. இதனால், கல்லீரல் மாற்று சிகிச்சைக்கு தகுதியான கொடையாளிகள் கிடைப்பதில் சிரமம் உள்ளது.

**கலந்துரையாடல்**

இந்த சூழலில், 30 சதவீதம் வரை கொழுப்பு பாதிப்பு உள்ள கல்லீரலையும் உறுப்பு மாற்று சிகிச்சையில் பயன்படுத்தும் தொழில்நுட்பம் குறித்த கலந்துரையாடல் சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் நேற்று நடந்தது.

இதில், பிரிட்டனில் உள்ள குயின் எலிசபெத் மருத்துவமனையின் கல்லீரல் அறுவை சிகிச்சை நிபுணர் ஆண்ட்ரியா ஸ்கிலீகல், மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் துறை முதுநிலை மருத்துவர் இளங்கோ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.




▲ கல்லீரல் பாதிப்புகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் குறித்த கலந்துரையாடல் சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது. பிரிட்டனின் குயின் எலிசபெத் மருத்துவமனை கல்லீரல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஆண்ட்ரியா ஸ்கிலீகல், மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் துறை முதுநிலை மருத்துவர் டாக்டர் இளங்கோ உள்ளிட்டோர் பங்கேற்றனர். படம்: ஆர்.ரகு

கலந்துரையாடலில் அவர்கள் கூறியதாவது:

**கொழுப்பு பாதிப்பு இருந்தால்**

மனித உடலில் இருந்து சிறுநீரகங்கள், கல்லீரலை வெளியே எடுத்த பிறகு, குறிப்பிட்ட கால வரம்பு வரை, அதிலும் குறிப்பாக சில மருத்துவ தொழில்நுட்பங்களின் உதவியுடன்தான் அவற்றை உயிர்ப்புடன் பாதுகாக்க முடியும். கல்லீரலை பொருத்தவரை கொழுப்பு பாதிப்பு இருந்தால், அதை வெளியே எடுத்து பாதுகாத்தாலும் பயனாளிகளுக்கு பொருத்த முடியாத நிலை இருந்தது.

இந்த சூழலில்தான் 'ஹைப்போ தெர்மிக் ஆக்சிஜனேட்டட் பெர்ஃப்யூஷன் (ஹோப்)' எனப்படும் நவீன தொழில்நுட்பமும், அதற்கான பிரத்யேக கருவியும் உலக அளவில் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இந்தியாவில் முதல்முறையாக இந்த தொழில்நுட்பம் மற்றும் கருவியை மியாட் மருத்துவமனை அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய தொழில்நுட்பம் மூலம் 96 சதவீதம் கல்லீரல், சிறுநீரகங்களை துல்லியமாக பாதுகாத்து வெற்றிகரமாக பயனாளிகளுக்கு பொருத்த முடியும். இந்த தொழில்நுட்பம் மற்றும் கருவியை கையாள மருத்துவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

டெல்லி கலவரம்

# கவுன்சிலர் மீது கொலை வழக்கு

■ புதுடெல்லி

டெல்லி கலவரத்தில் உளவுத் துறை அதிகாரி கொல்லப்பட்டது தொடர்பாக ஆம் ஆத்மி கட்சி கவுன்சிலர் மீது போலீஸார் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர்.

டெல்லியில் நடந்த கலவரத்தின்போது உளவுத்துறை அதிகாரி அன்கிட் சர்மா என்பவர் கொல்லப்பட்டார். அவரை ஆம் ஆத்மி கவுன்சிலர் முகமது தாஹிர் உசேன் தலைமையிலான கும்பல் கடத்திச் சென்று கொலை செய்ததாக அன்கிட் சர்மா குடும்பத்தினர் குற்றம்சாட்டினர். இது தொடர்பாக தயாள்பூர் காவல் நிலையத்தில் முகமது தாஹிர் உசேன் மீது புகார் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் மீது போலீஸார் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர். இதனிடையே, குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் விசாரணை முடியும்வரை கவுன்சிலர் முகமது தாஹிர் உசேன் கட்சியில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்படுவதாகவும் ஆம் ஆத்மி அறிவித்துள்ளது.

## நகரில் நடப்பவை

- ஸ்ரீஅனந்த பத்மநாபஸ்வாமி கோயிலில் பிரம்மோற்சவம் தொடக்கம்: 2–வது பிரதான சாலை, காந்தி நகர், அடையாறு. காலை 7.
- திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் ஸ்ரீராமர் தெப்பம். மாலை 6.30.
- காஞ்சி காமகோடி குழந்தைகள் நல அறக்கட்டளை மருத்துவமனையில் பாலவிநாயகர் கோயில் கும்பாபிஷேகம்: ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், அறக்கட்டளை தலைவர் ஏ.சி. முத்தையா பங்கேற்பு. நுங்கம்பாக்கம். காலை 7.30.
- அரசியலமைப்பு பாதுகாப்பு மன்றம் சார்பில், 'அரசியலமைப்பு உரிமைகளை பாதுகாப்பதில் உள்ள சவால்கள்' என்ற கருத்தரங்கம்: 'இந்து' என்.ராம், மூத்த வழக்கறிஞர் வைகை, எம்.ஜி.தாவூத் மியாகான் பங்கேற்பு. மியூசிக் அகாடமி, டிடிகே சாலை. மாலை 6.
- பிரின்ஸ் ஸ்ரீவாரி மேல்நிலைப் பள்ளி 8–வது ஆண்டு விழா: விவேகானந்தா கல்லூரி பேராசிரியர் ஜெ.காந்திராஜ், இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரெஹானா பங்கேற்பு. மடிப்பாக்கம் – புழுதிவாக்கம். மாலை 4.35.



காஞ்சிபுரம் கோயிலில் வடகலை, தென்கலை பிரச்சினை

# இருதரப்பும் இணைந்து வழிபாடு நடத்த சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

● மீறினால் போலீஸில் புகார் அளிக்கவும் அறிவுறுத்தல்

■ சென்னை

காஞ்சிபுரம் கோயிலில் வடகலை, தென்கலை பிரச்சினை தொடர்பாக இருதரப்பும் இணைந்து வழிபாடு நடத்த வேண்டும் என்றும், மீறினால் போலீஸில் சட்டரீதியாக புகார் அளிக்க வேண்டும் என்று கோயில் உதவி ஆணையருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த டி.ஏ.ரங்கநாதன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், "காஞ்சிபுரம் சந்நிதி தெருவில் உள்ள ஸ்ரீதேவராஜ சுவாமி கோயிலில் வேத மந்திரங்கள் மற்றும் பிரபந்தங்களை யார் முதலில் பாடுவது என்பதில் வடகலை மற்றும் தென்கலை பிரிவினருக்கு இடையே மோதல் ஏற்பட்டு வருகிறது.

இதனால் கோயில் திருவிழா சமயங்களில் பக்தர்கள் பெரிதும் அவதியடையும் சூழல் ஏற்படுகிறது. நிம்மதி தேடி கோயிலுக்கு வருபவர்கள் இப்பிரச்சினையால் நிம்மதியை இழக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்படுகின்றனர்.

இதுதொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் கடந்த 1915 மற்றும் 1969 ஆகிய ஆண்டுகளில் தென்கலை பிரிவினர் முதலில் பிரபந்தங்கள் பாடவும், வடகலை பிரிவினர் அடுத்து வேத மந்திரங்கள் முழங்கவும் உத்தரவிட்டு இருந்தது. அந்த உத்தரவை அமல்படுத்தாத அதிகாரியை நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தின்கீழ் தண்டிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம் முன்பாக நடந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் டி.எஸ்.ராமசுவாமியும், அறநிலையத் துறை சார்பில் சிறப்பு அரசு ப்ளீடர் எம்.கார்த்திகேயனும் ஆஜராகி வாதிட்டனர்.

இந்த வழக்கில் நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம் பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

**சுமுகமான வழிபாடு இல்லை**

கோயில்களில் மந்திரங்கள் மற்றும் பிரபந்தம் பாடி வழிபாடு நடத்துவது என்பது வழிபாட்டு உரிமை. அதை நீதிமன்றம் தடுக்க முடியாது. இரு பிரிவினருக்கு இடையே ஏற்பட்டுள்ள இப்பிரச்சினையால் கடந்த 2 ஆண்டுகளாக சுமுகமான வழிபாடு இல்லை.

அதேபோல கோயில் வழிபாட்டுத் தலங்களில் தனிநபர் பகை அல்லது எதேச்சதிகாரத்துக்கும் இடம் கிடையாது. நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து 50 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், நீதிமன்ற அவமதிப்பாக எடுத்துக் கொள்ள இடமில்லை.

மேலும், கோயில் மற்றும் கோயிலுக்கு வரும் பக்தர்களின் நலன் கருதி கீழ்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறேன். கோயில் நிர்வாக அதிகாரி பூஜை நேரங்களில் முதலில் தென்கலை பிரிவினரை சிலைக்கு முன் பக்கமாக அழைக்க வேண்டும். அவர்களை ஸ்ரீசைலேச தயா பாத்ரத்தின் முதல் 2 வரிகளை மட்டும் பாட அனுமதிக்க வேண்டும். அதன்பிறகு வடகலை பிரிவினரை அழைத்து ஸ்ரீ ராமானுஜ தயா பாத்ரத்தில் உள்ள முதல் 2 வரிகளை பாட அனுமதிக்க வேண்டும்.

அதன்பிறகு தென்கலை மற்றும் வடகலை பிரிவினர் இருவரும் ஒன்றாக இணைந்து பிரபந்தம் பாட வேண்டும். பிரபந்தம் பாடிய பிறகு, இறுதியாக தென்கலையினர் மணவாள மாமுனிகள் வாழித் திருநாமம் பாட வேண்டும்.

அடுத்து, வடகலையினர் தேசிகன் வாழித் திருநாமம் பாடி பூஜையை நிறைவு செய்ய வேண்டும். ஒருவேளை இந்த உத்தரவுப்படி ஒருதரப்பு மறுப்பு தெரிவித்தால் பாட முன்வரும் மற்றொரு தரப்பை செயல் அதிகாரி அனுமதிக்க வேண்டும்.

இந்த உத்தரவை இருதரப்பும் மதித்து நடக்க வேண்டும். மீறி சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தினால் கோயில் நிர்வாக அதிகாரி சம்பந்தப்பட்டவர்கள் மீது போலீஸில் சட்டரீதியாக புகார் அளிக்க வேண்டும்.

போலீஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த உத்தரவை வரும் மார்ச் 1-ம் தேதி முதல் அமல்படுத்த வேண்டும். இவ்வாறு நீதிபதி உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

'இந்தியன் - 2' படப்பிடிப்பில் நடந்த விபத்துக்கு

# அனைவரும் கூட்டாக பொறுப்பேற்க வேண்டும்

● கமல்ஹாசனின் கடிதத்துக்கு லைகா நிறுவனம் பதில்

■ சென்னை

'இந்தியன்-2' படப்பிடிப்பின்போது நடந்த துயர சம்பவம் துரதிர்ஷ்டவசமானது. இயற்கையாக நடந்த இதுபோன்ற சம்பவங்களுக்கு நாம் அனைவரும் கூட்டாகப் பொறுப்பேற்று கையாள வேண்டியது அவசியம் என்று கமல்ஹாசனின் கடிதத்துக்கு லைகா நிறுவனம் பதில் அளித்துள்ளது.

சென்னை பூந்தமல்லி சாலையில் உள்ள ஈவிபி வளாகத்தில் கடந்த 19-ம் தேதி 'இந்தியன்-2' படப்பிடிப்பின்போது கிரேன் சரிந்து விபத்து ஏற்பட்டது. இதில் 3 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்கு கமல் தரப்பில் ரூ.1 கோடியும், லைகா நிறுவனம் தரப்பில் ரூ.2 கோடியும் இழப்பீடு அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், படப்பிடிப்பு குழுவினருக்கு தயாரிப்பு நிறுவனம் வழங்கவேண்டிய பாதுகாப்பு, குடும்பத்தினருக்கான உதவிகள் உள்ளிட்டவை குறித்து தெளிவான விளக்கம் கேட்டு லைகா நிறுவனத்துக்கு கமல் 2 நாட்களுக்கு முன்பு ஒரு கடிதம் அனுப்பினார். இதற்கு பதில் அளித்து கமலுக்கு லைகா நிறுவனம் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

சம்பவம் குறித்து கேள்விப்பட்டதும் லைகா தலைவர் சுபாஸ்கரனும், மூத்த நிர்வாகியும் உடனடியாக விமானத்தைப் பிடித்து சென்னை வந்தனர். மருத்துவமனைக்கு சென்று, உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர். சவக் கிடங்குக்கு நீங்கள் சென்று பார்த்த 15 நிமிடங்களில் அங்கு வந்த நாங்கள், அதன் பிறகு உங்கள் அலுவலகத்தோடு தொடர்ந்து பேசி வந்தோம். அந்த தருணத்தில், இறந்தவர்களின் குடும்பத்துக்கு ரூ.2 கோடியும், காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை செலவை ஏற்றுக் கொள்வதாகவும் சுபாஸ்கரன் அறிவித்தார்.

இவை அனைத்தும் உங்கள் கடிதம் எங்களுக்கு கிடைப்பதற்கு முன்பே நடந்தவை. துரதிர்ஷ்டவசமாக இவை யாவும் 22-ம் தேதிக்கு முன்பு உங்கள் கவனத்துக்கு வராமல் போய்விட்டது.

இயற்கையாக நடந்த இது போன்ற சம்பவங்களுக்கு அனைவரும் கூட்டாகப் பொறுப்பேற்று, கையாள வேண்டியதும், திருத்தப்பட வேண்டியதும் அவசியம்.

அனுபவம், திறமை வாய்ந்த சிறந்த நடிகரும், தொழில்நுட்பக் கலைஞருமான உங்களது மற்றும் முன்னணி இயக்குநர் ஷங்கரின் சிறந்த ஈடுபாடு, பாதுகாப்பு அம்சங்கள் மீதான எங்கள் நம்பிக்கையை இரட்டிப்பாக்குகிறது. ஒட்டுமொத்தப் படப்பிடிப்பும் உங்கள் இருவரது கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும்தான் இருந்தது.

படத்தின் தயாரிப்புக்கு மிகப் பெரிய தொகையை முதலீடு செய்துள்ளோம். எனவே பாதுகாப்பு அம்சங்களில் நாங்கள் சமரசம் செய்யமாட்டோம் என்பதை நீங்கள் பாராட்டுவீர்கள்.

படப்பிடிப்பு தளத்தில் பணிபுரியும் ஒவ்வொரு ஊழியருக்கும் ஒரு பிரபல காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளோம். படப்பிடிப்புத் தளத்தின் பாதுகாப்பு அம்சங்களை உறுதிசெய்ய, அனுபவம் வாய்ந்த இருவரை பணியமர்த்தியுள்ளோம். இவர்கள் இருவரும்தான் மொத்த படத்தின் தயாரிப்பு பணிகள், பாதுகாப்பு அம்சங்களுக்கு பொறுப்பாளர்கள். அவர்களிடம் கூடுதல் விளக்கங்கள் கேட்டுள்ளோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கத்தி முனையில் வழிப்பறி சிசிடிவி காட்சிகள் அடிப்படையில் ரவுடி உட்பட 3 பேர் கைது

■ சென்னை

சிசிடிவியில் பதிவான காட்சிகளின் அடிப்படையில், வழிப்பறியில் ஈடுபட்டதாக ரவுடி உட்பட 3 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

கொடுங்கையூரைச் சேர்ந்தவர் சங்கர் (47). இவர் அதே பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில் மேற்பார்வையாளராக உள்ளார்.

12-ம் வகுப்பு படித்து வரும் இவரது மகன், மூலக்கடை பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்தபோது ஆட்டோவில் வந்த 2 பேர் கத்திமுனையில் மாணவனின் செயினை பறித்துக் கொண்டு தப்பினர்.

இதுகுறித்து மாதவரம் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்தனர். முதல்கட்டமாக சிசிடிவியில் பதிவான காட்சிகள் அடிப்படையில், மாணவனின் செயினை பறித்துச் சென்றதாக பெரிய பாளையத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் பாலாஜி (24), அவரது நண்பர் கொடுங்கையூர் சரண் (19) ஆகிய 2 பேரை கைது செய்துள்ளனர்.

இதேபோல் கண்ணகி நகரில் வழிப்பறியில் ஈடுபட்டதாக குற்றப் பின்னணி கொண்ட கண்ணகி நகரைச் சேர்ந்த ராஜன் (24) என்பவரை கண்ணகி நகர் போலீஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.




▶▶ அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் (ஏஐசிடிஇ) சார்பில் நடத்தப்பட்ட தேசிய அளவிலான போட்டியில் எஸ்ஆர்எம் கட்டிடக் கலை பொறியியல் மாணவர்களான அரவிந்த், சங்கர் கந்தசாமி, திவ்யா, காவியா ஆகியோர் அடங்கிய எஸ்ஆர்எம் ஸ்டேமிலைசர்ஸ் அணி முதலிடம் பிடித்து 'சத்ர விஷ்வகர்மா 2019' விருதை பெற்றது. இவ்விருதை மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் வழங்கினார். வெற்றி பெற்ற மாணவர்களை கட்டிடக் கலை பொறியியல் பிரிவு பேராசிரியர் செழியன் பாராட்டினார். இப்போட்டியில் மொத்தம் 6,676 குழுக்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.


GOVERNMENT OF TAMIL NADU

**THANJAVUR CITY MUNICIPAL CORPORATION**

**THANJAVUR SMART CITY LIMITED**

Bid Notice No. 10181/2019/MCE4 **RE -TENDER NOTICE** Dated. 24.02.2020

Sealed Tenders are invited by The Managing Director & Commissioner, Thanjavur City Municipal Corporation from the Registered Contractors E- submission is also permitted, for the following works **upto 3.00 PM** on **13.03.2020.** The Tenders will be opened by the Corporation Commissioner (or) his authorized official in the Corporation Office on the same day at **3.30 P.M.** If the office happens to be closed on the date of receipt of the Tender specified, the Tender will be opened on next working day. The Contractor who wish to participate in the Tender may download the Tender documents through **https://tntenders.gov.in** by using E.Token / Digital Signature Cards on or before **12.03.2020** upto **3.00 P.M.** Any other information's may be obtained from the Corporation Executive Engineer, Thanjavur at the above office during office hours. The Managing Director & Corporation Commissioner has every right to cancel / postpone the Tender in view of Administrative reasons.

| Sl. No. | Name of the Work | Estimate Cost (Rs. in Lakhs) | Earnest Money Deposit (Rs.) | Contractor Class |
|---|---|---|---|---|
| 1. | Renovation and Conservation of 3 Thermutti's | **50.00** | **50,000/-** | **Class -II** |

DIPR/1113/TENDER/2020 **Managing Director, Thanjavur Smart City Ltd.,**

தமிழ்நாடு அரசு

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

**மின் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். அ4/5489/2018 நாள்: 26.02.2020.**

1. முழுமையான விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. திருநெல்வேலி மாவட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் ஒப்படைக்கப்பட்ட மானிய வருவாய் திட்டம் (SCPAR) 2019-20 - அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் - புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் கட்டும் பணி மதிப்பீடு **ரூ.290.78 இலட்சத்திற்கான** மின் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை (இரு உறைமுறையில்) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தபுள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** என்ற இணைய தள முகவரியில் **02.03.2020** முதல் **31.03.2020** வரை இலவசமாக எடுத்துக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்த ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் | **31.03.2020** பிற்பகல் **3.00** மணி வரை |
| 2. | ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | **31.03.2020** பிற்பகல் **4.00** மணி |

செ.ம.தொ.இ./1118/ஒப்பந்தப்புள்ளி/2020 **திட்ட இயக்குநர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி**


# காசிமேட்டில் ரவுடி கொலை

● கொலையாளிகளை பிடிக்க தனிப்படை

■ சென்னை

காசிமேடு ரவுடி கொலை வழக்கில் தலைமறைவாக உள்ள குற்றவாளிகளைக் கைது செய்ய போலீஸார் தனிப்படை அமைத்துள்ளனர்.

காசிமேடு, சிங்காரவேலன் நகர், 2-வது தெருவைச் சேர்ந்தவர் திவாகரன்(28). இவர் மீது 3 கொலை முயற்சி வழக்கு உட்பட பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு காசிமேடு கடல் உணவு வியாபாரிகள் நல சங்கம் எதிரே இவர் நடந்து சென்றபோது, இருசக்கர வாகனங்களில் வந்த 8 பேர் கும்பல் திவாகரனை அரிவாளால் வெட்டி கொலை செய்துவிட்டு தப்பியுள்ளது.

தகவல் அறிந்து காசிமேடு காவல் நிலைய போலீஸார் விரைந்து வந்தனர். திவாகரனின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர்.

இதைத் தொடர்ந்து தலைமறைவாக உள்ள கொலையாளிகளைப் பிடிக்க போலீஸார் தனிப்படை அமைத்துள்ளனர். முன்விரோதத்தில் கொலை செய்யப்பட்டாரா? ரவுடிகள் மோதல் காரணமா? என்ற கோணங்களில் விசாரணை நடந்து வருகிறது.

**6 பேர் சரண்**

மேலும், சம்பவம் நடைபெற்ற பகுதிகளில் சிசிடிவி கேமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்து கொலையாளிகளை அடையாளம் காணும் பணியும் நடைபெற்று வருவதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையே, கொலையில் தொடர்புடைய 6 பேர் நேற்று சரணடைந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.


அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வழியாக அனுப்பலாம்.

**மின்னஞ்சல் முகவரி:**
**press.release@hindutamil.co.in**
**தொலைநகல் (FAX) எண்:**
**044-28552215**





▶▶ பொன்மார் பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பத்மாவதி பொறியியல் கல்லூரி, டாக்டர் கே.வாசுதேவன் பொறியியல் தொழில்நுட்ப கல்லூரி ஆகியவற்றின் பட்டமளிப்பு விழாவில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக துணைவேந்தர் வி.முருகேசன், தமிழ்நாடு முன்னாள் தேர்தல் ஆணையர் டி.சந்திரசேகரன், பிரின்ஸ் கல்வி குழும தலைவர் கே.வாசுதேவன், துணைத் தலைவர்கள் வா.விஷ்ணுகார்த்திக், வா.பிரசன்னா வெங்கடேஷ், கல்லூரி முதல்வர்கள் வி.மகாலட்சுமி, டி.சுந்தர் செல்வின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பிரின்ஸ் கல்லூரிகள் பட்டமளிப்பு விழா

● 600-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டம் பெற்றனர்

■ சென்னை

பொன்மார் பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பத்மாவதி பொறியியல் கல்லூரியின் 15-ம் ஆண்டு பட்டமளிப்பு விழா, டாக்டர் கே.வாசுதேவன் பொறியியல் தொழில்நுட்ப கல்லூரியின் 7-ம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

பிரின்ஸ் கல்விக் குழும தலைவர் கே.வாசுதேவன் அனைவரையும் வரவேற்றார். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக துணைவேந்தர் வி.முருகேசன், தமிழ்நாடு முன்னாள் தேர்தல் ஆணையர் டி.சந்திரசேகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று 600 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள், சான்றிதழ்களை வழங்கினர்.

பின்னர், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழக துணைவேந்தர் முருகேசன் பேசியதாவது:

பொறியியல் மாணவர்கள் நாட்டின் இன்றியமையாத தேவைகளான இயற்கை விவசாயம், நீர் மேலாண்மை, சுற்றுச்சூழல், பாதுகாப்பு, சுகாதாரம், பேரிடர் மேலாண்மை, எரிசக்தி போன்றவற்றில் தன்னிறைவு அடைய தேவையான தொழில்நுட்பங்களில் ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும். புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பை வழங்க வேண்டும்

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக துணைத் தலைவர்கள் வா.விஷ்ணு கார்த்திக், வா.பிரசன்னா வெங்கடேஷ் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்தனர். கல்லூரி முதல்வர்கள் வி.மகாலட்சுமி, டி.சுந்தர் செல்வின் முன்னிலை வகித்தனர். நிர்வாக அதிகாரிகள் கே.பார்த்தசாரதி, எ.என். சிவப்பிரகாசம், எம்.தருமன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ஏடிஎம் உடைப்பு 2 பேர் கைது

■ சென்னை

சென்னை பாரிமுனை பகுதியில் உள்ள பூக்கடை ரத்தன்பஜார் சாலையில் தனியார் வங்கி ஏடிஎம் உள்ளது. கடந்த 23-ம் தேதி இரவு இந்த மையத்துக்கு வந்த 2 இளைஞர்கள் ஏடிஎம் இயந்திரத்தை உடைத்துள்ளனர்.

இதையடுத்து, பாதுகாப்பு கருவி, எச்சரிக்கை ஒலி எழுப்பியதைக் கேட்டு, அக்கம் பக்கத்தினர் வந்தனர். அதற்குள், 2 பேரும் அங்கிருந்து தப்பிஓடினர்.

இதுகுறித்து பூக்கடை போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில், அவர்கள் இருவரும் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தை சேர்ந்த சுதாகர் (27), சூரியா (25) என்பது தெரியவந்தது. இருவரையும் போலீஸார் நேற்று கைது செய்தனர்.


வருந்துகிறோம்!

இரங்கல்

ஆண்டு நினைவு நாள்

1ST ANNIVERSARY



In Ever Loving Memory of
Smt.K.ANJALI
28.02.2019

K.Karunanidhi(Husband)
K.Anbu(Son), K.Kavitha(Daughter)
K.Vijay(Son), P.Santhanakrishnan
P.Vijayalakshmi, S.Santhanashivani
S.Santhanavarshini
A.Kayal, A.Pugazh

Phone: 9444465876





▶▶ அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்து சிந்திக்கவும், புதுமையான தானியங்கி ரோபோக்களை மாணவர்கள் உருவாக்கம் செய்யும் வகையிலும், எஜுடெக் இந்தியா மற்றும் சென்னை ஓலஜ் டெக் அகாடமி இணைந்து தென்னிந்தியாவுக்கான 'முதல் லெகோ லீக் தேசிய சாம்பியன்ஷிப் 2019-20' போட்டி நடத்தப்பட்டது. இதில் தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 50 அணிகள் பங்கேற்றன. இப்போட்டியில் வேலம்மாள் சர்வதேசப் பள்ளி அணிக்கு 'ரைசிங் ஸ்டார் விருது', 'பெஸ்ட் ரோபோ விருது' ஆகியவை கிடைத்தன. இந்தியா மற்றும் யுஎஸ்ஏ எஜுடெக் இயக்குநர் கே.ஆர்.சஜீவ், வேலம்மாள் கல்வி அறக்கட்டளை இயக்குநர் எம்.வி.எம்.சசிகுமார், வேலம்மாள் அறிவுப் பூங்கா முதன்மை முதல்வர் கோதண்டராமன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு விருதுகள், சான்றிதழ்களை வழங்கினர்.


இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.



# வரி விளம்பரங்கள்

**சுய செய்தி**

**பெயர்மாற்றம்**

I, S. Kamali, spouse of No 7783260P, Rank L/NK(MP), Name Sampath N of Dakshin Bharat Area Provost Unit presently residing at Vill-Billakottai, Post-Panagamuttlu, Tehsil - Krishnagiri Dist - Dharmapuri, State - Tamilnadu, Pin-635106 changed my name from S. Kamali to KAMALI SAMPATH, DOB : 20 JUN, 1996 . Affidavit dt 14 Feb 2020, V. Ramalingam, Advocate & Notary.

**CHANGE OF NAME**

I, **M. RADHIKA**, W/o. M. Madhubabu, Aged about 31 years, Residing at No. 107, Old Madaras Road, Behind RMZ, Benniganahalli, Bengaluru-560 016, have changed my name from **T. DORASANAMMA** to **M. RADHIKA.** Vide affidavit dated 25.02.2020 sworn before Advocate & Notary D.G. Shanthappa, Bangalore.

I, ZAHRA SEYAD mother of MOHAMMED ALI REZA SEYADU holding Sri Lankan Passport No: N4160527 Issued at DUBAI on 23/07/2010 Permanent Resident of HEKITHA,WATTALA-COLOMBO-SRI LANKA and presently Resident of VILLA 8 22A ST ALTAWAR 1 DUBAI UAE do hereby change name of my minor child MOHAMMED ALI REZA SEYADU holding Indian Passport No: P6265056 issued at DUBAI on 24/10/2016 from MOHAMMED ALI REZA SEYADU to MOHAMMED ALI REZA with immediate effect.

I, ZAHRA SEYAD mother of RIDA FALAK SEYADU holder of Sri Lankan Passport No:N4160527 issued at DUBAI on 23/07/2010 Permanent Resident of HEKITHA,WATTALA-COLOMBO-SRI LANKA and presently Resident of VILLA 8 22A ST ALTAWAR 1 DUBAI UAE do hereby change name of my minor child RIDA FALAK SEYADU holding Indian Passport No:M6063465 issued at DUBAI on 22/02/2015 from RIDA FALAK SEYADU to RIDA FALAK with immediate effect.

**தொழில்**

**டீலர்கள் தேவை**

SONA BELT 3X3 தினம் ரூ.7,500; XXX BELT 3X3 தினம் ரூ.7,500 டெலிவரி ஏஜென்ட். Ct: 8940589268

**ஒப்பந்தப்புள்ளி**

**தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

CIN No. L66000MH1919GOI000526
(மத்திய அரசாங்கத்திற்கு சொந்தமானது)
சென்னை மண்டல அலுவலகம்
3ம் தளம், தேவா டவர்ஸ்,
770, அண்ணாசாலை, சென்னை-2
Ph: 044-28503100; Fax: 23456713

ஒப்பந்தப்புள்ளி எண்: சிட்டிபேங்க் DO/712500/AC/11/2019-20
ஒப்பந்தப்புள்ளி வேலை: சிட்டிபேங்க் மண்டல அலுவலகம் 712500-வில் குளிர்சாதனம் மற்றும் மின்சாரப்பணிகள் (குளிர்சாதனம் மற்றும் மின்சாரப்பணிகள்)
தோராய வேலை மதிப்பீடு ரூ. 6,66,750/- வரி தனி
முன்வைப்புத் தொகை ரூ. 13,335/-

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி தங்களது சிட்டிபேங்க் கோட்ட அலுவலகம் (712500), நெ.260, அலைடு மவுண்ட் காசா பிளான்சா, 2வது தளம், அண்ணாசாலை, சென்னையில் புதிய குளிர்சாதனம், மின்சாரப்பணிகளுக்கு ஒப்பந்தக் காரர்களை மின் அணு ஒப்பந்தப் புள்ளி முறையில் தேர்வு செய்ய உள்ளது.

சென்னையில் உள்ள விருப்பமுள்ள ஒப்பந்தக்காரர்கள் கம்பெனியின் மின்னணு ஒப்பந்த முறையில் https://newindia.eproc.in தங்களது ஒப்பந்தப்புள்ளி விபரங்களை சமர்ப்பிக்கலாம்.

கம்பெனியின் மின் ஒப்பந்தநிலை ஒப்பந்தப்புள்ளி பற்றிய மேலும் விவரங்கள் அறிய எங்களது கீழ்கண்ட இணையதளத்தில் சென்று தகவல் அறிந்து கொள்ளலாம். www.newindia.co.in

ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 09/03/2020 மதியம் 1மணி வரை.

மண்டல மேலாளர்
சென்னை மண்டலம்

**பொது**

**சுற்றுலா**

தினசரி திருப்பதி/ ஷிரடி தர்சன் Kerala, Goa, Singapore Packages. Sri Balaji 9884053380

6 நாள் ஷிரடி-மார்ச் 8, 22, 29 பண்டரிபுரம், மந்திராலயம் ஏப். 5,12, 19, 26, மே 3, 10, 17, 24, 31
8 நாள் காசி, கயா-மார்ச் 16,30 அலகாபாத்,- ஏப்.6,13,20,27, மே 4,11,18,25
11 நாள் காசி, கயா-மார்ச் 20 டெல்லி, ஆக்ரா, அவுரா - ஏப். 17, மே 1, 11, 22
16 நாள் காசி,அயோத்தி-ஏப். 24
16 நாள் நேபாள், முக்திநாத், காசி ஏப். 19, மே 3,10,17,24, ஜூன் 14
14 நாள் நவஜோதிலிங்கம்-ஏப்.12
15 நாள் பஞ்சதுவாரகா-மார்ச் 10
7 நாள் கேரளா படகு வீடு - மே 18
11 நாள் கேங்டாக், டார்ஜிலிங் ஏப். 8, 15, 22, 29, மே 6, 13, 20, 27
14 நாள் சிம்லா, குளுமணாலி
14 நாள் காஷ்மீர்-மே 5, 14, 23
16 நாள் பத்ரிநாத், கேதார்நாத் கங்கோத்ரி, யமுனோத்ரி மே 3, 12, 18, 27, ஜூன் 2, 11
9 நாள் இலங்கை 4 நாள் கோவா
SRINIVASA TOUR
9710025326

காமதேனு
சந்தாதாரர் ஆக வேண்டுமா?
kamadenu.in/print-subscription
SMS: NKD <space> Pincode டைப் செய்து, 9773001174 என்ற எண்ணுக்கு அனுப்பவும்.


எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).



▲ பிரதமரின் 'மேக் இன் இந்தியா' என்ற திட்டத்தின் கீழ், மீஞ்சூர் அடுத்த காட்டுப்பள்ளியில் எல் அன்டு டி நிறுவனம் சார்பில் கட்டப்பட்ட, இந்திய கடலோர காவல் படைக்கான ஆழ்கடல் ரோந்து கப்பல் சேவையை தொடங்கிவைக்கிறார் மத்திய கப்பல் துறை இணையமைச்சர் மன்சுக் மண்டாவியா. உடன் கடலோரப் பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநர் கே. நடராஜன், கிழக்கு பிராந்திய ஐஜி எஸ்.பரமேஷ் உள்ளிட்டோர். படம்: எஸ்.ஆர்.ரகுநாதன்

# கடலோர காவல் படையின் ஆழ்கடல் ரோந்து கப்பல் சேவை

● மத்திய இணை அமைச்சர் தொடங்கி வைத்தார்

■ சென்னை

சென்னையை அடுத்த காட்டுப் பள்ளியில் இந்திய கடலோர காவல் படையின் 6-வது ஆழ்கடல் ரோந்து கப்பல் சேவையை மத்திய இணை அமைச்சர் மன்சுக் மண்டாவியா நேற்று தொடங்கி வைத்தார்.

இதுதொடர்பாக மத்திய பத்திரிகை தகவல் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பிரதமரின் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின்கீழ் பாது காப்பு அமைச்சகத்துக்கும், எல் அண்டு டி நிறுவனத்துக்கும் இடையே கடந்த 2015-ம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத் தின்படி, இந்திய கடலோரப் பாது காப்புப் படைக்கு தேவையான 7 ஆழ்கடல் ரோந்து கப்பல் களை கட்டுவதற்கான ஒப்பந்தம் அந்நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின்படி கட்டப் பட்ட 6-வது கப்பல் சேவை தொடக்க விழா காட்டுப்பள்ளியில் உள்ள எல் அண்டு டி கப்பல் கட்டும் நிறுவன வளாகத்தில் நேற்று நடை பெற்றது. அதில் மத்திய கப்பல் துறை இணை அமைச்சர் மன்சுக் மண்டாவியா பங்கேற்று, கப்பல் சேவையை தொடங்கி வைத்தார்.

**2,100 டன் எடை**

இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல், விரிவான பரிசோதனைகளுக்குப் பிறகு, அக்டோபர் மாதம் இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையில் பணியில் ஈடுபடுத்தப்படும். இந்த ரோந்து கப்பல், 98 மீட்டர் நீளம், 15 மீட்டர் அகலம் கொண்டது. அதன் மொத்த எடை 2,100 டன். இந்தக் கப்பல் 5 ஆயிரம் கடல் மைல் தொலைவுக்கு செல்லக் கூடியதாகும். தலா 9 ஆயிரம் கிலோ வாட் திறன் கொண்ட இரட்டை டீசல் இஞ்ஜின்களால் இக்கப்பல் இயக்கப்படும். இந்தக் கப்பல், குறைந்த எரிபொருள் செல வில் அதிகபட்சமாக மணிக்கு 26 கடல் மைல் வேகத்தில் செல்லும். இந்தக் கப்பலில் சி.ஆர்.என்-91 மற்றும் இரு 12.7 மிமீ துப்பாக்கிகள் பொருத்தப்பட்டிருப்பதுடன், இரட்டை இஞ்ஜின் பொருத்தப்பட்ட ஹெலிகாப்டர் தரையிறங்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

இவ்விழாவில் இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநர் கே. நடராஜன், கிழக்கு பிராந்திய ஐஜி எஸ்.பரமேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# திருவண்ணாமலையில் ராணுவ ஆள்சேர்ப்பு முகாம்

● 11 மாவட்ட இளைஞர்கள் பங்கேற்கலாம்

■ சென்னை

இந்திய ராணுவத்துக்கு ஆள் தேர்வு செய்வதற்கான சிறப்பு முகாம் திருவண்ணாமலையில் நடைபெற உள்ளது. இதில், சென்னை உள்ளிட்ட 11 மாவட்டங் களைச் சேர்ந்த இளைஞர்கள் பங்கேற்கலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்திய ராணுவத்தில் கிளார்க், ஸ்டோர் கீப்பர், டிரேட்ஸ்மேன், நர்சிங் அசிஸ்டென்ட், டெக்னிக் கல், பொதுப்பணி உள்ளிட்ட பல்வேறு பதவிகளுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதற்கான ஆட்சேர்ப்பு முகாம், திருவண்ணாமலையில் உள்ள அருணை பொறியியல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வரும் ஏப்.15-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை நடைபெறுகிறது.

இதில், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மற்றும் புதுச் சேரி மாநிலத்தைச் சேர்ந்த விண் ணப்பதாரர்கள் பங்கேற்கலாம்.

ஆன்லைன் மூலம் மட்டுமே (www.joinindianarmy.nic.in) இதற்கு விண்ணப்பிக்க வேண் டும். ஆன்லைன் மூலம் விண் ணப்பிக்கும் வசதி வரும் மார்ச் 1-ம் தேதி தொடங்கி 31-ம் தேதி நிறைவடையும். இத்தேர்வு முறை அனைத்தும் நியாயமாக வும், வெளிப்படைத் தன்மையுட னும் நடைபெறும். எனவே, வேலை வாங்கித் தருவதாகக் கூறி யாரா வது ஆசை வார்த்தைகள் கூறி மோசடியில் ஈடுபட்டால், அவர் களை நம்பி விண்ணப்பதாரர்கள் ஏமாற வேண்டாம் என்று பாது காப்புத் துறை பத்திரிகை அலுவல கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளம்பரங்களை வெளியிடுவதில் பொறுப்புணர்வு அவசியம்

● ஊடக நிறுவனங்களுக்கு 'இந்து' என்.ராம் வேண்டுகோள்

E-Paper

■ சென்னை

விளம்பரங்களை வெளியிடுவதில் ஊடக நிறுவனங்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவரும் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்று 'இந்து' என்.ராம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை நிருபர்கள் சங்கம் சார்பில் சென்னையில் நேற்று நடைபெற்ற, 'ஊடகத் துறையும் விளம்பர சர்ச்சைகளும்' என்ற கருத்தரங்கில் அவர் பேசியதாவது:

முக்கியமான பிரச்சினை களின்போது தமிழ் செய்தி சேனல் களில் செய்திகள், அலசல்கள், விவாதங்கள் சிறப்பாகவே உள் ளன. சில ஆங்கில செய்தி சேனல் களைப் போல உரத்த குரலில், உணர்ச்சிகளை தூண்டுவதாக இல்லாமல் மக்களுக்கு உண்மை களைச் சொல்ல வேண்டும். செய்தி யின் பின்னணியை ஆழமாக அலசு கிறார்கள். அந்த வகையில் தமிழ் செய்தி சேனல்கள் ஊடக நெறி முறைகளை பின்பற்றுகின்றன. இது மகிழ்ச்சி அளிக்கிறது.

விளம்பரங்களை வெளியிடும் போது ஊடக நிறுவனங்களும், அதில் சம்பந்தப்பட்ட அனைவரும் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியம். செய்தியின் உண்மைத்தன்மை, ஊடக நெறிகளுக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

இணையதளங்கள், சமூக ஊடகங்களில் எவ்வித நெறிமுறை களும் கட்டுப்பாடுகளும் இல்லா மல் விளம்பரங்கள் வருவதாக இங்கே பேசிய பலரும் குறிப் பிட்டார்கள். இது உண்மை. இணையதளங்களில் விளம்பரங் களை கட்டுப்படுத்துவது கடினமா னது. ஆனாலும், இணையதள விளம்பரங்களை நெறிமுறைப் படுத்த கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு என்.ராம் பேசினார்.

சென்னை நிருபர்கள் சங்கத் தின் தலைவர் ஆர். ரங்கராஜ் பேசும்போது, "தமிழ் செய்தி தொலைக்காட்சி நெறியாளர்களை கேலி செய்து வெளியான விளம் பரம் மனதுக்கு பெரும் வேதனை அளித்தது. அவர்கள் நெறியாளர்கள் மட்டுமல்லாது தமிழகத்தின் மூத்த பத்திரிகையா ளர்கள். செய்தி சேனல்களின் ஆசிரியர்கள். எனவே, அவர்கள் பக்கம் நிற்கிறோம் என்பதை உணர்த்துவதற்காகவே இந்திய விளம்பர நெறிமுறைகள் கவுன் சிலில் புகார் அளித்தோம். வெற்றி யும் பெற்றுள்ளோம்" என்றார்.

கருத்தரங்கில் மூத்த பத்திரிகை யாளர்கள் பாரதி தமிழன், மு.குணசேகரன், எஸ்.கார்த்திகைச் செல்வன் உள்ளிட்டோர் பேசி னர்.

## ரஜினி நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்துக்கு வரவேற்பு

கருத்தரங்கில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் என்.ராம் கூறியதாவது: குடியுரிமைச் சட்டத்தை பாஜக அரசு திரும்பப் பெறாது என்று நடிகர் ரஜினிகாந்த் கூறியிருப்பது சரிதான். சட்டம் திரும்பப் பெறப்படும் என்ற நம்பிக்கை எனக்கும் இல்லை. இச்சட்டத்தை திரும்பப் பெறக்கூடாது என்று ரஜினிகாந்த் கூறியிருந்தால் அது தவறு.

குடியுரிமைச் சட்டம், என்பிஆர், என்ஆர்சி பற்றி முழுமையாக படித்து தெரிந்துகொள்ளாமல் மேலோட்டமாக பார்த்து ரஜினி கருத்து கூறிவிட்டார் என்று நினைக்கிறேன். மூத்த வழக்கறிஞர்கள் பலர் இதுபற்றி விரிவாக ஆராய்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

குடியுரிமைச் சட்டம், என்பிஆர், என்ஆர்சி பற்ற ரஜினிகாந்த் முழுமையாக தெரிந்துகொள்ள வேண்டும். வேண்டுமானால் அவருக்கு உதவ நான் தயாராக இருக்கிறேன். இப்போது ரஜினியின் நிலைப்பாட்டில் மாற்றம் தெரிகிறது. டெல்லி கலவரத்தை தடுக்கத் தவறிய காவல் துறையையும், மத்திய அரசையும் ரஜினி கண்டித்துள்ளது வரவேற்கத்தக்கது.

இவ்வாறு அவர் கூறினார்.



▲ சென்னையை அடுத்த பெரும்பாக்கத்தில் டாடா குழுமம் மற்றும் ரோட்டரி சங்கத்தினரால் ரூ.7 கோடி செலவில் கட்டப்பட்ட பள்ளி கட்டிடத்தின் சாவியை பெரும்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் எஸ். சுந்தரமூர்த்தியிடம் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் வழங்கினார். உடன் துறை செயலாளர் தீரஜ் குமார், தனியார் நிர்வாகிகள் சித்தார்த் சர்மா, சுரேஷ் ராமன், சி.கே.வெங்கட்ராமன் மற்றும் சென்னை ரோட்டரி சங்க மாவட்ட ஆளுநர் ஜி.சந்திரமோகன் மற்றும் நிர்வாகிகள் விஜய பாரதி ரங்கராஜன், சேஷசாயி, ரவிசங்கர், அசோக் தக்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். படம்: எம்.முத்துகணேஷ்

பெரும்பாக்கத்தில் தனியார் நிறுவனங்கள் சார்பில்

# ரூ.7 கோடி மதிப்பில் கட்டப்பட்ட பள்ளி கட்டிடம் அரசிடம் ஒப்படைப்பு

● அமைச்சர் செங்கோட்டையன் பங்கேற்பு

■ பெரும்பாக்கம்

பெரும்பாக்கத்தில் தனியார் நிறுவனங்களால் ரூ.7 கோடியில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடம் அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

சென்னை ரோட்டரி சங்கம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் பெரும்பாக்கத்தில் தனியார் நிறுவனங்கள் உதவியுடன் 1.2 ஏக்கர் நிலத்தில் ரூ.6.94 கோடியில் 29 ஆயிரம் சதுர அடியில் 2 தளங்களில் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதில் 14 நவீன வகுப்பறைகள், 7 ஆய்வகங்கள், ஆசிரியர்கள் அறை, பார்வையாளர் அறை, தலைமை ஆசிரியர் அறை, மாணவ, மாணவிகளுக்கு தனித்தனியே கழிவறை உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன.

பள்ளிக்கல்வி துறையிடம் இந்த கட்டிடத்தை ஒப்படைக்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. இந்த விழாவில் பள்ளிக்கல்வி, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

பள்ளிக் கட்டிடத்தின் சாவி அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட் டது. அதை பெரும்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் எஸ்.சுந்தரமூர்த்தியிடம் அமைச்சர் வழங்கினார். விழாவில் அமைச்சர் செங்கோட்டையன் பேசியதாவது:

நவீன வசதிகளுடன் பள்ளி கட்டிடத்தை கட்டி வழங்கியுள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய மாணவர்கள் செல் போனில் அதிக நேரத்தை வீணடிக் கின்றனர். மாணவர்கள் செல் போனை தவிர்த்து விளையாட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்களிடம் விளையாட்டு திறமையை வளர்க்க ஊரக, நகரப் பகுதிகளில் ரூ.76 கோடியில் அம்மா விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே தமிழகத்தில்தான் விளையாட்டு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அரசு நிதி உதவி வழங்கி வருகிறது. இதேபோல, தனியார் நிறுவனங் களும் விளையாட்டு வீரர்களுக்கு உதவ வேண்டும்.

கல்வி மட்டுமின்றி, சுகாதாரத்துக் கும் நிறுவனங்கள் முக்கியத்துவம் தர வேண்டும். குறிப்பாக, பள்ளி களில் கழிவறை வசதியை ஏற்படுத்த தனியார் நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த பள்ளிக் கட்டிடம் கட்ட டாடா நிறுவனம் உள்ளிட்ட 12 நிறு வனங்கள் நிதி உதவி செய்துள்ளன. டாடா நிறுவனம் மட்டும் ரூ.3.40 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.

விழாவில் பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் தீரஜ் குமார், தனியார் நிறுவன நிர்வாகி கள் சித்தார்த் சர்மா, சுரேஷ் ராமன், சி.கே.வெங்கட்ராமன், சென்னை ரோட்டரி சங்க மாவட்ட ஆளுநர் ஜி.சந்திரமோகன் மற்றும் நிர்வாகிகள் விஜயபாரதி ரங்கராஜன், சேஷசாயி, ரவிசங்கர், அசோக் தக்கர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அனுமதியின்றி செயல்படும் குடிநீர் ஆலைகளை மூடாவிட்டால்

# தலைமைச் செயலாளர் நேரில் ஆஜராக நேரிடும்

● தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் எச்சரிக்கை

■ சென்னை

அனுமதியின்றி செயல்படும் குடிநீர் ஆலைகளை மூடாவிட்டால், தலை மைச் செயலர் ஆஜராக நேரிடும் என தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத் துள்ளது.

சட்டவிரோதமாக செயல்படும் குடிநீர் ஆலைகளை மூட வேண் டும், நிலத்தடி நீரை உறிஞ்ச தடை விதிக்க வேண்டும் என்று கோரி சென்னை புழலைச் சேர்ந்த சிவமுத்து என்பவர் உயர் நீதிமன்றத் தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதி மன்றம், சட்டவிரோதமாக நிலத்தடி நீரை உறிஞ்சும் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து, அதுதொடர்பாக அறிக்கை தாக்கல் செய்யாவிட்டால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு அபரா தம் விதிக்கப்படும் என எச்சரித் திருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு நீதி பதிகள் வினீத் கோத்தாரி, ஆர். சுரேஷ்குமார் அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மாவட்ட வாரியாக உள்ள குடிநீர் ஆலைகள் தொடர்பான பட்டியலை தாக்கல் செய்தார்.

மேலும், உரிய அனுமதியின்றி செயல்படும் 132 குடிநீர் ஆலை களை மூட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் சுற்றறிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கைக்கு அதிருப்தி தெரிவித்த நீதிபதிகள், "நிலத்தடி நீரை எடுக்கும் ஆலைகளுக்கு உரிமம் வழங்க வகைசெய்யும் வகையில் கடந்த 2018-ம் ஆண்டு உயர் நீதிமன்றம் தகுந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. சட்டவிரோதமாக நிலத்தடி நீரை உறிஞ்சுபவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அதில் வலியுறுத்தப் பட்டு இருந்தது. ஆனால் அந்த உத்தரவை தமிழக அரசு முழுமையாக அமல்படுத்த வில்லை. எனவே, இதுதொடர்பாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் உரிய நடவடிக்கை எடுக்கா விட்டால் தலைமைச் செயலரை நேரில் ஆஜராக உத்தரவிட நேரிடும்" என எச்சரித்து வழக்கு விசாரணையை மார்ச் 3-ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளனர்.

பெருநிறுவன சமூக பொறுப்பு திட்ட பணிகளுக்காக

# ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்துக்கு விருது

■ சென்னை

இ.டி. நவ் நடத்திய வேர்ல்ட் சிஎஸ்ஆர் காங்கிரஸ் மற்றும் விருது கள் வழங்கும் விழாவில் அரியலூர் ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்துக்கு 'முழுமையான சமுதாய மேம்பாடு' விருதும், சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியாகியுள்ள செய்திக்குறிப்பு:

விருதுக்கு 120-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள், 70 தன்னார்வ அமைப்புகள் போட்டியிட்டன. அவற்றில் 30 நிறுவனங்கள், 20 தன்னார்வ தொண்டு அமைப்பு களுக்கு விருதுகள் வழங்கப் பட்டன.

ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத் துக்கு 'முழுமையான சமுதாய மேம்பாடு' விருது கிடைத்துள்ளது. ஐக்கிய நாடுகள் கனடா என்சி பவுண்டேஷன் தலைவர் அல்மாஸ் ஜிவானி, பிர்லா நிர்வாக தொழில்நுட்ப மைய மூத்த நூலகர் மற்றும் மாணவர் நல அதிகாரி ரிஷி திவாரி ஆகியோர் விருதை வழங்க ராம்கோ உதவி பொது மேலாளர் எம்.எஸ்.காவேரியப்பா பெற்றுக்கொண்டார்.

அரியலூரில் செயல்படும் ராம்கோ நிறுவனம் பல்வேறு பெரு நிறுவன சமூக பொறுப்புணர்வு பணிகளை செயல்படுத்தி வரு கிறது. சுகாதாரம், நோய் தடுப்பு பணி களை மேற்கொண்டு வருகிறது.





▸▸ ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்துக்கு 'முழுமையான சமுதாய மேம்பாடு' விருதை ஐக்கிய நாடுகள் கனடா என்சி பவுண்டேஷன் தலைவர் அல்மாஸ் ஜிவானி, பிர்லா நிர்வாக தொழில்நுட்ப மைய மூத்த நூலகர் மற்றும் மாணவர் நல அதிகாரி ரிஷி திவாரி ஆகியோர் வழங்க ராம்கோ உதவி பொது மேலாளர் எம்.எஸ்.காவேரியப்பா பெற்றுக்கொண்டார்.

ராம்கோ நிறுவனம் சார்பில் மருத்துவ முகாம்கள் நடத்தப் படுகின்றன. மேலும் 4 கிராமங்களில் தூய்மையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வகை செய்யப் பட்டுள்ளது. கழிப்பறை வசதி கள் ஏற்படுத்தப்பட்டு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பள்ளிகளில் கழிப்பறை கள் தூய்மை செய்யப்பட்டு அவற்றை குழந்தைகள், மாணவி கள் பயன்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் 19 அரசுப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்தும் வகை யில் கூடுதல் ஆசிரியர்களை நியமித்து, பள்ளிகளின் உள்கட் டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள் ளன. ஆண்டுதோறும் 1000 பிள்ளைகளுக்கு சீருடை, புத்தகப்பை, கல்வி உபகரணங்கள் போன்றவை வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமின்றி பெண்கள் வருவாய் ஈட்டும் வகையில் அவர்களுக்கு தேவையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன இளைஞர்கள் திறமையை வெளிப்படுத்தும் வகையில் விளை யாட்டுப் போட்டிகள் நடத்தப் படுகின்றன. விவசாயிகளுக்கு நவீன வேளாண் உத்திகள் போதிக்கப்படுகின்றன.

# அண்ணா பல்கலை 16-வது பட்டமளிப்பு விழா

● 4,075 மாணவ, மாணவிகள் பட்டம் பெற்றனர்

■ சென்னை

அண்ணா பல்கலைக்கழக 16-வது பட்டமளிப்பு விழாவில் 4,075 மாணவ, மாணவியருக்கு பட்டம் வழங்கப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழக 16-வது பட்டமளிப்பு விழா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் எம்.கே.சுரப்பா தலைமையில் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா கலையரங்கில் நேற்று நடைபெற்றது. அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் எல்.கருணாமூர்த்தி வரவேற்றார். இவ்விழாவில், சிறப்பு அழைப் பாளராகக் கலந்துகொண்ட அறிவி யல் மற்றும் தொழிலக ஆய்வுக் கவுன்சில் டைரக்டர் ஜெனரல் சேகர் சி.மண்டே மாணவ, மாணவி யருக்கு பட்டம் வழங்கிப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

அண்ணா பல்கலைக்கழகம் மிகக் குறைந்த காலத்தில் நாட்டி லேயே மிகச்சிறந்த தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக உருவானது. இங்கு கடினமாக படித்து முடித்து பட்டம் பெறும் மாணவ, மாணவிகளின் வாழ்வில் இன்றைய நாள் முக்கிய தருண மாகும். எதிர்காலத்தில் நீங்கள் நினைப்பது எல்லாம் அப்படியே நடக்கும் என்று கூற முடியாது. ஆனால், அதன்மூலம் கிடைக்கும் அனுபவம் புதிய பாடத்தைக் கற்றுக் கொடுக்கும்.





▲ அண்ணா பல்கலைக்கழகத்தின் 16-வது பட்டமளிப்பு விழா சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு அரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வுத் துறை தலைமை இயக்குநர் சேகர் சி.மண்டே கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். உடன் அண்ணா பல்கலை. துணைவேந்தர் எம்.கே.சுரப்பா, பதிவாளர் கருணாமூர்த்தி. படம்: ம.பிரபு

இந்த பல்கலைக்கழகத்தில் நீங்கள் செலவிட்ட நேரம், எத்தகைய சூழலையும் எதிர் கொள்ளும் ஆற்றலை உங்களுக்கு வழங்கும். பொதுவாக ஒன்று சொல் வார்கள். புள்ளிவிவரம் என்பது வெறும் தகவல் மட்டுமல்ல. அதுவே அறிவு மற்றும் புத்திக்கூர்மை ஆகும். இப்பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்கள் உங்களுக்கு ஏராளமான புள்ளிவிவரங்களை, தக வல்களை சொல்லிக் கொடுத் திருப்பார்கள். ஆனால், சிறந்த ஆசிரியர்கள் அத்தகவல்களை உங்களுக்கு அறிவுத் தொகுப்பாக தந்திருப்பார்கள்.

பூமியில் சிறந்த உயிரினமாக கரு தப்படும் மனித இனம், இயற்கை யோடு இயைந்து வாழ்வதுடன், எதிர்கால சந்ததியினரைக் கருத் தில் கொண்டு இயற்கையை அறிவி யல் பூர்வமான அணுகுமுறையுடன் காப்பாற்ற வேண்டிய கடமையும் இருக்கிறது.

இங்குள்ள இளம் பட்டதாரிகள் சமூக சவால்களை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அணுகுமுறையுடன் எதிர் கொள்வார்கள் என நம்புகிறேன். அதுவே வரும் ஆண்டுகளில் பெரிய வளர்ச்சிக்கு அத்தாட்சியாகத் திகழும். கண்டுபிடிப்புகளும், புதிய தொழில்நுட்பமும்தான் எதிர்கால வளர்ச்சியைத் தீர்மானிக்கும்.

இவ்வாறு மண்டே கூறினார்.

விழாவில், சிவில் இன்ஜினீய ரிங், மெக்கானிக்கல், எலக்ட்ரிக் கல், தகவல் மற்றும் தொலைத் தொடர்பு, தொழில்நுட்பம், கட்டிடக் கலை உள்ளிட்ட பாடப்பிரிவு களில் பயின்ற 4,075 மாணவ, மாணவியருக்கு பட்டம் வழங்கப்பட் டது. அண்ணா பல் கலைக்கழக தேர்வுக் கட்டுப்பாட்டாளர் எம். வெங்கடேசன் நன்றி கூறினார்.

**பொன்மொழி** பிறருக்கு தேவைப்படும் போது நல்லவர்களாக தெரியும் நாம்தான், அவர்களது தேவைகள் முடிந்தவுடன் கெட்டவர்களாகி விடுகின்றோம்.
**- முன்னாள் முதல்வர் அண்ணா**

**இணையம்:** பெயின்ட் தயாரிப்பில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படும் டியூலக்ஸ் நிறுவனத்தை 2008—ல் அக்சோநோபல் குழுமம் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இதன் www.dulux.in இணையதளம் மூலம் பெயின்ட் அடிக்கும் குறிப்புகள் மற்றும் யோசனைகள், வகைகளை அறியலாம். சரியான பெயின்ட்டை தேர்வு செய்யவும் முடியும்.

**பொதுஅறிவு:** இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872—ல் நடைபெற்றது. 1881 முதல் 1941—ம் ஆண்டு வரை மக்கள் தொகை ஆணையர் இப்பொறுப்பை வகித்தார். சுதந்திரத்துக்கு பின் தலைமை பதிவாளர் மற்றும் இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையரிடம் இப்பொறுப்பு வழங்கப்பட்டது.



▲ இந்தியாவுக்கான நெதர்லாந்து நாட்டின் தூதர் மார்டன் வான் டென் பெர்க், சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் பழனிசாமியை மரியாதை நிமித்தமாக நேற்று சந்தித்தார். உடன், சென்னையில் உள்ள நெதர்லாந்து நாட்டின் கவுரவ தூதர் கோபால் சீனிவாசன், தலைமை செயலாளர் சண்முகம், வேளாண்மைத் துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி உள்ளிட்டோர்.

# நெதர்லாந்து நாட்டு கவுரவ தூதராக கோபால் சீனிவாசன் நியமனம்

● முதல்வர் பழனிசாமியுடன் சந்திப்பு

■ சென்னை

சென்னையில் உள்ள நெதர்லாந்து நாட்டு தூதரகத்தின் கவுரவ தூதராக, டிவிஎஸ் கேபிடல் ஃபண்டு நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் கோபால் சீனிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து மரியாதை நிமித்தமாக முதல்வர் பழனிசாமியை தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

சென்னையை தலைமையிடமாக கொண்ட டிவிஎஸ் குழுமத்தின் 3-வது தலைமுறை தொழில் முனைவோராக விளங்குபவர் கோபால் சீனிவாசன். இவர் இளங்கலை பட்டப்படிப்பை சென்னை லயோலா கல்லூரியிலும், எம்பிஏ படிப்பை மிச்சிகான் பல்கலைக் கழகத்திலும் முடித்துள்ளார். இவர் டிவிஎஸ் கேபிடல் ஃபண்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராக உள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் கோபால் சீனிவாசன் நெதர்லாந்து கவுரவ தூதராக நியமனம் செய்யப்பட்டதன் மூலம் வர்த்தகம், புதிய முதலீடு, கல்வி, சுற்றுலா மற்றும் கலாச்சாரம் போன்ற துறைகளில் தற்போது நெதர்லாந்து - தமிழகம் இடையே ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்தியாவுக்கான நெதர்லாந்து நாட்டு தூதர் மார்டின் வான் டென் பெர்க், சென்னையில் உள்ள நெதர்லாந்து நாட்டுக்கான கவுரவ தூதர் கோபால் சீனிவாசன் ஆகியோர் மரியாதை நிமித்தமாக முதல்வர் பழனிசாமியை, தலைமைச்செயலகத்தில் நேற்று சந்தித்து உரையாடினர். அப்போது அரசு தலைமைச் செயலர் க.சண்முகம், வேளாண் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மதுபானக்கடைகள் வேண்டாம் என்று நிறைவேற்றிய

# கிராமசபை தீர்மானத்தை அமல்படுத்த தயக்கம் ஏன்?

● தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் கேள்வி

■ சென்னை

மதுபானக்கடைகள் வேண்டாம் என கிராமசபைக் கூட்டத்தில் பொதுமக்கள் தீர்மானம் நிறைவேற்றினால் அதை அமல்படுத்த தமிழக அரசு தயங்குவது ஏன் என்று உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

டாஸ்மாக் கடை இடமாற்றம் தொடர்பான வழக்கு விசாரணை தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி மற்றும் நீதிபதிகள் சி.வி. கார்த்திகேயன், பி.டி.ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று நடந்தது.

அப்போது நீதிபதிகள், "டாஸ்மாக் தொடர்பான பிரச்சினை முழுக்க, முழுக்க அரசியலமைப்பு சட்டம் சார்ந்த பிரச்சினையாக உள்ளது. மாநில அரசு எப்போதும் மக்கள் நலன் காக்கும் அரசாக செயல்பட வேண்டும். குடிமக்கள் ஒவ்வொருவருடைய கண்ணியத்தையும் காக்க வேண்டியது அரசின் கடமை. டாஸ்மாக் மதுபானக்கடைகள் வேண்டாம் என கிராமசபைக் கூட்டத்தில் பொதுமக்கள் ஒன்று கூடி தீர்மானம் நிறைவேற்றினால், அதை அமல்படுத்த அரசு தயங்குவது ஏன்?



என்பது புரியவில்லை.

மக்கள் நலன் சார்ந்து கிராம பஞ்சாயத்துக்கள் எடுக்கும் முடிவுகளுக்கு மாநில அரசுகள் ஏன் செவி சாய்க்கக்கூடாது? தேர்தல் அறிக்கையில் மதுவிலக்கை அமல்படுத்துவோம் எனக்கூறும் அரசியல் கட்சிகள் ஆட்சிக்கு வந்தபிறகு அதை அமல்படுத்தாமல் விட்டுவிடுவது ஏன்? மதுபான விற்பனை அரசின் கொள்கை முடிவாக இருந்தாலும் கூட வருங்கால இளைய தலைமுறையின் நலன் சார்ந்தும் சில முடிவுகளை எடுக்கலாம் என கருத்து தெரிவித்தனர்.

அப்போது அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண் ஆஜராகி, கடந்த 2004 முதல் 2020 வரை 35 சதவீதம் மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளன. 12 மணி நேரமாக இருந்த மதுபான கடையின் விற்பனை நேரம் 10 மணி நேரமாக குறைக்கப்பட்டுள்ளது. கிராமசபைக் கூட்டங்களில் ஏற்கெனவே 8 வழிச்சாலை, சிஏஏ, நீட் போன்ற தேர்வுகளுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியபோது, அந்த தீர்மானங்களை சட்டவிதிகளுக்கு உட்பட்டு பரிசீலித்து வருகிறோம் என்றார்.

அதையடுத்து நீதிபதிகள், "மதுபான கடைகள் அமைப்பதற்கு முன் அந்த பகுதி மக்களிடம் கருத்து கேட்க வேண்டும் என்பதை ஏன் சட்டமாக்கக் கூடாது? மது விற்பனையை தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வு துறையின் மூலமாக சட்டவிரோதமாக மதுவிற்பனை நடைபெறுவது வேதனைக்குரியது. கோயில் பகுதியில் அசைவ உணவு கடைகள் நடத்தக்கூடாது என அறிவித்த தமிழக அரசு, மதுபானக் கடைகள் வைக்கக்கூடாது என ஏன் அறிவிக்கவில்லை? கடந்த 16 ஆண்டுகளில் மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகக் கூறும் அரசு, மது அருந்துவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது என உறுதிபடக் கூற முடியுமா? என்றனர்.

▼ **தேர்தல் அறிக்கையில் மதுவிலக்கை அமல்படுத்துவோம் எனக்கூறும் அரசியல் கட்சிகள் ஆட்சிக்கு வந்தபிறகு அதை அமல்படுத்தாமல் விட்டுவிடுவது ஏன்?**

அதன்பிறகு கடந்த 2017-ம் ஆண்டு டாஸ்மாக் மதுபானக் கடைகள் அமைப்பதற்கான நடைமுறை குறித்து டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் பிறப்பித்த சுற்றறிக்கையை ஏற்க முடியாது என்ற நீதிபதிகள், தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகளில் திருத்தம் கொண்டு வருவது குறித்து தமிழக அரசு 6 வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை ஏப்.17-க்கு தள்ளி வைத்துள்ளனர்.

சென்னை நந்தனத்தில்

# நல்லகண்ணுவுக்கு வாடகை வீடு ஒதுக்கீடு

● அரசாணை வெளியிட்டது தமிழக அரசு


■ சென்னை

இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணுவுக்கு, நந்தனம் பகுதியில் வாடகை வீடு ஒன்றை தமிழக அரசு வழங்கியுள்ளது.

கடந்த 1953-ம் ஆண்டு நகர அபிவிருத்திக் கழகம் மூலம் சென்னை சிஐடி காலனியில், 119 வீடுகள் கட்டப்பட்டு, பொது மக்களுக்கு பொது ஒதுக்கீடு முறையில் மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கப்பட்டன. இக்குடியிருப்புகளில், இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணுவுக்கு கடந்த 2007-ம் ஆண்டு வீடு ஒதுக்கப்பட்டது.

இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்திருந்ததால், கடந்த 2011-ம் ஆண்டில் சுயநிதி திட்டத்தின்கீழ் புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் திட்டம் கொண்டுவரப்பட்டு, அங்கு குடியிருப்பவர்கள் வீட்டை காலி செய்யும்படி நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இதை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் நீதிமன்றம் அறித்த தீர்ப்பின் அடிப்படையில், கடந்த ஏப்ரல் மாதம் வீடுகள் காலி செய்யப்பட்டன. இதில், நல்லகண்ணு மற்றும் முன்னாள் அமைச்சர் கக்கன் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட வீடுகளையும் காலி செய்ய



வற்புறுத்துவதாக சர்ச்சை எழுந்தது.

### ஓபிஎஸ் உறுதி

இதற்கிடையில், கடந்த ஆண்டு மே 10-ம் தேதி நல்லகண்ணு, தாமாகவே முன்வந்து வீட்டை காலி செய்தார். தொடர்ந்து நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத்தில், நல்லகண்ணுவுக்கு வீடு ஒதுக்குவது குறித்த கேள்விக்கு துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பதில் அளிக்கையில், "அரசு சார்பில் அவர்கள் விரும்பிய இடத்தில் வாடகையின்றி வீடு ஒதுக்கித்தரப்படும்" என்றார்.

இந்நிலையில் நந்தனம் பகுதியில் உள்ள வீட்டுவசதி வாரிய குடியிருப்பில், நல்ல கண்ணுவுக்கு வாடகை வீடு ஒதுக்கப்பட்டு அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

'இந்தியன்-2' படப்பிடிப்பில் 3 பேர் உயிரிழந்த விவகாரம்

# மத்திய குற்றப்பிரிவு போலீஸார் முன்பு இயக்குநர் ஷங்கர் ஆஜராகி விளக்கம்

■ சென்னை

இந்தியன்-2 படப்பிடிப்பில் ஏற்பட்ட விபத்து தொடர்பான விசாரணைக்காக சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் முன் இயக்குநர் ஷங்கர் நேற்று நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தார்.

சென்னை பூந்தமல்லி அருகே 'ஈவிபி பிலிம் சிட்டி'யில், கமல்ஹாசன் நடித்துவரும் 'இந்தியன்-2' படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றது. கடந்த 19-ம் தேதி இரவு நடைபெற்ற படப்பிடிப்பின்போது நடந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 10-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். விபத்து தொடர்பாக சென்னை காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட நசரத்பேட்டை காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தினர்.

இந்நிலையில் இந்த வழக்கு விசாரணையை சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸாருக்கு மாற்றி சென்னை காவல் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதன் உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து மத்திய குற்றப்பிரிவு போலீஸார் விசாரணையை தொடங்கினர். முதல்கட்டமாக சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல் கூடுதல் ஆணையர் சி.ஈஸ்வரமூர்த்தி, துணை ஆணையர் ஜி.நாகஜோதி ஆகியோர் விபத்து நிகழ்ந்த



▼ **ஷங்கர் அளித்த அனைத்து தகவல்களையும் போலீஸார் வீடியோவாகவும், எழுத்து பூர்வமாகவும் பதிவு செய்துள்ளனர்.**

இடத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

இதைத்தொடர்ந்து 'இந்தியன்2' திரைப்படத்தை தயாரிக்கும் லைகா நிறுவன நிர்வாகிகளுக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு சம்மன் அனுப்பி இருந்தனர். இயக்குநர் ஷங்கருக்கும் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து சென்னை வேப்பேரியில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்தில் இயக்குநர் ஷங்கர் நேற்று காலை ஆஜரானார். அவரிடம், "படப்பிடிப்பின் போது விபத்து ஏற்பட்டது எப்படி? நீங்கள் அப்போது எங்கு இருந்தீர்கள்? படப்பிடிப்பின்போது முழு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததா?" என்பன உட்பட பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. சுமார் இரண்டரை மணி நேரம் இந்த விசாரணை நடைபெற்றது.

ஷங்கர் அளித்த அனைத்து தகவல்களையும் போலீஸார் வீடியோவாகவும், எழுத்து பூர்வமாகவும் பதிவு செய்துள்ளனர். அடுத்ததாக நடிகர் கமல்ஹாசன், நடிகை காஜல் உள்ளிட்டோரையும் விசாரிக்க மத்திய குற்றப்பிரிவு போலீஸார் முடிவு செய்துள்ளனர்.

முன்னதாக விபத்து நிகழ்ந்தபோது இயக்குர் ஷங்கர் சமூக வலைதளப் பக்கத்தில் தனது வருத்தத்தைப் பகிர்ந்திருந்தார். அதில் 'மோசமான விபத்து நடந்த நாளிலிருந்து நான் அதிர்ச்சியில் இருக்கிறேன். எனது உதவி இயக்குநர், குழுவைச் சேர்ந்தவர்களின் மரணத்தை நினைத்துத் தூக்கம் வருவதில்லை. நூலிழையில் அந்த கிரேன் விபத்திலிருந்து தப்பித்தேன். ஆனால், அது என் மீது விழுந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்" என்று உருக்கமாக பதிவிட்டிருந்தார்.

என்ஆர்சி-க்கு எதிராக

# சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

● பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தல்

■ சென்னை

பிஹார் மாநிலத்தைப் பின்பற்றி தமிழக சட்டப்பேரவையிலும் தேசிய குடிமக்கள் பதிவேடுக்கு (என்ஆர்சி) எதிராக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:

பிஹார் மாநில சட்டப்பேரவையில் தேசிய குடிமக்கள் பதிவேடுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. பாமகவின் கொள்கையும் இதுதான். கடந்த டிசம்பர் 31-ம் தேதி நடந்த பாமக பொதுக்குழு கூட்டத்தில் இதை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

பிஹார் மாநிலத்தை பின்பற்றி தமிழக சட்டப்பேரவையிலும் தேசிய குடிமக்கள் பதிவேடுக்கு (என்ஆர்சி) எதிராக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். 2010-ம் ஆண்டு நடத்தப்பட்ட அதே வடிவத்தில் தேசிய மக்கள்தொகை பதிவேடு (என்பிஆர்) தயாரிக்க வேண்டும்.



அசாம் மாநிலத்தைத் தவிர இந்தியாவின் எந்த மாநிலத்திலும் என்ஆர்சி தயாரிக்கப்படாது. அது குறித்த விவாதம் தேவையில்லை என்று பிரதமர் மோடி கூறியிருப்பதும், அதை உள்துறை அமைச்சர் அமித் ஷா வழி மொழிந்திருப்பதும் வரவேற்கத்தக்கது. தமிழக சட்டப்பேரவையில் என்ஆர்சி-க்கு எதிராக தீர்மானம் கொண்டு வருவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக முதல்வர் பழனிசாமி கூறியிருப்பது சரியான நிலைப்பாடு. தேசிய மக்கள்தொகை பதிவேடு (என்பிஆர்) தொடர்பாக மக்களிடம் நிலவி வரும் அச்சத்தையும், ஐயத்தையும் அரசு போக்க வேண்டும். இவ்வாறு ராமதாஸ் கூறியுள்ளார்.

# திருவொற்றியூர் தொகுதி திமுக எம்எல்ஏ கே.பி.பி.சாமி மறைவு

● ஆளுநர் இரங்கல்; மு.க.ஸ்டாலின் அஞ்சலி

■ சென்னை

முன்னாள் அமைச்சரும், திருவொற்றியூர் தொகுதி திமுக சட்டப்பேரவை உறுப்பினருமான கே.பி.பி. சாமி (57) உடல்நலக் குறைவால் காலமானார். அவரது உடலுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார்.

கடந்த 6 மாதங்களாக சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த கே.பி.பி.சாமி, நேற்று காலை மரணம் அடைந்தார். திருவொற்றியூர் கே.வி.கே.குப்பத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், பொருளாளர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, மகளிரணி செயலாளர் கனிமொழி, இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, எம்.பி.க்கள் டி.கே.எஸ். இளங்கோவன், கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கபாண்டியன், எம்எல்ஏக்கள் பி.கே.சேகர்பாபு, ரங்கநாதன், மாதவரம் சுதர்சனம், வி.ஜி.ராஜேந்திரன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். கே.பி.பி.சாமியின் மகன் பரசு பிரபாகரன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஸ்டாலின் ஆறுதல் கூறினார்.

திமுக மீனவரணிச் செயலாளராக இருந்த கே.பி.பி.சாமி, கடந்த 2006 சட்டப்பேரவைத் தேர்தலில் திருவொற்றியூர் தொகுதியில் வெற்றி பெற்று, மீன்வளத் துறை அமைச்சரானார். 2011 தேர்தலில் தோல்வி அடைந்தவர், 2016-ல் மீண்டும் திருவொற்றியூரில் வென்று 2-வது முறையாக எம்எல்ஏ ஆனார்.



▲ மறைந்த திமுக எம்எல்ஏ கே.பி.பி.சாமியின் உடலுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர். படம்: க.ஸ்ரீபரத்

கே.பி.பி.சாமியின் தந்தை பரசுராமன், திருவொற்றியூர் நகராட்சி உறுப்பினராக இருந்தவர். தந்தை வழியில் அரசியலுக்கு வந்த சாமி, கட்சியில் பல்வேறு பதவிகளைப் பெற்று, பின்னர் அமைச்சர் பதவி வரை உயர்ந்தார். மறைந்த திமுக தலைவர் கருணாநிதிக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்தார்.

கே.பி.பி.சாமியின் மனைவி உமா, மூத்த மகன் இனியவன் ஆகியோர் ஏற்கெனவே காலமாகிவிட்டனர். தற்போது பரசு பிரபாகரன் என்ற மகனும், உதயா என்ற மகளும் உள்ளனர். திருவொற்றியூர் பட்டினத்தார் கோயில் தெரு அருகே உள்ள மயானத்தில் அவரது உடல் இன்று தகனம் செய்யப்பட இருப்பதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

கே.பி.பி.சாமியின் மறைவுக்கு தமிழக ஆளுநர், அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்:** சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.பி.சாமியின் மறைவு அதிர்ச்சி அளிக்கிறது. அவரது மறைவு திருவொற்றியூர் தொகுதி மக்களுக்கு பேரிழப்பாகும். கே.பி.பி.சாமியை இழந்து வாழும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன். அவரது இழப்பை தாங்கிக் கொள்ளும் மன வலிமையை குடும்பத்தாருக்கு வழங்க வேண்டும் என்றும் வேண்டுகிறேன்.

**திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்:** கே.பி.பி.சாமியின் திடீர் மறைவு செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். திமுக இளைஞரணி மாவட்ட அமைப்பாளர், தலைமை செயற்குழு உறுப்பினர், மாநில மீனவர் அணிச்செயலாளர் ஆகிய பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி கருணாநிதியின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர். மீன்வளத் துறை அமைச்சராக இருந்தபோது முதல்வராக இருந்த கருணாநிதியிடமும், துணை முதல்வராக இருந்த என்னிடமும் வாதாடி மீனவர்களுக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றினார்.

மக்களுக்காகவும், மீனவர் சமுதாயத்துக்காவும் இரவு பகலாக பணியாற்றும் ஒரு செயல் வீரரை திருவொற்றியூர் தொகுதி மக்கள் இழந்து வாடுகின்றனர். திமுகவின் போராட்டங்களை நடத்தவும், உற்சாகமிக்க தொண்டர்களை உருவாக்கவும் ஆர்வம் குறையாமல் தொடர்ந்து உழைத்து வந்த கே.பி.பி.சாமியை இழந்து நானும், திமுக தொண்டர்களும் தவிக்கிறோம்.

**தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி:** மீனவர் சமுதாயத்தின் நலனுக்காக அரும்பாடுபட்ட, மீனவர்களின் உரிமைகளை காக்க போராடிய கே.பி.பி.சாமியின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், திமுகவினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

முன்னாள் மத்திய அமைச்சர் சு.திருநாவுக்கரசர் உள்ளிட்டோரும் கே.பி.பி.சாமி மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

நீட் தேர்வு ஆள்மாறாட்ட வழக்கு விசாரணை

# சிபிஎஸ்இ அதிகாரிகள் ஆஜராக சிபிசிஐடி சம்மன்

■ சென்னை

நீட் தேர்வு ஆள்மாறாட்ட வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு, தேர்வை நடத்திய சிபிஎஸ்இ அதிகாரிகளுக்கு சிபிசிஐடி சம்மன் அனுப்பியுள்ளது.

நீட் தேர்வு ஆள்மாறாட்ட வழக்கு தொடர்பாக தமிழக சிபிசிஐடி போலீஸார் வழக்குப்பதிவு செய்து 2 மாணவிகள், 9 மாணவர்கள், அவர்களின் பெற்றோர் மற்றும் இடைத்தரகர்கள் என 18 பேரை இதுவரை கைது செய்துள்ளனர்.

நீட் தேர்வை தற்போது உத்தரப் பிரதேசம் மாநிலம் நொய்டாவில் உள்ள நேஷனல் டெஸ்டிங் ஏஜென்சி (NTA) நடத்தி வருகிறது. 2019-ம் ஆண்டுக்கு முன்பு நீட் தேர்வுகளை மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) நடத்தியது. இந்நிலையில், மருத்துவ கல்வி இயக்குநரகத்தின் இணைய தள முகவரிக்கு ஒரு இ.மெயில் வந்தது.

### இந்தியில் நீட் தேர்வு

அதில், சென்னை மருத்துவக் கல்லூரியில் 2-ம் ஆண்டு படிக்கும் மாணவன் தனுஷ் குமாருக்கு இந்தி தெரியாது, ஆனால் பிஹாரில் இந்தியில் நீட் தேர்வு எழுதி மருத்துவப் படிப்பில் சேர்ந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்பேரில், மாணவன் தனுஷிடம் மருத்துவக் கல்வி மற்றும், கல்லூரி அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அப்போது, அவருக்கு இந்தி தெரியாது என்பது உறுதி செய்யப்பட்டது. ஆனால் தனுஷ், 2018-ம் ஆண்டு பிஹார் மாநிலத்தில் இந்தியில் நீட் தேர்வு எழுதி, தேர்ச்சி பெற்று, சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருப்பது தெரியவந்தது. இதுகுறித்து சிபிசிஐடி போலீஸாருக்கு தகவல் கிடைக்க, அவர்கள் மாணவர் தனுஷ் மற்றும் அவரது தந்தை தேவேந்திரன் ஆகியோரை கைது செய்தனர்.

### 2018-ல் நடந்த தேர்வு விவரம்

தனுஷுக்கு பதில் ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதிய மாணவர், இதற்கு ஏற்பாடு செய்து கொடுத்த இடைத்தரகர் ஆகியோரை பிடிக்கும் முயற்சியில் போலீஸார் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் 2018-ம் ஆண்டு நீட் தேர்வை நடத்திய சிபிஎஸ்இ அதிகாரிகளிடம் விசாரணை நடத்துவதற்காக, அவர்களை நேரில் ஆஜராகச் சொல்லி தமிழக சிபிசிஐடி போலீஸார் சம்மன் அனுப்பியுள்ளனர்.

மேலும், 2018-ம் ஆண்டு தேர்வு எழுதிய தமிழக மாணவர்களின் விவரங்களை வழங்கக்கோரி சிபிஎஸ்இ-க்கு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

## மீட்டர் பேசுது

| | | | | |
|---|---|---|---|---|
| 32.6°c | 33.0°c | 34.8°c | 35.6°c | 34.5°c |
| சென்னை | வேலூர் | திருச்சி | மதுரை | கோவை |
| 36.0°c | 34.8°c | 22.0°c | 19.8°c | |
| சேலம் | நெல்லை | உதகை | கொடைக்கானல் | |

தமிழகம், காரைக்கால், புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவும். சென்னையில் ஓரளவு மேகமூட்டம் காணப்படும். காலை நேரங்களில் லேசான பனிமூட்டம் நிலவும். வெப்பநிலை 24 முதல் 33 டிகிரி செல்சியஸாக இருக்கும்.

உரிமம் பெறும் வழிமுறையை அரசு உருவாக்க கோரி

# கேன் குடிநீர் உற்பத்தியாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்

● குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

■ சென்னை

நிலத்தடி நீர் எடுப்பதற்கான உரிமம் இல்லாமல் இயங்கும் ஆலைகளை மூட வேண்டும் என தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், இந்த உரிமம் பெறுவதற்கான வழிவகைகளை உருவாக்க வலியுறுத்தி கேன் குடிநீர் உற்பத்தியாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

தமிழகம் முழுவதும் 1,689 கேன் குடிநீர் உற்பத்தியாளர்கள் உள்ளனர். சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூரில் சுமார் 400-க்கும் மேற்பட்ட குடிநீர் உற்பத்தி ஆலைகள் உள்ளன. இந்த மாவட்டங்களில் மட்டும் தினமும் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட கேன் குடிநீர் விற்பனையாகிறது.

இதற்கிடையே அளவுக்கு அதிகமாக நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதைத் தடுக்க 2014-ம் ஆண்டு சட்டம் கொண்டுவரப்பட்டது. கேன் குடிநீர் உற்பத்தியாளர்கள் அளவுக்கு அதிகமாக நிலத்தடி நீரை உறிஞ்சுவதைக் கட்டுப்படுத்த உத்தரவிடக் கோரி வழக்கும் தொடரப்பட்டது. இதுதொடர்பான வழக்கில் நிலத்தடி நீர் எடுப்பதற்கான உரிமம் இல்லாமல் செயல்படும் குடிநீர் ஆலைகளை மூட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது. இதனால் கேன் குடிநீர் உற்பத்தி செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

எனவே, நிலத்தடி நீர் எடுப்பதற்கான உரிமத்தை எளிய முறையில் பெறுவதற்கான வழிவகைகளை தமிழக அரசு உருவாக்க வலியுறுத்தி, கேன் குடிநீர் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் நேற்று (பிப்.27) மாலை முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவித்துள்ளன.

இதுகுறித்து தமிழ்நாடு கேன் குடிநீர் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் ஆர்.ராஜசேகரன் கூறியதாவது: நிலத்தடி நீர் எடுப்பதைக் கட்டுப்படுத்த 2014-ல் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன் பிறகு குடிநீர் ஆலை தொடங்குபவர்களுக்கே இந்தச் சட்டம் பொருந்த வேண்டும். ஆனால், 2014-க்கு முன்பு குடிநீர் ஆலை நடத்துபவர்களும் உரிமம் பெற வேண்டும் என உத்தரவிட்ட உயர் நீதிமன்றம், அதற்கான வழிவகைகளைக் காணும்படியும் தமிழக அரசை அறிவுறுத்தியது. ஆனால், இதுவரை வழிவகைகள் உருவாக்கப்படவில்லை.

தமிழகத்தில் நிலத்தடி நீர் எடுக்க பாதுகாப்பான பகுதி, அபாயகரமானது, மிகவும் அபாயகரமானது, அளவுக்கு அதிகமாக நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்ட பகுதி என பல்வேறு வகைப்பாடுகள் உள்ளன.

மேலும், ஒரு ஆழ்குழாய் கிணறுக்கும் அடுத்த ஆழ்குழாய் கிணறுக்கும் இடையே 175 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்பன போன்ற கட்டுப்பாடுகளும் இருக்கின்றன. இதுபோன்ற காரணங்களால் நிலத்தடி நீர் எடுப்பதற்கான உரிமம் வாங்க முடியாமல் ஏராளமானோர் தவிக்கின்றனர்.

உயர் நீதிமன்ற உத்தரவால் 1,300 குடிநீர் ஆலைகள் மூடப்படும் அபாயத்தில் உள்ளன. கேன் குடிநீர் உற்பத்தியை நம்பி நேரடியாகவும், மறைமுகமாகவும் உள்ள 10 லட்சம் பேர் பாதிக்கப்படுவார்கள். தமிழகத்தில் உள்ள 1,689 குடிநீர் ஆலைகளும் உணவுப் பாதுகாப்புத் துறை உரிமம், பிஐஎஸ்-யிடம் இருந்து தரக்கட்டுப்பாட்டு சான்றிதழுடன் இயங்குகின்றன. நிலத்தடி நீர் எடுப்பதற்கான உரிமம் பெறும் வழிமுறைகளை அரசு உடனடியாக உருவாக்கக் கோரி வேலை நிறுத்தத்தைத் தொடங்கியுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதுதொடர்பாக பெருநகர சென்னை கேன் குடிநீர் உற்பத்தியாளர்கள் சங்க நிறுவனர் வி.முரளி கூறும்போது, "குடிநீர் தேவைக்காக மட்டுமே நிலத்தடி நீர் எடுக்கிறோம். தொழில்துறையின் தேவைக்காக எடுக்கவில்லை. குடிநீர் ஆலைகள், எளிய முறையில் நிலத்தடி நீர் எடுப்பதற்கான உரிமம் பெற அரசு உடனடியாக கொள்கை அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டப்படி செயல்படும் எங்கள் ஆலைகளை மூடினால், சட்ட விரோதமாக நிலத்தடி நீர் எடுப்போர் எண்ணிக்கை அதிகமாகிவிடும். இதில் அரசு உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும்" என்றார்.

# தமிழகத்தில் எதிர்மறை பிரச்சாரமே இருக்கிறது

● தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கருத்து

■ புதுச்சேரி / விழுப்புரம்



▲ மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், நேற்று அம்மனுக்கு குங்கும அர்ச்சனை செய்து வழிபாடு நடத்தினார்.

தமிழகத்தில் எதிர்மறை பிரச்சாரமே அதிகம் இருக்கிறது; மறைக்கப்பட்ட இந்திய வரலாற்றை மீட்டு உருவாக்குதல் அவசியம் என்று தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இந்தியா - தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இடையிலான கடல் சார்ந்த பழைய சகோதரத்துவத்தை நினைவூட்டும் சர்வதேச கருத்தரங்கம் புதுச்சேரியில் நேற்று தொடங்கியது.

இதில் பங்கேற்று ஆளுநர் தமிழிசை பேசியதாவது: இந்தியாவுக்கும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் கலாச்சார, வர்த்தக தொடர்புகள் பழங்காலம் தொட்டே இருந்து வந்தது. ஆனால் வரலாறு தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அதை மீட்டு உருவாக்கம் செய்தல் அவசியம்.

தமிழகத்திலும் தவறான தகவல் தொடர்பு காரணமாக வரலாறு தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்திய வரலாறு நிறைய மறைக்கப்பட்டுள்ளது.

கடல் கடந்த தமிழர் பெருமைக்குச் சான்றாக மகாராஷ்டிரா துறைமுகத்துக்கு ராஜேந்திர சோழன் பெயருடன் சிலை வைக்கப்பட்டுள்ளது. இது தமிழராக, இந்தியராக பெருமை தருகிறது. ஆனால், தமிழகத்திலோ எதிர்மறையான பிரச்சாரமே அதிகம் இருக்கிறது. தாய்லாந்தில் தங்க புத்தர் சிலை மீது மண் பூசி வைத்திருப்பதுபோல் மறைக்கப்பட்ட தங்கமான இந்திய வரலாற்றை மீட்டு உருவாக்குதல் அவசியம் என்று குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் பேசிய துணைநிலை ஆளுநர் கிரண்பேடி, "புதுச்சேரிக்கு ரோமானியர்கள், பிரெஞ்சுக்காரர்கள் என பல நாட்டவர்கள் வந்துள்ளனர். பண்டைய கடல் வாணிபச் சான்றாக உள்ள அரிக்கன்மேட்டில் அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது. அத்துடன் கோயில் சுற்றுலாவுக்கும் புதுச்சேரியில் முக்கியத்துவம் தருகிறோம்" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஆர்எஸ்எஸ் தேசிய செயற்குழு உறுப்பினர் இந்திரேஷ் குமார், ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரி சுனில் லன்பா உள்ளிட்டோர் பேசினர். இரு நாட்கள் நடக்கும் இம்மாநாடு இன்று நிறைவடைகிறது.

### கோயிலில் தரிசனம்

இந்நிகழ்வில் பங்கேற்ற தெலங்கானா ஆளுநர் தமிழிசை, தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் வானூர் அருகேயுள்ள திருவக்கரை வக்கிர காளியம்மன் கோயிலுக்குச் சென்றார். பின்னர் மயிலம் முருகன் கோயிலுக்கும் சென்று சுவாமி தரிசனம் செய்தார். மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் அம்மனுக்கு குங்கும அர்ச்சனை செய்து வழிபாடு நடத்தினார்.

தூத்துக்குடியில்

# அதிமுக முன்னாள் அமைச்சரின் அண்ணன் வீடு, நிறுவனங்களில் வருமான வரி சோதனை

■ தூத்துக்குடி

தூத்துக்குடியில் அதிமுக முன்னாள் அமைச்சர் சி.த.செல்லபாண்டியனின் அண்ணன் வீடு மற்றும் நிறுவனங்களில் வருமான வரித் துறையினர் நேற்று சோதனை நடத்தினர்.

ஜெயலலிதாவின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தவர் சி.த.செல்லபாண்டியன். தூத்துக்குடி மாவட்ட அதிமுக செயலாளராக இருந்தவர். தற்போது, அதிமுக அமைப்பு செயலாளராக உள்ளார்.

சி.த.செல்லபாண்டியனின் அண்ணன் சி.த.சுந்தரபாண்டியனுக்கு சொந்தமான, தூத்துக்குடியில் உள்ள காமராஜர் காய்கனி மார்க்கெட், அங்குள்ள அலுவலகம், ஸ்டார் ஓட்டல், திரையரங்கம், தங்கும் விடுதி, மில்லர்புரத்தில் உள்ள வீடு, சிட்பண்ட் அலுவலகம், பாளையங்கோட்டை சாலையிலுள்ள பெட்ரோல் பங்க், மீன்வள கல்லூரி அருகேயுள்ள தொழில் நிறுவனம், இருசக்கர வாகன விற்பனையகம் உள்ளிட்டவற்றில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

### காய்கறி கடைகள் அடைப்பு

காலை 9 மணிக்கு தொடங்கிய சோதனை இரவு வரை நீடித்தது. வருமான வரித் துறை சோதனையால் காய்கறி மார்க்கெட்டில் கடைகள் அடைக்கப்பட்டன.

காய்கறி வாங்க வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர் வருமான வரித் துறை அதிகாரிகளின் சோதனை விவரம் உடனடியாக தெரியவில்லை.

ஊதிய உயர்வு கோரிக்கைகளை வலியுறுத்தி மார்ச் 11, 12, 13-ல்

# வங்கி ஊழியர்கள், அதிகாரிகள் வேலைநிறுத்தம்

● கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் தகவல்

■ திருச்சி

ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மார்ச் 11, 12, 13 ஆகிய 3 நாட்கள் வங்கி ஊழியர்கள், அதிகாரிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

அகில இந்திய வங்கி ஊழியர்கள், அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பினர், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா தமிழ்நாடு- புதுச்சேரி மாநில பொதுச் செயலாளர் ஜி.கிருபாகரன் தலைமையில் திருச்சியில் நேற்று காங்கிரஸ் எம்பி சு.திருநாவுக்கரசரைச் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர்.

அதன் பிறகு செய்தியாளர்களிடம் கிருபாகரன் கூறியதாவது:

ஊதிய உயர்வு கேட்டு அகில இந்திய அளவில் பொதுத்துறை வங்கி ஊழியர்கள், அதிகாரிகள் 10 லட்சம் பேர் கடந்த 3 மாதங்களாக தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

வங்கி ஊழியர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு இந்திய வங்கிகள் சங்கமும், அகில இந்திய வங்கி ஊழியர்கள், அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தி ஊதிய உயர்வை நிர்ணயிக்க வேண்டும்.

இதன்படி, எங்களுக்கு 2017-ல் வழங்கியிருக்க வேண்டிய ஊதிய உயர்வை, கடந்த 26 மாதங்களாக, 40 சுற்று பேச்சுவார்த்தை நடத்தியும் இதுவரை இறுதி செய்யாமல் மத்திய அரசு தாமதப்படுத்தி வருகிறது.

பெருநிறுவனங்கள் பெற்ற கோடிக்கணக்கான ரூபாய் வாராக் கடன்களை தள்ளுபடி செய்துவிட்டு, எங்களுக்கு ஊதிய உயர்வு தராததற்கு அதைக் காரணம் காட்டுவது சரியல்ல.

கடந்த மாதம் 2 நாட்கள் வேலை நிறுத்தம் செய்த நிலையில், மார்ச் 11, 12, 13 ஆகிய 3 நாட்கள் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளோம். அதற்கும் இந்திய வங்கிகள் சங்கமும், மத்திய அரசும் செவிசாய்க்கவில்லை என்றால் ஏப்.1-ம் தேதி முதல் தொடர் வேலை நிறுத்தத்தைத் தொடங்க உள்ளோம்" என்றார்.

# தினமலர் பங்குதாரர் ஆர்.ராகவனின் மனைவி காலமானார்

● முதல்வர் பழனிசாமி, திமுக தலைவர் ஸ்டாலின் இரங்கல்

■ திருச்சி



▲ சுப்புலட்சுமி

தினமலர் நாளிதழின் பங்குதாரர் மறைந்த ஆர்.ராகவனின் மனைவி சுப்புலட்சுமி(77) நேற்று மாலை திருச்சியில் காலமானார்.

நாகர்கோவிலில் சுப்பிரமணி அய்யர், வேங்கடலட்சுமி தம்பதிக்கு 1943-ல் பிறந்தவர் சுப்புலட்சுமி. தினமலர் பங்குதாரர் ஆர்.ராகவனை 1964-ல் மணந்தார்.

இவர்களுக்கு தினமலர் நாளிதழின் திருச்சி, வேலூர் பதிப்புகளின் ஆசிரியர் ஆர்.ராமசுப்பு, வெளியீட்டாளர் ஆர்.ஆர். கோபால்ஜி ஆகிய இரு மகன்கள் உள்ளனர். திருச்சியில் வசித்து வந்த சுப்புலட்சுமி நேற்று மதியம் காலமானார்.

இறுதிச் சடங்குகள், இன்று (பிப்.28) பிற்பகல் 3 மணிக்கு திருச்சி கன்டோன்மென்ட் பேர்ட்ஸ் ரோடு இல்லத்தில் நடைபெறும்.

இறுதி ஊர்வலம் மதியம் 3.30 மணிக்குப் புறப்பட்டு, ஸ்ரீரங்கம் கொள்ளிடக்கரை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற உள்ளன.

### முதல்வர் இரங்கல்

முதல்வர் பழனிசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், 'தினமலர் நாளிதழின் பங்குதாரரான ராகவன் மனைவியும், அப்பத்திரிகையின் ஆசிரியர் ராமசுப்பு மற்றும் வெளியீட்டாளர் கோபால்ஜி ஆகியோரின் தாயாருமான சுப்புலட்சுமி அவர்கள், உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து வேதனை அடைந்தேன்.

சுப்புலட்சுமியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தினமலர் குழுமத்துக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

**திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்:** ஆர்.சுப்புலட்சுமி மறைவெய்தினார் என்ற துயரச் செய்தி கேட்டு மிகுந்த வேதனையுற்றேன். பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டுள்ள தினமலர் பத்திரிகையின் வளர்ச்சிக்குத் துணை நின்ற ஆர்.சுப்புலட்சுமி அவர்களை இழந்து தவிக்கும் ராமசுப்பு, கோபால்ஜி ஆகியோருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன், தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் திருநாவுக்கரசர் ஆகியோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அதிமுக அரசை விமர்சிக்கும்

# ஸ்டாலின் வீட்டுக்கு 100 யூனிட் மின்சாரம் இலவசம்

● அமைச்சர் செல்லூர் கே.ராஜு விமர்சனம்

■ மதுரை



▲ செல்லூர் கே.ராஜு

எதற்கெடுத்தாலும் அதிமுக அரசை விமர்சனம் செய்யும் ஸ்டாலின் வீட்டுக்கும், தமிழக அரசு 100 யூனிட் மின்சாரத்தை இலவசமாக வழங்குகிறது என கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜு தெரிவித்தார்.

மதுரை பழங்காநத்தத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 72-வது பிறந்த நாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. கூட்டத்தில் அமைச்சர் செல்லூர் கே.ராஜு பேசியதாவது:

தமிழகத்தில் திமுக ஆட்சி இருண்ட காலமாக இருந்தது. பெரும் நிறுவனங்களுக்கும், பெரும் பணக்காரர்களுக்குமான ஆட்சியாக அது இருந்தது. ஆனால், அதிமுக ஆட்சி ஏழை, எளிய மக்களுக்கான ஆட்சி. திமுக ஆட்சியில் மின்தடை நிரந்தரமாக இருந்தது. அதிமுக ஆட்சியில் இதுவரை மின்தடை ஏற்பட்டதே இல்லை. மின் மிகை மாநிலமாகச் செயல்படுகிறது.

தமிழகத்தில் அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது. அதிமுக அரசை எதற்கெடுத்தாலும் குறை சொல்லும் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் வீட்டுக்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக அரசு வழங்குகிறது. அவர் தமிழக அரசின் சலுகைகளைப் பெற்றுக் கொண்டு விமர்சனம் செய்கிறார். மக்களை அரசுக்கு எதிராகத் தூண்டிவிடுகிறார். அவரது முதல்வர் கனவு பகல் கனவாகவே முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

## 'பஞ்ச்'சோந்தி பராக்!

காங்கிரஸை இனி தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்!
– பீட்டர் அல்போன்ஸ்




– சு.சுஸ்ருதாசுந்தர், மொரப்பூர்.

● **செய்தி:** காங்கிரஸில் சொத்து பாதுகாப்புக் குழு அமைப்பு!
– கே.எஸ்.அழகிரி

**பஞ்ச்:** அதில் எல்லா கோஷ்டி ஆளுங்களையும் போட்டாச்சுங்களா?
– எஸ்.சாய் ஸாத்விகா, சீர்காழி.

● **செய்தி:** ஓபிஎஸ் உள்ளிட்ட 11 எம்.எல்.ஏ-க்களையும் தகுதிநீக்கம் செய்ய திமுக மனு!
– செய்தி

**பஞ்ச்:** இதை இன்னும் இந்த ஊர் நம்புது!
– அமுது அரட்டை, பொள்ளாச்சி.

▲ வாசகர்களே...
கருத்துச் சித்திரம் போலவே, இதுவும் உங்கள் களம்தான். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கே 'நறுக்' செய்தி வரிகளோடு சேர்த்து அனுப்புங்கள். பிரசுரமாகும் உங்கள் 'பஞ்ச்'களுக்குப் பரிசு ரூ.100.

இந்திய பகுதிக்குள் நுழைந்த

# இலங்கை மீனவர்கள் 5 பேர் கைது

■ ராமேசுவரம்



▲ எல்லை தாண்டி படகில் வந்த இலங்கை மீனவர்களை தனுஷ்கோடி கரைக்கு கொண்டு வரும் இந்திய கடற்படை ஹெலிகாப்டர்.

எல்லை தாண்டி இந்திய கடல் பகுதிக்குள் படகில் வந்த 5 இலங்கை மீனவர்களை இந்திய கடற்படையினர் கைது செய்தனர்.

தனுஷ்கோடி அரிச்சல்முனை அருகே இந்திய கடற்படையின் ஹெலிகாப்டர் நேற்று வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தது. அப்போது, இலங்கையைச் சேர்ந்த படகு ஒன்று சர்வதேச கடல் எல்லைப் பகுதியை தாண்டி வந்து கொண்டிருந்தது.

உடனே இந்திய கடற்படை வீரர்கள் ஹெலிகாப்டரை தாழ்வாக பறக்கவிட்டு படகையும் அதிலிருந்த 5 பேரையும் அரிச்சல் முனை கடல் பகுதிக்குக் கொண்டு வந்து கடற்படை போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணையில், படகில் இருந்தது இலங்கையில் உள்ள மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்டீபன் ராஜ், இயேசு ராஜா, உதயக்குமார், ரவீந்திரன், ரெக்சன் என்று தெரியவந்தது. காற்றின் திசையினால் இந்திய எல்லைப் பகுதிக்குள் திசை மாறி வந்ததாக அவர்கள் தெரிவித்தனர். படகை பறிமுதல் செய்த போலீஸார், அதிலிருந்த ஜிபிஎஸ் கருவி, மீன்வலைகள், மீனவர்களின் செல்போன்கள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் விசாரணைக்குப் பிறகு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்படுவார்கள் என போலீஸார் தெரிவித்தனர்.

வேலூர் பெண்கள் தனி சிறையிலிருந்து

# புழல் சிறைக்கு மாற்ற நளினி மனு

■ வேலூர்

வேலூர் பெண்கள் சிறையில் நளினியை செல்போன் வழக்கில் சிக்க வைக்க சதி நடைபெறுகிறது. எனவே, தன்னை சென்னை புழல் சிறைக்கு மாற்ற வேண்டும் எனக் கோரி நளினி மனு அளித்துள்ளார் என அவரது வழக்கறிஞர் புகழேந்தி தெரிவித்தார்.

வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினியை அவரது வழக்கறிஞர் புகழேந்தி நேற்று சந்தித்துப் பேசினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "வேலூர் சிறையில் சில நாட்களுக்கு முன்பு மைதிலி என்ற கைதியிடம் இருந்து 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அந்த செல்போனை தான் ஒருபோதும் பயன்படுத்தவில்லை என மைதிலி சிறை அதிகாரிகளிடம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக உளவுத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தியதில், அந்த செல்போனை வைத்தவர் ஒரு சிறை வார்டர் என தெரியவந்துள்ளது. அவரிடம் விசாரித்தபோது, ஒரு உயர் அதிகாரியின் அழுத்தம் காரணமாக அந்த செல்போனை அவர் சிறைக்குள் எடுத்து வந்துள்ளார்.

நளினியின் அறையில் அந்த செல்போனை வைத்து, அதன் மூலம் அவரை சிக்க வைக்க சதி செய்துள்ளனர். இந்த தகவல் நளினியின் கவனத்துக்கு சென்றுள்ளது. செல்போன் வழக்கில் தன்னை சிக்க வைக்க சிறை அதிகாரிகள் முயற்சி செய்யும் தகவலால் அதிர்ச்சி அடைந்துள்ளார். இதன் காரணமாகவே, அவர் சரியான முறையில் உணவு எடுத்துக் கொள்ளவில்லை.

மேலும், தனது பெற்றோர் சென்னையில் இருப்பதால் சென்னை புழல் சிறைக்கு மாற்ற வேண்டும் எனக் கோரி சிறைத்துறை தலைவருக்கு வேலூர் சிறை கண்காணிப்பாளர் வழியாக நளினி கடிதம் கொடுத்துள்ளார்" என்று தெரிவித்தார்.

இந்து தமிழ் திசை
உண்மை நின்றிட வேண்டும்
வெள்ளி, பிப்ரவரி 28, 2020

# நுகர்வோர் கைகளில் உள்ளது பொருளாதார மீட்சி

மத்திய நிதிநிலை அறிக்கையில் நுகர்வையும் உற்பத்தியையும் ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டங்கள் இல்லை என்று கூறியவர்களுக்குப் பதில் கூறும் வகையில், பொருளாதாரம் மீட்சி அடைவதற்கான அடையாளமாக 'பசுந்தளிர்கள்' வெளிப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்டியலிட்டார். அதில் தொழில் துறை உற்பத்தித் தரவும் ஒன்று. ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரையில் சுருங்கியிருந்த இது, நவம்பரில் 1.8% உயர்ந்துவிட்டதைச் சுட்டிக்காட்டினார். ஆனால், அது டிசம்பர் மாதம் மீண்டும் 0.3% குறைந்துவிட்டதைக் கடந்த வாரம் வெளியான தரவுகள் தெரிவிக்கின்றன.

நிலக்கரி, கச்சா பெட்ரோலிய எண்ணெய், இயற்கை எரிவாயு, பெட்ரோலிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, உரங்கள், உருக்கு, சிமென்ட், மின் உற்பத்தி ஆகியவை பிற தொழில் துறைகளின் செயல்பாட்டுக்கான 'அடிப்படைத் துறைகள்'. தொழில் துறை உற்பத்திக் குறியீட்டெண்ணில் இவை மட்டுமே 40% பங்கு வகிக்கின்றன. இந்தத் தொழில்களில் வளர்ச்சி டிசம்பர் மாதம் 1.3% ஆக இருந்தது. ஆனால், சரிவோ உற்பத்தித் துறையில்தான் ஏற்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக, நிலைத்த நுகர்பொருட்கள் - நிலையற்ற நுகர்பொருட்கள் உற்பத்திப் பிரிவுகளில் உற்பத்தி குறைந்துள்ளது. தொழில் துறையில் உற்பத்தி ஏற்பட்டிருந்தாலும் அது மாதவாரியாக மாறிக்கொண்டே இருக்கிறது. தொழில் துறை மீட்சி எல்லாத் தொழில்களிலும், எல்லாப் பகுதிகளிலும் சமமாக இல்லை என்பதும் இதிலிருந்து தெரிகிறது. சீனாவில் 'கோவிட்-19' காய்ச்சலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்ந்தால், இந்தியத் தொழில் துறை உற்பத்தியும் பாதிக்கப்படக்கூடும். இந்தியத் தொழில் துறைகளின் உற்பத்திக்கான பல இடுபொருட்களும் துணைப் பொருட்களும் சீன ஆலைகளிலிருந்துதான் கிடைக்கின்றன. செல்பேசிகள், மோட்டார் வாகன உற்பத்தி ஆகிய துறைகளின் ஆலைகளில் கையிருப்பில் உள்ள குறைந்த இடுபொருட்கள், துணைப் பொருட்களைக் கொண்டு சில நாட்களுக்கு மட்டுமே உற்பத்திசெய்ய முடியும். சீனாவிலிருந்து அவை ஏற்றுமதியாகாவிட்டால் இங்கும் உற்பத்தியை நிறுத்த நேரும்.

இதற்கிடையில், பணவீக்க விகிதமும் உயர்ந்துவருகிறது. நுகர்வோர் விலைக் குறியீட்டெண்ணும் (7.59%), மொத்த விலைக் குறியீட்டெண்ணும் (3.1%) ஒரே சமயத்தில் உயர்ந்துவருகின்றன. உணவுப் பண்டங்களின் விலை உயர்ந்ததால் இந்த அதிகரிப்பு. அடிப்படைப் பொருட்களின் விலையும் லேசாக உயர்ந்துவருகிறது. சமையல் எரிவாயு விலை சிலிண்டருக்கு ரூ.144 உயர்ந்திருக்கிறது. எனவே, வட்டி வீதத்தை ரிசர்வ் வங்கி குறைக்காது என்று தெரிகிறது. முதலீட்டுத் தொகைக்கான வட்டி அதிகமாக இருப்பது மட்டுமே முதலீட்டாளர்களின் தயக்கத்துக்குக் காரணமல்ல. கடன் வாங்கி உற்பத்தி செய்தாலும் அதை விற்க முடியுமா, முதலீட்டுக்கு ஏற்ற லாபம் கிடைக்குமா என்பதுதான் தயக்கத்துக்குக் காரணம். தொழில் துறையினர் முதலீடு செய்யத் தயங்குவதால், வங்கிகளிடம் கடன் கேட்பது குறைவாக இருக்கிறது என்று சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்குக் காரணம், பொருட்களை வாங்க நுகர்வோர் முன்வருவதில்லை. இனி, இந்தியப் பொருளாதாரம் மீட்சி பெறுவது நுகர்வோர் கைகளில்தான் இருக்கிறது.





# 'கோவிட்-19' சிகிச்சையில் சீனா புகுத்திய புதுமைகள்!

பத்தே நாட்களில் 2,300 படுக்கைகள் கொண்ட இரண்டு மருத்துவமனைகளைக் கட்டி முடித்த சாதனையில் தொடங்குகிறது, சீனாவின் புதுமைப் புறப்பாடு. உணவு மற்றும் மருந்துகளைக் கொடுக்க ரோபோக்கள், புதிது புதிதான ஆராய்ச்சிகள் என வரலாறு படைத்துவருகிறது சீனா!

கு.கணேசன்

சீனாவை மட்டுமல்ல, உலக நாடுகள் அனைத்தையும் அலற வைத்திருக்கிறது 'கோவிட்–19' காய்ச்சல். இது பரவாமல் தடுப்பதற்கும் பரவியவர்களுக்கு மருத்துவப் பாதுகாப்பு தருவதற்கும் 30–க்கும் மேற்பட்ட நாடுகள் முனைப்புக் காட்டிவருகின்றன. இந்த நிலையில், 'கோவிட்–19' காய்ச்சலுக்கான சிகிச்சையில் சீனா 80–க்கும் மேற்பட்ட புதிய முயற்சிகளையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டுள்ள விவரம் தெரியவந்துள்ளது. அவற்றில் சில வெற்றியும் பெற்றுள்ளன.

பத்தே நாட்களில் 2,300 படுக்கை வசதிகள் கொண்ட இரண்டு புதிய மருத்துவமனைகளை வூஹான் நகரத்துக்கு வெளியில் கட்டி முடித்த சாதனையில் தொடங்குகிறது சீனாவின் புதுமைப் புறப்பாடு. கொத்துக் கொத்தாகப் பரவும் கொள்ளை நோய்களைக் கட்டுப்படுத்த நோயாளிகளைத் தனிமைப்படுத்த வேண்டியது மிக முக்கியம். அதற்கு ஏற்கெனவே இருக்கும் மருத்துவமனைகளில் தனி வார்டுகளை ஒதுக்குவதுதான் பெரும்பாலான நாடுகளின் வழக்கம். அதற்கு மாறாக, ஒட்டுமொத்த நோயாளிகளையும் நகருக்கு வெளியில் கொண்டுவந்து தனித்தனி மருத்துவமனைகளில் சிகிச்சை கொடுப்பது ஒரு மருத்துவப் புதுமை. இதற்காக சீனா இரண்டாம் முறையாக வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

இரண்டாவதாக, காய்ச்சலுக்குக் காரணம் 'கோவிட்–19' வைரஸ்தான் என்பதை உறுதிசெய்ய நோயாளியின் ரத்தம், மூக்குச் சளி, நெஞ்சுச் சளியைப் பரிசோதிப்பது வழக்கம். முக்கியமாக, 'ஆர்டி–பிசிஆர்' (RT–PCR), 'நேட்' (NAAT) போன்ற நுட்பமான பரிசோதனைகள் இதற்கு உதவுகின்றன. குறைபாடுகள் என்னவென்றால், இந்தப் பரிசோதனைகளை எல்லா ஆய்வுக்கூடங்களிலும் மேற்கொள்ள முடியாது; சிறப்பு ஆய்வுக்கூடங்கள் தேவை. அப்படியே இருந்தாலும் இவற்றின் முடிவுகள் வெளியாகச் சில நாட்கள் ஆகும். அதுவரை நோயாளிகள் உரிய சிகிச்சைக்குக் காத்திருக்க வேண்டும். இந்த நேரத்தில் நோயாளிக்கு நோய்த் தாக்குதல் தீவிரமாகி உயிருக்கு ஆபத்து நேரலாம்.

### புதுமை செய்த பிளாஸ்மாதெரபி

இந்தக் கொடுமையைத் தவிர்க்க சீன மருத்துவர்கள் ஓர் எளிய வழியைப் புகுத்தினார்கள். நோயாளியின் நெஞ்சு எக்ஸ்–ரேவைப் பார்த்து உடனடியாக நோயை அறிந்து சிகிச்சையைத் தொடங்கலாம் என்று முடிவெடுத்தார்கள். இது 100% நோயை உறுதிப்படுத்தாது என்றாலும், இதன் மூலம் தினமும் ஆயிரக்கணக்கில் மருத்துவமனைக்கு வரும் புதிய நோயாளிகளுக்கு உடனடியாக சிகிச்சை தரப்படுவது எளிதானது. இதற்கான செலவும் குறைவு.

இந்தப் பரிசோதனை வசதியை ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே மேற்கொள்ள முடியும். மேலும், அங்கு 'கோவிட்–19' காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டால், அவசர மேல் சிகிச்சைக்கு உடனடியாக மாவட்ட மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்படுவதும் எளிதானது. காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர் சாதாரண வைரஸ் காய்ச்சல் நோயாளியா, 'கோவிட்–19' காய்ச்சல் நோயாளியா எனப் பிரித்தறிவதும் சுலபமானது. இதன் மூலம் நோயின் முதற்கட்டத்திலேயே ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் அச்சம் அகற்றப்பட்டது.

'கோவிட்–19' காய்ச்சலுக்கு மருந்து இல்லை; மாற்று இல்லை என்று உலக நாடுகள் பலவும் கைகளைப் பிசைந்துகொண்டிருந்த நேரத்தில், சீனாவின் தேசிய சுகாதாரக் கழகம் மூன்றாவது முயற்சியைக் கையில் எடுத்தது. எந்தவொரு வைரஸ் நோய்க்கும் அதற்குண்டான நோயெதிர்ப்பொருட்களை (ஆன்டிபயாடிஸ்) செலுத்தினால், அந்த வைரஸ் கிருமிகள் அழியும் என்னும் அறிவியல் அடிப்படையில், 'கோவிட்–19' காய்ச்சலிலிருந்து மீண்ட நோயாளிகளின் ரத்தத்தைப் பெற்று, அதிலிருந்து 'பிளாஸ்மா' என்னும் திரவத்தைப் பிரித்தெடுத்து, மோசமான கட்டத்தில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த புதிய நோயாளிகளுக்குச் செலுத்தினார்கள். இப்படிச் செலுத்தப்பட்ட பிளாஸ்மாவில் 'கோவிட்–19' கிருமிகளை முறியடிக்கும் நோயெதிர்ப்பொருட்கள் கோடிக்கணக்கில் இருந்த காரணத்தால், அந்த நோயாளிகள் ஆபத்தான கட்டத்திலிருந்து மீண்டார்கள். இந்தப் பிளாஸ்மாவை நோய் வரும் முன்னர் தடுப்பு மருந்தாகப் பயன்படுத்தினால் இன்னும் நல்ல பலனைத் தரும் என்கிற கருத்தும் உள்ளது. இதன் அடிப்படையில், இதற்குத் தடுப்பூசி தயாரிக்கவும் ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

### ரோபோட்டிக் பயன்பாடு

சுனாமி வேகத்தில் 'கோவிட்–19' காய்ச்சல் பரவும் நோயாக இருப்பதால், அதைக் கட்டுப்படுத்த நோயாளிகளுடன் மற்றவர்கள் நெருங்குவதைத் தடுப்பது முக்கியம். அதற்கான புதிய முயற்சியாக இந்த நோய் கண்டவர்களுக்கு உணவுகளையும் மருந்துகளையும் எடுத்துக்கொடுக்க சீனாவில் ரோபோட்டுகளைப் பயன்படுத்துகிறார்கள். வூஹான் மாநிலத்தில் உள்ள பெரிய மருத்துவமனைகளில் 30 ரோபோட்டுகள் இந்தப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளன. நோயாளியின் படுக்கை அறை மற்றும் மருத்துவமனையைச் சுத்தப்படுத்துவதற்கும் மருத்துவமனைக்கு வருபவர்களை வரவேற்கவும் வழிகாட்டவும் ரோபோட்டுகளே பயன்படுகின்றன. இதன் பலனாக, 'கோவிட்–19' நோயாளிகளோடு மருத்துவமனைப் பணியாளர்கள் நேரடியாகத் தொடர்புகொள்வது ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது; நோய்ப் பரவலும் தடுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, செயற்கை நுண்ணறிவு மூலம் இந்த வைரஸ் காய்ச்சலை வரும் முன்னரே கண்டறிய முடியுமா என்னும் ஆராய்ச்சியில் சீனாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை சார்ந்த அறிவியலாளர்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளனர்.

மலேரியாவுக்கு சீனாவின் பாரம்பரிய மூலிகையிலிருந்து ஆர்ட்டிமிசினின் (Artemisinin) மருந்து கண்டுபிடிக்கப்பட்டதுபோல் 'கோவிட்–19' காய்ச்சலுக்கும் புதிய மருந்தைக் கண்டுபிடிக்க மூலிகை ஆராய்ச்சிகள் நடக்கின்றன. தற்போது 'ஃபேவிலாவிர்' (Favilavir) மருந்தைக் கொடுத்தால் 'கோவிட்–19' காய்ச்சல் கட்டுப்படுகிறது என்பதும் தெரியவந்துள்ளது. இந்த மருந்தைத் தயாரிப்பதற்கும் நோயாளிகளிடம் பயன்படுத்துவதற்கும் சீனாவின் சுகாதாரத் துறை அனுமதி கொடுத்துவிட்டது. 'கோவிட்-19' காய்ச்சலுக்கு அனுமதி பெறப்பட்ட வைரஸ் எதிர்மருந்து இதுதான். மேலும், 'குளோரோகுயின்', 'ரெம்டெஸிவிர்' என்னும் இரண்டு மருந்துகளையும் சோதனை முறையில் பயன்படுத்தவும் யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டின் பொருளாதார வளத்தை மட்டுமல்லாமல் ராணுவ பலம், மனித வளம், அறிவியல் வளங்களையும் பயன்படுத்திப் போராடியதால் சீனாவை அச்சுறுத்திக்கொண்டிருந்த 'கோவிட்–19' சுனாமி தற்போது அடங்கிவருகிறது.

### சீனா கற்றுக்கொடுத்தது என்ன?

சீனாபோல் 10 நாட்களில் 25,000 சதுர மீட்டர் பரப்பளவில் புதிய மருத்துவமனைகளைக் கட்டுவது, ரோபோட்டுகளைப் பயன்படுத்துவது போன்ற அசாத்திய வழிகளை இந்தியா போன்ற வளரும் நாடுகளிலும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற நாடுகளிலும் எதிர்பார்க்க முடியாது. என்றாலும், இந்த வைரஸ்களின் கொடுங்கரங்கள் நம் கழுத்தை இறுக்கும் இக்கட்டான சூழலில், நோய்க் கண்டுபிடிப்பில் அதிகம் செலவு பிடிக்கும் ஆய்வுக்கூடப் பரிசோதனைகளுக்கு மாற்றாக மிக எளிய எக்ஸ்–ரே பரிசோதனையைப் பயன்படுத்தலாம் என்னும் ஒரு புதிய வழியை சீனா காட்டியுள்ளது. இந்த வழிகாட்டுதலை இந்தியா உள்ளிட்ட மற்ற நாடுகளும் பயன்படுத்த முடியும்.

அடுத்ததாக, விபத்துகளின்போது உயிர்காக்க உதவும் ரத்தக் கொடைபோல் 'கோவிட்–19' காய்ச்சல் வந்தவர்களிடமிருந்து பிளாஸ்மாவைக் கொடையாகப் பெற்று, புதிய நோயாளிகளுக்குச் சிகிச்சை தருவதையும் தடுப்பு மருந்தாகப் பயன்படுத்துவதையும் இந்தியாவிலும் பின்பற்ற முடியும். ஆரம்பத்தில், சீனாவில் சாதாரணமாகத் தெரிந்த 'கோவிட்–19' காய்ச்சல், போகப்போகத் தீவிரமடைந்து பெரிய அளவில் உயிர்ப்பலிகளை ஏற்படுத்தினாலும் சீனா அதற்கு அசரவில்லை; மற்ற நாடுகளின் உதவிகளையும் கோரவில்லை; உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலையும் எதிர்பார்க்கவில்லை. அசாத்தியத் துணிச்சலுடன், அரசு இயந்திரங்களை முடுக்கி, நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தி, புதிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, 'கோவிட்–19' எனும் டிராகனைத் தன்னிச்சையாக வீழ்த்திக்கொண்டிருக்கிறது. இந்தியா போன்ற வளரும் நாடுகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது.

- கு.கணேசன், பொதுநல மருத்துவர்.
தொடர்புக்கு: gganesan95@gmail.com

## இப்படிக்கு இவர்கள்


இந்து தமிழ் திசை
உண்மை நின்றிட வேண்டும்
புதன், பிப்ரவரி 26, 2020
தமிழகமெங்கும் விரியட்டும் நெல்லையின் முன்னெடுப்புகள்
உலகை உலுக்கிய கொள்ளைநோய்கள்
உலகம் முன்பு எப்போதையும்விட அதிக அளவில் தொடர்பில் இருக்கும் காரணத்தால் இப்போது நாம் இப்போது கூடுதலாகப் பதைபதைக்கிறோம் என்றாலும், இந்த விழிப்புணர்வு தேவையானதுதான். ஏனென்றால், கொள்ளைநோய்களில் பலவும் தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்குள்ளும் மருந்து கண்டுபிடிப்பதற்குள்ளும் லட்சக்கணக்கானோரைக் கொன்றுவிடுபவை!
ஆசை

### வாசிப்பை நேசிக்கும் ஒரு இளம் சமூகம் வளர்ந்துவருகிறது

நெல்லைப் புத்தகக்காட்சி குறித்த 'தமிழகமெங்கும் விரியட்டும் நெல்லையின் சாதனைகள்' தலையங்கம் படித்தேன். மாவட்ட நிர்வாகம் விழாவில் நேரடியாகப் பங்கேற்பதால் கூடுதல் அக்கறையோடு நடத்தப்படுகிறது. கல்விச்சாலைகள் நிறைந்த நெல்லை நகரம் இதை மாணவர்களின் திருவிழாவாகவும் அணுகுகிறது. நாங்களும் எம் பள்ளி மாணவர்களை அழைத்துச்சென்றோம். சாகித்ய அகாடமி பரிசு பெற்றவர்களின் புகைப்படத்தை மாணவர்களிடம் காண்பித்து அவர்களைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்தபோது ஒருவர், "அரசுப் பள்ளி மாணவர்களை அழைத்துவந்தீர்களா?" என்று கேட்டார். "ஆமாம்" என்றதும் ஒரு தொகையைக் கொடுத்து, "மாணவர்களுக்கு புத்தகங்கள் வாங்கிக்கொடுங்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றார். இதுபோன்ற நிகழ்வுகள் மாணவர்களுக்குப் புத்தக வாசிப்பின் மீது ஆர்வத்தை உண்டாக்குகின்றன. வாசிப்பை நேசிக்கும் ஒரு இளம் சமூகம் வளர்ந்துவருகிறது. அதைத் தொடர்ந்து வளரச் செய்வது பள்ளி ஆசிரியர்களாகிய எங்கள் கடமை என இந்தப் புத்தகத் திருவிழா உணரச் செய்தது.

**- ச.கார்த்திக்குமார், ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தென்காசி.**

இணையத்திலும் இந்து தமிழுடன் இணைந்திருக்க...
www.hindutamil.in

சமூக வலைதளங்களில் எங்கள் பக்கங்கள்...
Follow us on Facebook
facebook.com/TamilTheHindu/
Follow us on twitter
twitter.com/tamilthehindu
Find Us On YouTube
Youtube.com/tamilthehindu



**பெரும்பான்மையின் ஆட்சி என்பது ஜனநாயகத்தின் உள்ளடங்கிய ஒரு பகுதிதான். அதிக வாக்குகளைப் பெற்றவரை வென்றவராகத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறையின் அடிப்படையிலான இந்தியாவைப் போன்ற ஜனநாயகத்தில் பெரும்பாலான சமயங்களில் அரசு என்பது மக்களில் பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைவதில்லை; இன்னும் சொல்லப்போனால், வாக்களிப்பவர்களின் பெரும்பான்மையையும்கூட அவை அடிக்கடி பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. வாக்களிப்பவர்களில் 50%-க்கும் அதிகமானவர்களின் பிரதிநிதி என ஒருவரைக் கொண்டால், மிச்சமிருக்கும் 49% மக்களுக்கு எந்தக் குரலும் இல்லையென்றுதானே அர்த்தமாகிறது?**

**- தீபக் குப்தா, உச்ச நீதிமன்ற நீதிபதி**



**12,936** வேலையின்மை காரணமாகத் தற்கொலை செய்துகொண்ட நபர்களின் எண்ணிக்கை. 2018-ல் ஒவ்வொரு 45 நிமிடங்களுக்கும் ஒரு நபர் தற்கொலையால் இறந்துபோயிருக்கிறார்.

நடுப் பக்கங்களுக்குக் கட்டுரைகளை அனுப்புவோர் editpage@hindutamil.co.in என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும். படைப்புகளை அஞ்சலில் அனுப்புவோர் பிரதி எடுத்துக்கொண்டு அனுப்பவும்; பிரசுரமாகாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. பத்திரிகையில் வெளியாகும் கட்டுரையாளர்கள் / பேட்டியாளர்களின் கருத்துகள் அவர்களுடைய சொந்தக் கருத்துகளே. அவை எந்த வகையிலும் இப்பத்திரிகையின் கருத்து ஆகாது.

வாசகர்களின் சூடான, சுவையான கருத்துகள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்கள் உடனடியாக எங்களை வந்தடைய feedback@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகலுக்கோ அனுப்புங்கள். அஞ்சல் மூலம் கடிதம் அனுப்ப: ஆசிரியர் இலாகா, இந்து தமிழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை - 2.




# எல்ஐசி என்னும் எஃகுக் கோட்டை

எல்ஜசியின் வாடிக்கையாளர்களாகிய எளிய மக்களிடம் சில தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தற்போது செய்துகொண்டிருக்கும் பிரச்சாரம் இதுதான்: 'எல்ஜசியைத் தனியாரிடம் தரப்போகிறார்களாம், உங்கள் பணத்தை உடனே எடுத்துவிடுங்கள்.' அது மட்டுமில்லை. 'அரசு தன் நிதித் தேவைகளுக்காக எல்ஜசியின் பங்குகளைக் கொஞ்சம் விற்பதாக அறிவித்துள்ளது...', 'அரசுக்கு எல்ஜசியில் 5% பங்குகள் மட்டுமே உள்ளன, அதைத்தான் விற்கிறது...' இப்படி ஏராளமான தவறான புரிதல்களும், தவறான பிரச்சாரங்களும் வலம்வந்துகொண்டிருக்கின்றன.

உண்மையில், எல்ஜசி முழுக்க முழுக்க 100% அரசு நிறுவனம். இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதலான பொதுத் துறை வங்கிகளில் கொஞ்சம் பங்கு விற்பனை செய்ததுபோலவே, எல்ஜசியிலும் செய்யப்போவதாக அரசு அறிவித்துள்ளது. அவை இப்போதும் அரசு வங்கிகளாகச் செயல்படுவதைப் போலவே எல்ஜசியும் தொடர்ந்து செயல்படும்.

**லாபம் இல்லை... உபரி!**

எல்ஜசியின் லாபத்தில் அரசு 5% மட்டும் தானே எடுத்துக்கொள்கிறது, அப்படியானால் அரசின் பங்கு அவ்வளவுதானே இருக்க முடியும்? அப்படி அல்ல! காப்பீட்டு நிறுவனங்களில் லாபம் என்ற ஒன்றே கிடையாது. பலரிடமிருந்தும் 'பிரிமியங்கள்' வாங்கி, அவற்றில் இழப்பு ஏற்பட்டவர்களுக்கு வழங்கியதுபோக மீதமிருப்பது உபரி என்று அழைக்கப்படும். அந்த உபரியில் நிறுவனத்தின் உரிமையாளர் சிறிய பங்கை எடுத்துக்கொண்டு, மீதத்தைப் பாலிசிதாரர்களுக்குத் தந்துவிட வேண்டும். அதனால்தான், வட்டி என்று எதுவும் இல்லாமல் 'போனஸ்' என்று அந்த 95% பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அப்படியானால், எல்ஜசியின் பாலிசிதாரர்களுக்குப் பாதிப்பே இல்லையா? இல்லை என்பதுதான் உண்மை. எல்ஜசியின் நிர்வாகத்தில் எந்த மாற்றமும் இல்லை என்பதுடன், எல்ஜசிக்கு அளித்துவருகிற அரசு உத்தரவாதத்தையும் தொடர்ந்து அளிக்கப்போவதாகவே அரசு கூறியுள்ளது. 64 ஆண்டுகளில் எல்ஜசி நஷ்டமே அடைந்ததில்லை என்பதால், 1956–ல் எல்ஜசி தொடங்கும்போது வழங்கப்பட்ட இந்த உத்தரவாதத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியமே வரவில்லை என்பது மறைக்கப்படுகிற மற்றொரு உண்மை. சரி, பாலிசிதாரர்களுக்கு எந்தப் பாதிப்புமே இல்லையென்றால் ஏன் ஊழியர்கள் போராடுகிறார்கள்? அவர்களின் வேலைக்கு ஆபத்தா? அதுவும் இல்லை. எல்ஜசியின் பாலிசிதாரர்கள், முகவர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு எந்தப் பாதிப்புமே வரப்போவதில்லை.

1947–ல் இந்தியா விடுதலை அடைந்தபோது, போதுமான உள்கட்டமைப்பு வசதிகளோ கனரகத் தொழில்களோ இல்லை. அவற்றைத் தொடங்க மிகப் பெரிய அளவில் நிதி தேவைப்பட்டது. ஆயுள் காப்பீடு என்பது நீண்ட காலத்துக்கானது என்பதால், மக்களின் பணம் அதிக காலம் காப்பீட்டு நிறுவனத்திடம் இருக்கும். இந்தியாவில் அப்போது இருந்த தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள், மக்கள் பணத்தைத் தங்கள் தொழில்களுக்குப் பயன்படுத்திக்கொண்டு, லாபம் வந்தால் தாங்கள் எடுத்துக்கொண்டு, நஷ்டம் வந்தால் மக்கள் தலையில் சுமத்தி, மக்களை ஏமாற்றிக்கொண்டிருந்தன. மக்கள் பணத்துக்குப் பாதுகாப்பு வேண்டும். அதேநேரத்தில், அது நாட்டுக்கும் பயன்பட வேண்டும் என்ற 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' நோக்கத்துடன் 1956–ல் அப்போதைய பிரதமர் நேருவும் நிதியமைச்சர் சி.டி.தேஷ்முக்கும் 245 தனியார் காப்பீட்டு நிறுவனங்களைத் தேசியமயமாக்கி எல்ஜசி நிறுவனத்தை உருவாக்கினர்.

அப்போது அந்த 245 நிறுவனங்களினுடைய பாலிசிதாரர்களின் பணத்தைத் திருப்பித்தர அந்த நிறுவனங்களிடம் போதுமான கையிருப்பு இல்லாததால், அதற்கு வசதியாக ரூ.5 கோடியை மத்திய அரசு வழங்கியது. அந்தக் கையிருப்பை முதலீடாகக் கணக்கில் காட்டிய எல்ஜசி, அன்று முதல் இன்று வரை நஷ்டம் அடையவே இல்லை. அடையாளபூர்வமாக உபரியில் 5%–ஐ அரசு எடுத்துக்கொள்ளத் தொடங்கியது.

**போராட்டங்கள் ஏன்?**

தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் மீண்டும் அனுமதிக்கப்பட்டபோது, குறைந்தபட்சம் ரூ.100 கோடி முதலீடுசெய்ய வேண்டும் என்ற விதி உருவாக்கப்பட்டது. எனவே, எல்ஜசி தனது லாபத்தில் 5% பங்காக ரூ.1,031 கோடியைக் கொடுத்த 2009–10–ல் அரசு ரூ.95 கோடியை முதலீடுசெய்வதாக அறிவித்தது. ஆக, அரசின் முதலீடு மொத்தம் ரூ.100 கோடியாகியது. ஆனாலும், 95% உபரியைப் பாலிசிதாரர்களுக்குப் பிரித்துத்தரும் நடைமுறையே இன்று வரை தொடர்கிறது. 2018–19–ம் ஆண்டுக்கு அரசுக்குரிய அந்த 5% லாபப் பங்காக, ரூ.2,610 கோடியை எல்ஜசி வழங்கியுள்ளது. ரூ.100 கோடி முதலீட்டுக்கு ரூ.2,610 கோடி லாபம் அளிக்கக்கூடிய ஒரு நிறுவனத்தின் பங்குகளை விற்பது அவசியமல்ல என்பதாலேயே அது எதிர்க்கப்படுகிறது.

மக்கள் பணத்தைப் பாதுகாப்பதுடன் மக்கள் சேமிப்பைத் திரட்டி அரசின் திட்டங்களுக்குத் தர வேண்டும் என்பதும் எல்ஜசி தொடங்கப்பட்டதற்கான நோக்கங்களில் அடிப்படையானது. அதன்படியே, இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு இதுவரை சற்றேறக்குறைய ரூ.35 லட்சம் கோடியை எல்ஜசி திரட்டித் தந்துள்ளது. தொடங்கப்பட்ட நோக்கத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றிவருகிற ஒரு நிறுவனத்தின் பங்குகளை விற்பது நியாயமல்ல என்பதால் அது எதிர்க்கப்படுகிறது.

தற்போது, எல்ஜசி ரூ.100 முதலீடுசெய்தால் அதில் ரூ. 85ஐ அரசின் பங்குகள், திட்டங்களில் முதலீடுசெய்கிறது. அரசுப் பத்திரங்களின் வட்டி விகிதம் மிகக் குறைவு என்றாலும், எல்ஜசி அவற்றில் முதலீடு செய்துவருகிறது. பங்கு விற்பனைக்குப் பின், இதைவிட லாபம் தரும் முதலீடுகளை நோக்கி எல்ஜசியின் முதலீடுகள் திருப்பிவிடப்பட்டால் அரசுக்குக் கிடைக்கும் நிதி குறையும். சாப்பிட்டால் ஜிஎஸ்டி, கடனுக்கு வட்டி கட்டினால் ஜிஎஸ்டி என்று ஏற்கெனவே சகலத்துக்கும் எளிய மக்கள் மீது வரிகளைச் சுமத்தும் அரசு, ஆண்டுக்கு சுமார் ரூ.4 லட்சம் கோடி (2017–18–ல் ரூ.3.82 லட்சம் கோடி!) எல்ஜசி செய்யும் முதலீடு கிடைக்காவிட்டால் இன்னும் வரி போடுமே! அது எல்ஜசியின் பாலிசிதாரர்கள், முகவர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொதுமக்களையும் பாதிக்கும் என்பதால், மக்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்து நிற்கிறார்கள். எல்ஜசி மீது அடி விழுந்தால், அனைத்து மக்கள் மீதும் விழும் என்பதாலேயே அது எதிர்க்கப்படுகிறது.

2018–19 நிதிநிலை அறிக்கையில் திட்டமிட்டதைவிட ரூ.1.7 லட்சம் கோடி குறைவாகவே உண்மையான வருவாய் வந்துள்ளது. இதைத்தான், 'இந்தியப் பொருளாதாரம் ஒரு அமைதியான மாரடைப்பைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது' என்று கடந்த ஆண்டு வரை பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவில் இருந்தவரான ரத்தின் ராய் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறான மோசமான சூழலில், எல்ஜசியின் பங்குகளும் விற்கப்படுவது என்பது அரசின் நிதிநிலையை மேலும் மோசமாக்கவே செய்யும் என்பதாலும், இந்தியப் பொருளாதாரத்துக்கு அது நல்லதல்ல என்பதாலுமே எல்ஜசியின் ஊழியர்கள் இன்று போராட்டக்களத்தில் நிற்கிறார்கள்.

**தொடரும் நம்பிக்கை**

எவ்வளவு லாபம் ஈட்டினாலும் மக்கள் பணத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தை எல்ஜசி என்றுமே விட்டுக்கொடுக்கவில்லை. மற்ற துறைகளில் எல்லாம் தனியாரின் சேவையே சிறப்பு என்று நம்பவைக்கப்பட்டாலும், ஆயுள் காப்பீட்டில் இன்று வரை எல்ஜசிதான் மிக அதிக விகிதத்தில் பாலிசிதாரர்களின் பணத்தைத் திருப்பித்தருகிறது. அதனால்தான், 2000–ல் தனியார் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்ட பின், 23 தனியார் நிறுவனங்கள் ஏறக்குறைய 20 ஆண்டுகளாக முயன்றும் 70–75% சந்தைப் பங்கை எல்ஜசியே கொண்டிருக்கிறது. வங்கி, தொலைத்தொடர்பு என்று தனியார் முதலீடு அனுமதிக்கப்பட்ட அனைத்துத் துறைகளிலும் முக்கிய இடத்தைக் கைப்பற்றிய தனியார் நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டுத் துறையில் மட்டும் சராசரியாக 1% சந்தைப் பங்கை மட்டுமே கொண்டிருக்கின்றன.

எல்ஜசியுடன் நியாயமாகப் போட்டியிட்டு அதைத் தோற்கடிக்க முடியாது என்பதால்தான், 'எல்ஜசி தனியார்மயமாகிறது, பணம் போய்விடும்' என்று பிரச்சாரம் செய்கிறார்கள். 5% அல்லது 10% எல்ஜசியின் பங்குகள் விற்கப்பட்டாலே அங்கு மக்கள் பணம் பாதுகாப்பாக இருக்காது என்றால், 100% பங்குகள் தனியாரிடம் உள்ள நிறுவனங்களில் பாதுகாப்பு எப்படி இருக்கும் என்று மக்கள் சிந்திக்க மாட்டார்களா? எல்ஜசி பாதுகாப்பாகத்தான் உள்ளது, அதிலுள்ள மக்களின் பணமும் பாதுகாப்பாகத்தான் உள்ளது. ஆனால், எல்ஜசியின் பங்கு விற்பனை நாட்டுக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் மக்களுக்கும் நல்லதல்ல.

- அறிவுக்கடல், தொடர்புக்கு: kadal27@gmail.com

> “ எல்ஜசியுடன் நியாயமாகப் போட்டியிட்டு அதைத் தோற்கடிக்க முடியாது என்பதால்தான், 'எல்ஜசி தனியார்மயமாகிறது, பணம் போய்விடும்' என்று பிரச்சாரம் செய்கிறார்கள்.


360°

### இப்படித்தான் உருவானது எல்ஜசி

ஜனவரி 19, 1956 அன்று இரவில் ஆயுள் காப்பீட்டைத் தேசியமயமாக்கவும், 243 தனியார் காப்பீட்டு நிறுவனங்களை அரசுக் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளவும் வகைசெய்யும் அவசரச் சட்டம் இயற்றப்பட்டு, குடியரசுத் தலைவரால் ஒப்புதலும் பெறப்பட்ட தகவல் வெளியானது. அதுவரைக்கும் அந்த அறிவிப்பை மிகவும் ரகசியமாகவே வைத்திருந்தார் அன்றைய மத்திய நிதியமைச்சர் சி.டி.தேஷ்முக். அடுத்த நாள், தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் திறக்கப்பட்டபோது, அதிர்ச்சிகள் காத்திருந்தன. அந்நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளையே பொறுப்பாளராக்கி, மத்திய அரசு பணிநியமன ஆணைகளை வழங்கியது. காப்பீடு குறித்த அனைத்து விவரங்களையும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டது. தேசியமயமாக்கும் நடவடிக்கை இவ்விதமாக ஒரு சில மணி நேரங்களிலேயே நடந்து முடிந்தது. அடுத்துவந்த ஒவ்வொரு வார இறுதியிலும் மும்பையில் இருந்த ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அப்போதைய நிதிச் செயலரும் எல்ஜசியின் தலைவருமான ஹெச்.எம்.படேல் அந்தக் கூட்டங்களைத் தலைமையேற்று நடத்தினார். ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் பணியாற்றிய ஊழியர்களின் விவரங்களும் திரட்டப்பட்டன. செப்டம்பர் 1, 1956 அன்று எல்ஜசியைத் தொடங்குவதற்கு நாள் குறிக்கப்பட்டிருந்தது. அதே நாளில் காப்பீட்டு நிறுவன ஊழியர்களை எல்ஜசியின் ஊழியர்களாகப் பணியில் நியமிக்கவும் ஏற்பாடானது. ஊழியர்களும் தாங்கள் நியமிக்கப்படுகிற இடத்தில் பணிபுரியத் தயாராகவே இருந்தார்கள். ஆயுள் காப்பீட்டைத் தேசியமயமாக்குவது குறித்தும், தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களை இணைத்து புதிய நிறுவனத்தை உருவாக்குவது குறித்தும் தனித்தனியாக இரண்டு சட்டங்கள் இயற்றப்பட்டன. செப்டம்பர் 1, 1956 அன்று எல்ஜசி தொடங்கப்பட்டது. தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் 97 மையங்களில் மட்டுமே செயல்பட்டுவந்தன. எல்ஜசியின் தொடக்கமோ 5 பிராந்திய அலுவலகங்கள், 33 கோட்டங்கள், 200 கிளைகள் என்று நாடு முழுவதையும் இணைத்துவைத்தது.

### ஏழைகளின் பாதுகாவலன்

இந்திய மக்கள் அனைவரிடமும் காப்பீட்டைப் பரப்புவதும் எல்ஜசி தொடங்கப்பட்டதற்கான நோக்கங்களுள் முக்கியமானது. இந்திய மக்களில் பெரும் பகுதியினர் குறைந்த வருவாய் கொண்டவர்களே. அவர்களுக்கும் காப்பீடு அளிப்பதால்தான் எல்ஜசியின் சராசரிப் பிரிமிய வருவாய் ரூ.13,127 ஆக உள்ளது. ஆனால், தனியார் நிறுவனங்கள் பெரும் செல்வந்தர்களுக்கு மட்டுமே காப்பீடு அளிப்பதால்தான் அவற்றின் சராசரிப் பிரிமிய வருவாய் ரூ.56,383 ஆக உள்ளது. சரியாகச் சொன்னால், செலவு குறைவான இந்தப் பெரிய பிரிமியங்களும் எல்ஜசியிடம் வந்திருந்தால், அரசுக்குக் கூடுதல் நிதியும் லாபமும் பாலிசிதாரர்களுக்குக் கூடுதல் போனஸும் கிடைத்திருக்கும்.



### நொடிக்கு நொடி...

2018-19 நிதியாண்டில் பாலிசிதாரர்களுக்கு எல்ஜசி வழங்கியுள்ள தொகை ரூ.1.63 லட்சம் கோடி. அதாவது, வேலை நாளின் ஒவ்வொரு நொடியிலும் ரூ.2.72 லட்சம் பாலிசிதாரர்களுக்கு எல்ஜசி பாதுகாப்பாகத் திருப்பி அளித்துக்கொண்டிருக்கிறது. பணம் பெற்றவர்கள் 2.6 கோடிப் பேர். அதாவது, ஒவ்வொரு நொடிக்கும் 4.34 பேருக்கு எல்ஜசி பணம் வழங்குகிறது.

### காப்பீட்டின் உண்மையான பலன்

பாலிசி எடுக்கும்போது நோய்களை மறைத்தல் உள்ளிட்ட காரணங்களால் இறந்த பின் காப்பீட்டுத் தொகை மறுக்கப்படலாம். கடந்த ஆண்டில் அவ்வாறு எல்ஜசியால் 10 ஆயிரத்துக்கு 67 என்ற விகிதத்தில் உரிமங்கள் மறுக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், தனியாரால் 10 ஆயிரத்துக்கு 397 என்ற விகிதத்தில் உரிமங்கள் மறுக்கப்பட்டுள்ளன. எப்படியாவது மக்களுக்கு வழங்கிவிடுவது எல்ஜசியின் நோக்கமாக இருப்பதையே இது காட்டுகிறது.

### உலகிலேயே நம்பர் 1

எல்ஜசியின் நடப்பிலுள்ள பாலிசிகள் 29.09 கோடி. 11.61 கோடி குழுக் காப்பீட்டுப் பாலிசிதாரர்களையும் சேர்த்தால் மொத்தம் 40.7 கோடிப் பேருக்கு எல்ஜசி காப்பீடு அளித்துள்ளது. 142 கோடி மக்களைக் கொண்ட சீனா, 134 கோடி மக்களைக் கொண்ட இந்தியா ஆகியவற்றுக்கு அடுத்து எல்ஜசியின் பாலிசிதாரர் எண்ணிக்கையே அதிகம்! மூன்றாவது பெரிய மக்கள்தொகை கொண்ட நாடான அமெரிக்காவின் 33 கோடி மக்கள்தொகையைவிட எல்ஜசியின் பாலிசிதாரர்கள் எண்ணிக்கை 23.7% அதிகம். உலகிலேயே மிக அதிகம் பேருக்குக் காப்பீடு வழங்கியுள்ள நிறுவனம் எல்ஜசிதான்.

டெல்லியில் நடந்த கலவரத்துக்கு பாஜகவே காரணம். இதுவே அக்கட்சியினரின் குஜராத் முன்மாதிரி ஆகும். இது, மக்களிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்தும் அரசியலே தவிர வேறொன்றும் இல்லை.

● **அகிலேஷ் யாதவ்,** சமாஜ்வாதி கட்சித் தலைவர் ●





டெல்லி கலவரம் வேதனையளிக்கிறது. இந்த விவகாரத்தில் பிரதான கட்சிகள் அநாகரிகமான அரசியலில் ஈடுபட்டு வருகின்றன. கலவரம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் மேற்பார்வையில் விசாரணை நடைபெற வேண்டும்.

● **மாயாவதி,** பகுஜன் சமாஜ் தலைவர் ●

## சின்னச் சின்னதாய்...



▲ இந்தியா வந்துள்ள மியான்மர் அதிபர் யு வின் மின்ட் டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று சந்தித்துப் பேசினார். அப்போது இருதரப்பு உறவை பலப்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர். படம்: பிடிஐ

### சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு பிஹார் பேரவையில் மீண்டும் தீர்மானம்

**பெங்களூரு:** வரும் ஏப்ரல் மாதம் முதல் நாடு முழுவதும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்க உள்ளது. இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பை சாதி அடிப்படையில் நடத்த வேண்டும் என்று பிஹார் சட்டப்பேரவையில் நேற்று தீர்மானம் கொண்டுவரப்பட்டது. சட்டப்பேரவையின் உணர்வுகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்க இது சரியான தருணம் என்றும் மாநிலத்தில் எல்லா கட்சிகளின் ஆதரவும் இதற்கு உள்ளதாகவும் சபாநாயகர் விஜய் குமார் சவுத்ரி அறிவித்தார். இதைத் தொடர்ந்து தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

ஏற்கெனவே, கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ம் தேதி சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று பிஹார் சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேபோன்ற தீர்மானம் நேற்று மீண்டும் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்டது. கடந்த செவ்வாய்கிழமையன்று தேசிய குடியுரிமை திருத்தச் சட்டத்தை அமல்படுத்த மாட்டோம் என்று பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போது பேசிய முதல்வர் நிதிஷ் குமார் சாதி வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை என்று அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

### பெங்களூரு சர்வதேச திரைப்பட விழாவில் ஒத்த செருப்பு உட்பட 2 தமிழ் படங்கள்

**பெங்களூரு:** பெங்களூரு சர்வதேச திரைப்பட விழா நேற்று தொடங்கியது. ராஜாஜி நகர் ஓரியன் மாலில் மார்ச் 4-ம் தேதி வரை 7 நாட்களுக்கு திரைப்பட விழா நடைபெறுகிறது. பெங்களூருவில் உள்ள கண்டீரா அரங்கத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தொடக்க விழாவில் முதல்வர் எடியூரப்பா, நடிகர் யஷ், நடிகை ஜெயப்பிரதா, தயாரிப்பாளர் போனி கபூர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த திரைப்பட விழாவில் கன்னடம், தமிழ், மலையாளம், இந்தி உள்ளிட்ட இந்திய மொழிகளின் திரைப்படங்கள் மட்டுமின்றி 60 நாடுகளைச் சேர்ந்த 225 திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. கன்னடம், இந்தியா, சர்வதேசம், ஆவணப்படம் உள்ளிட்ட 7 பிரிவுகளின் கீழ் திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. இந்தியப் பிரிவில் இயக்குநர் பார்த்திபன் இயக்கி நடித்த ஒத்த செருப்பு, இயக்குநர் ஹலிதா ஷமீம் இயக்கிய சில்லுக்கருப்பட்டி ஆகிய 2 தமிழ்த் திரைப்படங்கள் மட்டுமே திரையிட தேர்வு செய்யப்பட்டுள்ளன.

திரைப்பட விழாவை முன்னிட்டு பல்வேறு கருத்தரங்குகள், பயிலரங்குகளும் நடைபெறுகின்றன. இதில் இந்திய திரைக் கலைஞர்கள் மட்டுமின்றி ஈரான், பிரான்ஸ், இலங்கை, கொரியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இயக்குநர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் பங்கேற்று திரைக்கலை குறித்து உரையாற்றுகின்றனர்.

### டெல்லியில் அமைதி திரும்புவதை அரசு உறுதி செய்ய வேண்டும்: ஆர்எஸ்எஸ்

**நாக்பூர்:** டெல்லியில் அமைதி திரும்புவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று ஆர்எஸ்எஸ் பொதுச் செயலாளர் சுரேஷ் பையாஜி ஜோஷி கூறினார்.

திருத்தப்பட்ட குடியுரிமை சட்டம் தொடர்பாக வடகிழக்கு டெல்லியின் பல்வேறு இடங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வன்முறை வெடித்தது. இதில் இதுவரை 34 பேர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பாக ஆர்எஸ்எஸ் பொதுச் செயலாளர் சுரேஷ் பையாஜி ஜோஷி நேற்று நாக்பூரில் செய்தியாளர்களிடம் கூறும்போது, "சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக்கொள்ள யாருக்கும் உரிமை இல்லை. வன்முறையால் பாதிக்கப்பட்ட இடங்களில் அமைதி திரும்புவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்" என்றார். - பிடிஐ

## சோனியா, ராகுல், பிரியங்கா மீது வழக்கு பதிவு செய்யக் கோரி மனு

■ புதுடெல்லி

வெறுப்புணர்வை தூண்டும் வகையில் பேசிய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி மீது வழக்கு பதிவு செய்ய உத்தரவிடக் கோரி டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

டெல்லியில் கடந்த சில நாட்களாக வன்முறை நீடித்து வருகிறது. இதுதொடர்பாக பாஜக, காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றன.

இதனிடையே வழக்கறிஞர்களின் குரல் என்ற அமைப்பின் சார்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் வெறுப்புணர்வை தூண்டும் வகையில் பேசினர். அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட வேண்டும்.

இதே விவகாரம் தொடர்பாக டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, ஆம் ஆத்மி எம்எல்ஏ அமானுதுல்லா கான், ஏஐஎம்ஐஎம் கட்சியின் தலைவர் அக்பருதீன் ஒவைசி, அந்த கட்சியின் முன்னாள் எம்எல்ஏ வாரிஸ் பதான் ஆகியோர் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு தலைமை நீதிபதி டி.என்.படேல், நீதிபதி ஹரி சங்கர் முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுவை தலைமை நீதிபதி விசாரணைக்கு ஏற்றுக் கொண்டார். இம்மனு இன்று பட்டியலிடப்படுகிறது.

## கருத்துச் சித்திரம்

கருத்து: **மலர்சூர்யா,** புதுச்சேரி.




▲ வாசகர்களே... இந்த இடம் உங்களுக்கு. கருத்துச் சித்திரத்துக்கான உங்கள் எண்ணத்தை முடிந்தவரையில் வரைந்தோ, எழுத்தில் விவரித்தோ அனுப்பிவையுங்கள். சிறந்த கருத்துகளைச் சித்திரமாக்க எங்கள் ஓவியர் காத்திருக்கிறார். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகல் எண்ணுக்கோ உங்கள் எண்ணங்களை அனுப்பலாம். பிரசுரிக்கப்படும் கருத்துச் சித்திரங்களுக்குத் தக்க சன்மானம் காத்திருக்கிறது.

**உங்கள் அலைபேசி / தொலைபேசி எண் மற்றும் பின்கோடு ஆகியவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்பவும்.**

உளவுத் துறை அதிகாரி கொலையில்

## ஆம் ஆத்மி கவுன்சிலருக்கு தொடர்பு?

■ புதுடெல்லி

டெல்லி கலவரத்தை ஆம் ஆத்மி கவுன்சிலர் முகமது தாஹிர் உசேன் (42) முன்னின்று நடத்தியதாகவும் உளவுத் துறை அதிகாரி அன்கிட் சர்மாவின் (26) கொலையில் அவருக்கு தொடர்பிருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

டெல்லி மாநகராட்சியின் 59-வது வார்டான நேரு விஹார் கவுன்சிலராக முகமது தாஹிர் உசேன் பதவி வகிக்கிறார். முஸ்தபாபாத் பகுதியில் உள்ள 5 மாடிகள் கொண்ட வீட்டில் இவர் வசிக்கிறார். இவரது வீட்டுக்கு அருகே பாஜக முன்னாள் கவுன்சிலர் மேகக் சிங்கின் குடோன் உள்ளது. இந்த குடோனில் ஏராளமான கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன. கலவரத்தின் போது இந்த கார்கள் அனைத்தும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. அப்பகுதியைச் சேர்ந்த சிலரின் வீடுகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது. ஆனால் தாஹிர் உசேன் வீட்டுக்கு எவ்வித சேதமும் இல்லை.



▲ முகமது தாஹிர் உசேன்

அவரது வீட்டில் இருந்து பெட்ரோல் குண்டுகள், அமிலம், கத்தி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவரது வீட்டுக்கு அருகில் உள்ள கால்வாயில் உளவுத் துறை அதிகாரி அன்கிட் சர்மாவின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

காலையில் பணிக்குச் சென்று மாலையில் வீடு திரும்பிய அன்கிட் சர்மாவை காணவில்லை. அவரை கவுன்சிலர் முகமது தாஹிர் உசேன் தலைமையிலான கும்பல் கடத்திச் சென்று கொலை செய்துவிட்டதாக குடும்பத்தினர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதனை கவுன்சிலர் முகமது தாஹிர் உசேன் மறுத்துள்ளார். அவர் கூறும்போது, "கடந்த 24-ம் தேதி எனது வீட்டை ஒரு கும்பல் முற்றுகையிட்டது. நான் போலீஸாரிடம் உதவி கோரினேன். போலீஸார் விரைந்து வந்து என்னையும் எனது குடும்பத்தினரையும் மீட்டு அழைத்துச் சென்றனர். கடந்த 25-ம் தேதி வீட்டுக்கு திரும்பியபோது கலவரம் அதிகரித்திருந்தது. போலீஸாரின் அறிவுரைப்படி நான் எனது வீட்டுக்கு செல்லவில்லை. எனக்கும் கலவரத்துக்கும் துளியும் தொடர்பில்லை" என்று தெரிவித்துள்ளார்.

இந்த விளக்கத்தை பாஜக வட்டாரங்கள் மறுத்துள்ளன. கலவரத்தில் ஈடுபட்டதற்கு ஆதாரமாக முகமது தாஹிர் உசேன் கையில் தடியுடன் இருக்கும் புகைப்படத்தை பாஜக வட்டாரங்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளன.

இந்த பின்னணியில் கவுன்சிலர் முகமது தாஹிர் உசேனின் வீட்டுக்கு போலீஸார் நேற்று சீல் வைத்தனர். உளவுத் துறை அதிகாரி கொலை குறித்தும் கவுன்சிலர் வீட்டில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் குறித்தும் டெல்லி போலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆம் ஆத்மி மூத்த தலைவர்கள் சஞ்சய் சிங், கோபால் ராய் டெல்லியில் நேற்று கூறும்போது, "கலவரத்தில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முகமது தாஹிர் உசேன் அல்லது கபில் மிஸ்ரா, யாராக இருந்தாலும் மதம், சாதி பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்தனர்.

தீவிரவாத செயலுக்கு நிதி

## வங்கதேச தீவிரவாதி உட்பட 2 பேர் குற்றவாளிகள்

● கொல்கத்தா நீதிமன்றம் தீர்ப்பு

■ கொல்கத்தா

சட்டவிரோத பணப் பரிவர்த்தனை மற்றும் தீவிரவாத செயலுக்கு நிதி வழங்கியது தொடர்பான வழக்கில் வங்கதேச தீவிரவாதி உட்பட 2 பேர் குற்றவாளிகள் என கொல்கத்தா நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.

மேற்கு வங்க மாநிலம் புர்த்வான் நகரில் உள்ள ஒரு வீட்டில் கடந்த 2014-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி குண்டு வெடித்தது. இதில் 2 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு (என்ஐஏ) சட்டவிரோத செயல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தது. இதில் வங்கதேச ஜமாத்-உல்-முஜாஹிதீன் (ஜேஎம்பி) தீவிரவாத அமைப்பின் ரஹமத்துல்லா (எ) சாஜித் மற்றும் இந்தியரான முகமது புர்ஹான் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இவர்கள் தீவிரவாத செயலுக்கு நிதியுதவி வழங்கியது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து, சட்டவிரோத பணப் பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ் இவர்கள் மீது அமலாக்கத் துறையும் வழக்கு பதிவு செய்தது.

இது தொடர்பாக கொல்கத்தா செஷன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து, சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ் இவர்கள் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது.

### 17-ல் தண்டனை விவரம்

விசாரணை முடிந்த நிலையில், வங்கதேசத்தைச் சேர்ந்த ரஹமத்துல்லாவும் முகமது புர்ஹானும் குற்றவாளிகள் என கொல்கத்தா நீதிமன்றம் நேற்று அறிவித்தது. இவர்களுக்கான தண்டனை விவரம் அடுத்த மாதம் 17-ம் தேதி அறிவிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடுமையாக்கப்பட்ட சட்டவிரோத பணப் பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ் வெளிநாட்டவரை குற்றவாளி என அறிவித்திருப்பது 2-வது முறையாகும். கடந்த 2017-ம் ஆண்டு பாகிஸ்தானைச் சேர்ந்த அல்-பாத் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த ஒருவர் இந்த சட்டத்தின் கீழ் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. - பிடிஐ

பிரதமர் மோடி பாராட்டிய

## 105 வயதான மூதாட்டிக்கு விரைவில் ஆதார் கார்டு

■ திருவனந்தபுரம்

கேரள மாநிலம் கொல்லத்தைச் சேர்ந்த 105 வயதான மூதாட்டி பாகீரதி அம்மாள். சிறு வயதில் குடும்ப சூழல் காரணமாக 3-வது வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்தினார்.

எனினும், படிப்பு மீது கொண்ட ஆர்வம் காரணமாக வயது முதிர்ந்த நிலையிலும் சுற்றுச் சூழல், கணிதம், மலையாளம் ஆகிய பாடங்களில் மாநில எழுத்தறிவு இயக்கம் நடத்திய தேர்வை எழுதி சுமார் 70 சதவீத மதிப்பெண்களைப் பெற்று வெற்றி பெற்றார். இவரைப் பற்றி பிரதமர் நரேந்திர மோடி தனது சமீபத்திய 'மன் கி பாத்' உரையில் குறிப்பிட்டு பாராட்டினார்.

இதனிடையே, ஆதார் கார்டு இல்லாததால் அரசு நலத்திட்ட உதவிகளைப் பெற முடியவில்லை என்று பாகீரதி அம்மாள் சமீபத்தில் கவலை தெரிவித்திருந்தார். இந்த செய்தி ஊடகங்களில் வெளியானது. இதையறிந்த, அதிகாரிகள் சமீபத்தில் பாகீரதி அம்மாளின் வீட்டுக்குச் சென்று அவருக்கு ஆதார் கார்டு வழங்க தேவையான நடைமுறைகளை மேற்கொண்டனர்.

"ஏற்கெனவே ஆதார் கார்டு பெற பாகீரதி அம்மாள் முயற்சித்ததாகவும் ஆனால், அவரது வயது முதிர்வு காரணமாக கைரேகைப் பதிவு எடுக்க முடியாததால் தொழில்நுட்பக் காரணங்களால் ஆதார் கார்டு வழங்கப்படவில்லை. இப்போது அதற்கான நடைமுறைகள் முடிந்த நிலையில், ஒரு சில நாட்களில் அவருக்கு ஆதார் கார்டு வழங்கப்படும்" என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

டெல்லி கலவரத்துக்கான பின்னணி என்ன?

## வாட்ஸ் அப் குழுக்கள், வெளி மாநிலத்தவர்களின் தொடர்பு குறித்து போலீஸார் விசாரணை

ஆர்.ஷபிமுன்னா

■ புதுடெல்லி

டெல்லி கலவரம் தொடர்பாக வாட்ஸ்அப்குழுக்கள்மற்றும்வெளி மாநிலத்தவர்களின் தொடர்பு குறித்து விசாரணை தொடங்கியுள்ளது.

டெல்லியில் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடியவர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக வெடித்தது. வடகிழக்கு டெல்லியில் நடந்த இந்த கலவரத்தில் 34 பேர் பலியாகியுள்ளனர். இதில், டெல்லியின் தலைமை காவலர் மற்றும் உளவுப்பிரிவு காவலரும் அடங்குவர். இக்கலவரம் ஏற்படுவதற்கு வாட்ஸ் அப்பில் வெளியான பல்வேறு வகை வதந்திகளும் முக்கியக் காரணம் எனத் தெரியவந்துள்ளது. இதன் பின்னணியில், டெல்லிக்கு வெளியே உள்ள மாநிலங்களைச் சேர்ந்த வாட்ஸ்அப் குழுக்கள் இருப்பதாக கருதப்படுகிறது.

இதேபோல், வடகிழக்கு பகுதியை ஒட்டியுள்ள உத்தரபிரதேசத்தில் இருந்து ஊடுருவியவர்களும் கலவரத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதுதொடர்பான புகாரால், டெல்லியின் எல்லைகளுக்கு சீல் வைக்கப்பட்டன. தற்போது அவர்களை கண்டறிவதற்காக டெல்லி போலீஸாரால் ஒரு தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

இதில், சாந்த்பாக் பகுதியில் பிணமாக மீட்கப்பட்ட டெல்லி உளவுத்துறை காவலர் அங்கித் சர்மா மற்றும் தலைமை காவலர் ரத்தன்லால் கொல்லப்பட்ட வழக்கிலும் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

கலவரம் பற்றிய தகவல் அளிக்க டெல்லி போலீஸார் சார்பில் 112 எனும் சிறப்பு தொலைபேசி எண் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தகவல் அளிப்பவர்களின் விவரங்கள் ரகசியமாக வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலவரத்தின்போது டெல்லிவாசிகளின் வாட்ஸ்அப்பில் பல புகைப்படங்களும், வீடியோ பதிவுகளும் பரவி பதற்றத்தை ஏற்படுத்தின. இவற்றில் பல பதிவுகள் உ.பி. உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் பதிவான பழைய வீடியோக்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக டெல்லி போலீஸாரின் சமூக வலைதள விசாரணை பிரிவு, அவற்றை அனுப்பியவர்கள் பட்டியலை சேகரித்து வருகிறது. அவர்கள் அனைவரும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனத் தெரிகிறது.



▲ டெல்லியில் கலவரம் நடந்த பகுதியில் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். வீரர்களுக்கு நடுவே சாலையில் நடந்து செல்கிறார் ஒரு பெண்.



▲ குடியுரிமைச் சட்டம் தொடர்பாக வடகிழக்கு டெல்லியில் நடைபெற்ற கலவரத்தின்போது அங்குள்ள ஷிவ்புரி பகுதியில் உள்ள பள்ளி ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.



▲ கலவரத்தின்போது நடந்த கல்வீச்சு மற்றும் தீ வைப்பு சம்பவங்களால் ஷிவ் விஹார் பகுதி போர்க்களம் போல காட்சி அளிக்கிறது. படங்கள்: பிடிஐ



▲ சீனாவின் வூஹான் நகரத்திலிருந்து விமானப்படை விமானத்தில் டெல்லிக்கு நேற்று அழைத்து வரப்பட்ட இந்தியர்கள், சிறப்பு முகாம்களுக்கு செல்வதற்காக வரிசையில் காத்திருந்தனர். படம்: பிடிஐ

## சீனாவின் வூஹான் நகரிலிருந்து

# 76 இந்தியர்கள் உட்பட 112 பேரை மீட்டு வந்தது ராணுவ விமானம்

■ புதுடெல்லி

கோவிட் - 19 வைரஸ் அச்சுறுத்தலின் காரணமாக, சீனாவின் வூஹான் நகரில் தங்கியிருந்த 76 இந்தியர்கள் உட்பட 112 பேர் விமானப்படை விமானத்தின் மூலமாக நேற்று டெல்லி அழைத்து வரப்பட்டனர்.

சீனாவின் ஹுபெய் மாகாணத்தில் உள்ள வூஹான் நகரத்தில்தான் முதன்முதலில் கோவிட் - 19 வைரஸ் பரவத் தொடங்கியது. பின்னர், படிப்படியாக சீனாவின் அனைத்து மாகாணங்களுக்கும் அந்த வைரஸ் காய்ச்சல் பரவியது. இந்தக் காய்ச்சலுக்கு இதுவரை அங்கு 2,744பேர் உயிரிழந்திருக்கின்றனர். 78,497 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வூஹான் நகரில் வசித்து வந்த 650 இந்தியர்களை ஏர்-இந்தியா விமானம் மூலமாக மத்திய அரசு அண்மையில் மீட்டது. எனினும், அந்நகரில் 70-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் இருந்தனர்.

எனவே, அவர்களை மீட்பதற்காகவும், சீனாவில் கோவிட் - 19 வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காகவும் ராணுவ சரக்கு விமானத்தை அனுப்ப மத்திய அரசு முடிவு செய்தது.

இந்த விமானம் கடந்த 20-ம் தேதி சீனா செல்ல இருந்த நிலையில், அந்நாட்டு அரசு இதற்கு அனுமதி வழங்கவில்லை. இதனால் அன்றைய தினம், சீனாவுக்கு விமானம் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, அதற்கு அடுத்து ஒவ்வொரு நாளும் இந்தியத் தரப்பில் இருந்து அனுமதி கோரப்பட்ட போதிலும் சீனா இசைவு வழங்க மறுத்து வந்தது. இதன் காரணமாக, வூஹான் நகரில் உள்ள இந்தியர்களை மீட்பதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரிகள் தொடர்ந்து நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாக, இந்திய ராணுவ விமானம் செல்வதற்கு சீன அரசு அனுமதி வழங்கியது.

இதையடுத்து, இந்திய விமானப் படைக்கு சொந்தமான சி-17 ரக ராணுவ சரக்கு விமானம் சீனாவின் வூஹான் நகருக்கு நேற்று முன்தினம் மாலை சென்றடைந்தது. பின்னர், அங்கிருந்த சீன அதிகாரிகளிடம் 15 டன் எடைகொண்ட மருத்துவ உபகரணங்கள் ஒப்படைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, வூஹான் நகரில் தங்கியிருந்த 76 இந்தியர்கள், 36 வெளிநாட்டினர் என மொத்தம் 112 பேருடன் ராணுவ விமானம் டெல்லிக்கு நேற்று அதிகாலை திரும்பியது.

மீட்கப்பட்ட வெளிநாட்டினரில் 23 பேர் வங்கதேசத்தையும், 6 பேர் சீனாவையும் சேர்ந்தவர்கள் ஆவர். மாலத்தீவு, மியான்மர் நாடுகளைச் சேர்ந்த தலா 2 பேர், தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, மடகாஸ்கர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒருவர் என மொத்தம் 36 பேர் மீட்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் டெல்லியில் உள்ள இந்தோ - திபெத் எல்லைக் காவல் படை சிறப்பு முகாம்களில் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### ஜப்பானிலிருந்து 124 பேர் மீட்பு

இதேபோல், ஜப்பானின் யோகோஹமா துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள டைமண்ட் பிரின்சஸ் சொகுசுக் கப்பலில் இருந்து 124 இந்தியர்கள் மற்றும் 5 வெளிநாட்டினர் ஏர்-இந்தியா விமானம் மூலம் நேற்று மீட்கப்பட்டு டெல்லி அழைத்து வரப்பட்டனர்.

## டெல்லி கலவரம் தொடர்பான வழக்கை விசாரித்து வந்த

# நீதிபதி எஸ்.முரளிதர் பணியிட மாற்றம்

● வழக்கமான நடவடிக்கை என மத்திய அமைச்சர் விளக்கம்

■ புதுடெல்லி

டெல்லி கலவரம் குறித்த வழக்கை விசாரித்து வந்த உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.முரளிதர் பஞ்சாப் மற்றும் ஹரியாணா உயர் நீதிமன்றத்துக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இது பழிவாங்கும் நடவடிக்கை என காங்கிரஸ் குற்றம்சாட்டி உள்ளது.

டெல்லியில் நடந்த கலவரம் தொடர்பாக டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு நீதிபதி எஸ்.முரளிதர் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, கலவரத்தைத் தடுக்கத் தவறிவிட்டதாகக் கூறி டெல்லி போலீஸாருக்கு கண்டனம் தெரிவித்த நீதிபதி முரளிதர், கலவரத்தை தூண்டியதாக கூறப்படும் புகாரின் பேரில் 3 பாஜக மூத்த தலைவர்கள் மீது வழக்கு பதிவு செய்யவும் உத்தரவிட்டார்.

இந்நிலையில், மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.முரளிதர் பஞ்சாப் மற்றும் ஹரியாணா உயர் நீதிமன்றத்துக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியுடனான ஆலோசனைக்குப் பிறகு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இந்த முடிவை எடுத்தார்" என கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர் எப்போது பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்பது பற்றி அதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இதனிடையே, இந்த நடவடிக்கை பாஜக தலைமையிலான மத்திய அரசின் பழிவாங்கும் செயல் என காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டி உள்ளது.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தனது ட்விட்டர் பக்கத்தில், "நீதிபதி முரளிதர் திடீரென பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இது துணிச்சல் மிக்க நீதிபதி லோயா பணியிட மாற்றம் செய்யப்பட்டதை நினைவுபடுத்துவதாக உள்ளது" என பதிவிட்டுள்ளார்.

குஜராத் போலி என்கவுன்ட்டர் வழக்கை விசாரித்து வந்த நீதிபதி லோயா, பணியிட மாற்றம் செய்யப்பட்டார். பின்னர் 2014-ம் ஆண்டு டிசம்பர் 1-ம் தேதி அவர் மாரடைப்பால் மரணமடைந்தார். ஆனால் இவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக குற்றம்சாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி ட்விட்டரில், "இப்போதைய ஆட்சியில், நீதிபதி முரளிதர் நள்ளிரவில் பணியிட மாற்றம் செய்யப்பட்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால் அது வருத்தமான மற்றும் அவமானகரமான செயல்" என பதிவிட்டுள்ளார்.

இதுபோல, டெல்லி கலவர வழக்கிலிருந்து பாஜக மூத்த தலைவர்களை காப்பாற்றவே, முரளிதர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார் என காங்கிரஸ் மூத்த தலைவர் ரந்தீப் சுர்ஜேவாலா தெரிவித்துள்ளார்.

### கொலீஜியம் பரிந்துரை

இதுகுறித்து மத்திய சட்ட அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் நேற்று கூறும்போது, "தலைமை நீதிபதி தலைமையிலான உச்ச நீதிமன்ற கொலீஜியம் கடந்த 12-ம் தேதி வழங்கிய பரிந்துரை அடிப்படையில் நீதிபதி முரளிதர் முறைப்படி பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். மேலும் எந்த ஒரு நீதிபதியையும் பணியிட மாற்றம் செய்வதற்கு முன்பு சம்பந்தப்பட்ட நீதிபதியிடம் முன்கூட்டியே ஒப்புதல் பெறப்படுகிறது. வழக்கமான இந்த நடவடிக்கையை காங்கிரஸ் கட்சி அரசியலாக்க முயற்சிக்கிறது" என்றார். - பிடிஐ

## சத்தீஸ்கர் அரசின் ஐஏஎஸ் அதிகாரிகள் வீடுகளில் வருமான வரி சோதனை

■ புதுடெல்லி / ராய்ப்பூர்

வரி ஏய்ப்பு புகாரின் பேரில் சத்தீஸ்கர் அரசு ஐஏஎஸ் அதிகாரிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான 25 இடங்களில் வருமான வரித் துறை அதிகாரிகள் நேற்று சோதனை மேற்கொண்டனர்.

சத்தீஸ்கர் அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணைச் செயலாளர் ஏ.கே. துஜேதா, முன்னாள் தலைமைச் செயலாளரும் சத்தீஸ்கர் ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவருமான விவேக் தண்ட், ஆளும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ராய்ப்பூர் மேயர் இஜாஸ் தேபர், மதுபான ஆலை உரிமையாளர்கள் அன்வர் தேபர் (மேயர் இஜாஸ் தேபரின் சகோதரர்), பப்பு பாட்டியா உள்ளிட்டோருக்கு சொந்தமான இடங்களில் இந்த சோதனை நடைபெற்றது.

இதுகுறித்து மாநில காங்கிரஸ் தலைவர் மோகன் மர்கம் கூறும்போது, "ராய்ப்பூரில் காங்கிரஸ் மேயர் மற்றும் அரசு அதிகாரிகளின் வீடுகளில் நடக்கும் சோதனை குறித்து ஊடகங்கள் மூலம் தெரிந்துகொண்டேன். இது வருமான வரித் துறையினரின் ஆய்வுப் பணியாகும். அவர்கள் தங்களுக்கு தேவையான விவரங்களை சேகரிக்கின்றனர்" என்றார்.

# அரசியல் கருத்தை திருடியதாக பிரசாந்த் கிஷோர் மீது வழக்கு

■ பாட்னா

அரசியல் கருத்தை திருடியதாக தேர்தல் வியூக ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிஹாரில் ஐக்கிய ஜனதா தளம், பாஜக கூட்டணி ஆட்சியில் உள்ளது. ஐக்கிய ஜனதா தளத்தின் துணைத் தலைவராக, பிரசாந்த் கிஷோர் பதவி வகித்தார். குடியுரிமை சட்ட விவகாரத்தால் அவருக்கும் முதல்வர் நிதிஷ் குமாருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதன் காரணமாக ஐக்கிய ஜனதா தளத்தில் இருந்து அவர் நீக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, 'பாத் பிஹார் கி' என்ற பெயரில் பிரச்சார இயக்கத்தை கடந்த ஜனவரி 20-ம் தேதி பிரசாந்த் கிஷோர் தொடங்கினார். இணையதளம் வாயிலாக சில மணி நேரங்களில் 3 லட்சம் பேர் இந்த இயக்கத்தில் இணைந்தனர். 100 நாட்களில் 10 லட்சம் பேரை இணைக்க கிஷோர் திட்டமிட்டுள்ளார்.



▲ பிரசாந்த் கிஷோர்

இந்நிலையில் பிஹாரின் மோதிஹரி பகுதியை சேர்ந்த கவுதம் என்பவர் பிரசாந்த் கிஷோருக்கு எதிராக பாடலிபுத்திரா காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். 'பிஹார் கி பாத்' என்ற எனது அரசியல் கருத்தை பிரசாந்த் கிஷோர் திருடி 'பாத் பிஹார் கி' என்று பெயரிட்டுள்ளார். என்னுடன் பணியாற்றிய ஒசாமா என்பவர், எனது அரசியல் கருத்தை கிஷோருக்கு வழங்கியுள்ளார். இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தனது மனுவில் கவுதம் கோரியுள்ளார்.

இதன்பேரில் பிரசாந்த் கிஷோர், ஒசாமா மீது 420, 406 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. இதுகுறித்து பிரசாந்த் கிஷோர் வட்டாரங்கள் கூறும்போது, சுயவிளம்பரத்துக்காக இதுபோன்ற புகார் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒய்எஸ்ஆர் காங்கிரஸ், ஆம் ஆத்மி, திரிணமூல் காங்கிரஸ், திமுக உட்பட பல்வேறு கட்சிகளின் அரசியல் ஆலோசகராக பிரசாந்த் கிஷோர் செயல்படுகிறார். அண்மையில் நடந்த டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மி வெற்றி பெற்றது.




# அசாஞ்சேவுக்கு நேர்ந்ததை உலகம் அறியும்

● பிரிட்டன் மூத்த பத்திரிகையாளர் வேதனை

மீரா ஸ்ரீநிவாசன்

பிரிட்டனை சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் கேரி யாங். 'தி கார்டியன்' நாளிதழ் சார்பில் அமெரிக்காவில் நீண்ட காலம் பணியாற்றியவர். பத்திரிகை பணிக்காக பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். 'தி இந்து' ஆங்கில நாளிதழின் மூத்த நிருபர் மீரா ஸ்ரீநிவாசனுக்கு ஸ்கைப் வழியாக அவர் பேட்டியளித்துள்ளார்.



▲ கேரி யாங்

**பணி ரீதியாக, தனிப்பட்ட முறையில் கற்றுக்கொண்ட பாடம் என்ன?**

கடந்த 2008-ம் ஆண்டில் அமெரிக்க அதிபர் தேர்தல் நடந்தது. இந்த தேர்தல் வாக்கு எண்ணிக்கையின்போது ஜனநாயக கட்சியின் அதிபர் வேட்பாளர் பராக் ஒபாமா சிகாகோவில் உள்ள கிரான்ட் பார்க் நட்சத்திர ஓட்டலில் தங்கியிருந்தார். அனைத்து பத்திரிகையாளர்களும் அந்த நட்சத்திர ஓட்டலில் குவிந்திருந்தனர். நான் அங்கு செல்லவில்லை.

அதேநகரில் கருப்பின மக்கள் வசிக்கும் பகுதிக்கு சென்றேன். அங்கே நிருபர்கள் கிடையாது. தொலைக்காட்சி கேமராக்கள் கிடையாது. அப்பகுதியில் உள்ள விடுதிக்கு சென்றேன். அங்கு பராக் ஒபாமா வெற்றி செய்தியை கேட்ட ஓர் இளைஞரின் கண்களில் ஆனந்த கண்ணீர் வடிந்தது. இதற்கு நேர்மாறாக மற்றொரு பெண் அதிர்ச்சியில் உறைந்து நின்றார். அவரது கணவர் ராணுவ வீரர். ஆப்கானிஸ்தானில் பணியாற்றுகிறார். ஆப்கானிஸ்தான் போரை, ஒபாமா ஆதரிப்பதால் எனது கணவர் வீடு திரும்ப மாட்டார் என்று அந்த பெண் கண்ணீர் விட்டு அழுதார். அதிகார மையத்தில் இருந்து சற்று தள்ளிச் சென்றால் எண்ணிலடங்கா விஷயங்களை அறிந்து கொள்ள முடியும்.

**உங்கள் எழுத்துகளில் இனம், வர்க்க ரீதியான தாக்கம் உள்ளதே?**

உழைக்கும் வெள்ளை இன மக்கள் மத்தியில் நான் வளர்ந்தேன். அரசியல் ரீதியான எனது முதல் அறிமுகம் மார்க்ஸ், டிராட்ஸ்கி. என்னைப் பொறுத்தவரை இனம், பாலினம், மதங்கள், ஏழை-பணக்கார வர்க்கம் குறித்து விவாதிப்பவர்கள் அனைவரும் அடிப்படைவாதிகள். இனம், வர்க்கம், நிறம், மதம், தேசம் குறித்த அனைத்து அடிப்படைவாத சிந்தனைகளையும் நான் வெறுக்கிறேன். அவை எனது எழுத்துகளில் பிரதிபலிக்கின்றன.

**விக்கிலீக்ஸ், எட்வர்ட் ஸ்னோடன், பனாமா பேப்பர்ஸ் குறித்து...**

திரைமறைவு ரகசியங்களை அம்பலப்படுத்தி சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஊடகங்களின் வலிமை மகிழ்ச்சியளிக்கிறது. அதேநேரம் விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே, எட்வர்ட் ஸ்னோடனுக்கு என்ன நேர்ந்தது என்பதை உலகம் அறியும். பனாமா பேப்பர்ஸ் அறிக்கையை நிருபர்கள் குழு வெளியிட்டதால் தனிப்பட்ட முறையில் யாரும் பாதிக்கப்படவில்லை.

**சமூக ஊடகங்களுடனான தொடர்பு...**

ட்விட்டர் என்பது உலகம் கிடையாது. அது உலகத்தின் ஒரு பகுதி. ஆனால் இளம் தலைமுறை பத்திரிகையாளர்கள் அதுவே தங்கள் உலகமாக கருதுகின்றனர். எனது குடும்பம் பெரியது. அவர்களுக்காக எனது குடும்பத்தின் முக்கிய நிகழ்வுகளை பேஸ்புக்கில் பகிர்ந்து கொள்கிறேன்.

## பிரதமர் மோடி நல்ல மனிதர்; மிகச் சிறந்த தலைவர்

# இந்தியாவுடன் உறவு வலுவடைந்துள்ளது

● அமெரிக்க அதிபர் ட்ரம்ப் புகழாரம்

■ வாஷிங்டன்

பிரதமர் நரேந்திர மோடி நல்ல மனிதர், மிகச் சிறந்த தலைவர் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் புகழாரம் சூட்டியுள்ளார்.

கடந்த 24, 25-ம் தேதிகளில் அதிபர் ட்ரம்ப் இந்தியாவில் அரசு முறை பயணம் மேற்கொண்டார். கடந்த 24-ம் தேதி அகமதாபாத் விமான நிலையத்தில் வந்திறங்கிய ட்ரம்பை, பிரதமர் நரேந்திர மோடி நேரில் வரவேற்றார். அங்கு நடைபெற்ற 'நமஸ்தே ட்ரம்ப்' நிகழ்ச்சியில் 1.6 லட்சம் பேர் பங்கேற்றனர். பின்னர் ஆக்ராவுக்கு சென்ற ட்ரம்பும் அவரது மனைவி மெலானியாவும் தாஜ் மஹாலின் அழகை கண்டு ரசித்தனர்.

கடந்த 25-ம் தேதி குடியரசுத் தலைவர் மாளிகையில் அதிபர் ட்ரம்புக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இதன்பிறகு பிரதமர் நரேந்திர மோடியை அவர் சந்தித்துப் பேசினார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையே ரூ.21,000 கோடிக்கு ராணுவ ஒப்பந்தம் கையெழுத்தானது.



இதன் பிறகு நிருபர்களுக்கு தனியாக பேட்டியளித்த ட்ரம்பிடம், குடியுரிமை சட்டம், டெல்லி வன்முறை தொடர்பாக நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அவர், 'குடியுரிமை சட்டம், டெல்லி வன்முறை ஆகியவை இந்தியாவின் உள்நாட்டு விவகாரம்' என்று தெரிவித்தார்.

இதுகுறித்து அமெரிக்க எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் மூத்த தலைவர் பெர்னி சாண்டர்ஸ் கூறும்போது, "டெல்லி கலவரத்தை, மனித உரிமை மீறலை அதிபர் ட்ரம்ப் கண்டிக்க தவறிவிட்டார். அவருக்கு தலைமை பண்பு இல்லை" என்று குற்றம் சாட்டினார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் அதிபர் டொனால்டு ட்ரம்ப் வாஷிங்டனில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறும்போது, "பிரதமர் நரேந்திர மோடி நல்ல மனிதர், மிகச்சிறந்த தலைவர், இந்தியா வியக்கத்தக்க நாடு. எனது பயணத்தால் இருநாட்டு உறவு மேலும் வலுவடைந்துள்ளது. இந்தியாவுடன் பல கோடி டாலர் மதிப்புள்ள வணிகத்தில் ஈடுபட உள்ளோம்" என்று தெரிவித்தார்.

## கோவிட்-19 காய்ச்சல் பாதிப்பு அச்சம்

# உம்ரா புனித பயணத்துக்கு சவுதி அரேபியா தற்காலிக தடை

■ ரியாத்

கோவிட்-19 காய்ச்சல் அச்சுறுத்தல் காரணமாக தங்கள் நாட்டில் உம்ரா புனித யாத்திரைக்கு சவுதி அரேபிய அரசு தற்காலிக தடை விதித்துள்ளது.

சவுதி அரேபிய அரசின் முன்னெப்போதும் இல்லாத இந்த நடவடிக்கையால் வருடாந்திர ஹஜ் யாத்திரை குறித்து கேள்வி எழுந்துள்ளது.

சவுதி அரேபியாவில் முஸ்லிம்களின் புனிதத் தலங்களாக மெக்காவும் மெதீனாவும் உள்ளன. இங்கு பக்ரீத் பண்டிகை காலத்தில் முஸ்லிம்கள் ஹஜ் யாத்திரையும் மற்ற காலங்களில் உம்ரா யாத்திரையும் மேற்கொள்கின்றனர்.

உலகம் முழுவதிலும் இருந்து ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கானோர் ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் சீனாவில் கடந்த ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட கோவிட்-19 காய்ச்சல் மற்ற நாடுகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஈரானை தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரகம், குவைத், பஹ்ரைன், ஓமன் ஆகிய நாடுகளில் இதன் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில் கோவிட்-19 காய்ச்சல் அச்சுறுத்தல் காரணமாக உம்ரா புனித யாத்திரைக்காக யாத்ரீகர்களுக்கு வழங்கப்பட்ட விசாக்களை சவுதி அரேபிய அரசு நேற்று தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

மேலும் கோவிட்-19 பாதிப்பு ஏற்பட்ட நாடுகளை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட சுற்றுலா விசாக்களையும் சவுதி அரேபிய அரசு நிறுத்தி வைத்துள்ளது.

சவுதி அரேபியாவில் எவருக்கும் கோவிட்-19 காய்ச்சல் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை. என்றாலும் அண்டை நாடுகளில் இந்தக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சவுதி அரேபிய அரசு இத்தடையை விதித்துள்ளது.

### யாத்ரீகர்கள் ஏமாற்றம்

இந்த தடை எப்போது நீக்கப்படும் என தெரிவிக்கவில்லை. இதனால் உலகம் முழுவதிலும் இருந்து சவுதி அரேபியாவுக்கு யாத்திரை செல்ல திட்டமிட்டிருந்த ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். மேலும் இத்தடையால் வருடாந்திர ஹஜ் யாத்திரை குறித்து கேள்வி எழுந்துள்ளது.



▲ அமெரிக்க ராணுவத்தை சேர்ந்த 28,500 வீரர்கள் தென்கொரியாவில் முகாமிட்டுள்ளனர். வடகொரியாவுக்கு சவால் விடுக்கும் வகையில் இரு நாடுகளும் இணைந்து ஆண்டுதோறும் போர் பயிற்சி நடத்துவது வழக்கம். தற்போது தென்கொரிய, அமெரிக்க ராணுவ வீரர்கள் மத்தியில் கோவிட்-19 காய்ச்சல் பரவி வருவதால் போர் பயிற்சி தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தென்கொரியாவின் பியாங்டாக் நகரில் உள்ள அமெரிக்க ராணுவ தளத்தில் பெரும்பாலான ஹெலிகாப்டர்கள் நேற்று இயக்கப்படவில்லை. படம்: பிடிஐ

THE HINDU BusinessLine பக்கம்

| | பி.எஸ்.இ. | என்.எஸ்.இ. | டைட்டன் | எம் அண்ட் எம் |
|---|---|---|---|---|
| | 39,745.66 | 11,633.30 | 1,278.50 | 496.00 |
| | -143.30 | -45.20 | +23.40 | -7.00 |
| | -0.36% | -0.39% | +1.86% | -1.39% |

## நிறுவனங்களின் மோசடியை தடுக்க

# புதிய தணிக்கை நடைமுறைகள்

● நிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் வெளியீடு

■ புதுடெல்லி

நிறுவன மோசடியைத் தடுக்கும் விதமாக புதிய தணிக்கை நடைமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. நிறுவனங்களைத் தணிக்கை செய்யும் தணிக்கையாளர்கள், அந்நிறு வனங்களில் மோசடி நிகழ்வதற்கான சாத்தியங்கள், கடனைத் திருப்பிச் செலுத்தும் தகுதி ஆகிய விவரங்களை இனி தணிக்கை அறிக்கையில் பதிவு செய்ய வேண்டும் என்று நிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பான அறிவிப்பை நிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் நேற்று முன்தினம் வெளியிட்டது.

நிறுவனங்களில் மோசடி அதிகரித்து வருகிற நிலையில் இந்த நடைமுறை கொண்டுவரப்படுகிறது. நிறுவன மோசடிகளைக் கட்டுப்படுத்தும்விதமாக நிறுவனங்களைத் தணிக்கை செய்யும் தணிக்கையாளர்கள் அந்நிறுவனங்களின் மோசடி தொடர்பான விவரங்களைபதிவுசெய்யவேண்டும்என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில், நிறுவனங்களில் நிகழும் மோசடிகளை ஆரம்பக்கட்டத்திலேயே தடுக்க வேண்டும். அதற்கேற்ப தணிக்கையாளர்கள் நிறுவனத்தின் செயல்பாடுகள் மீதான தங்கள் பார்வையை முன்வைக்க வேண்டும். நிறுவனத்தின் நிதி நிலை, கடனைச் செலுத்தும் திறன் ஆகியவற்றை மதிப்பீடு செய்ய வேண்டும். அதேபோல், வங்கிகளிடமிருந்து அந்நிறுவனம் பெற்ற கடன் முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா போன்ற விவரங்களை அறிய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த உத்தரவு 10 கோடிக்கு கீழ் வருவாய் உள்ள நிறுவனங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், ஒரு நபர் நிறுவனங்கள், லாப நோக்கற்ற நிறுவனங்கள் ஆகியவற்றைத் தவிர்த்து பிற அனைத்து நிறுவனங்களுக்கும் பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தணிக்கைத் தொடர்பாக 2016-ம் ஆண்டின் நடைமுறையின்படி தணிக்கையாளர்கள் நிறுவனங்கள் தொடர்பான 21 விவரங்களை அளிக்க வேண்டும். தற்போதைய புதிய நடைமுறையில் அது 50-ஆக உயர்ந்துள்ளது.

## ஏஜிஆர் செலுத்த நிதி இல்லை

## அரசுக்கு வோடஃபோன் ஐடியா கடிதம்

■ புதுடெல்லி

வருவாய் பகிர்வு அடிப்படையில் தங்கள் நிறுவனம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்த போதிய நிதி வளம் இல்லை என்று வோடஃபோன் ஐடியா நிறுவனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய தொலைத் தொடர்பு துறைக்கு எழுதிய கடிதத்தில், வோடஃபோன் நிறுவனம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்தும் அளவுக்கு நிதி இல்லை. இந்த விஷயத்தில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

வோடஃபோன் ஐடியா நிறுவனம் செலுத்த வேண்டிய ஏஜிஆர் தொகை ரூ.53 ஆயிரம் கோடியாகும். இதில் 7 சதவீத தொகையை மட்டுமே அந்நிறுவனம் செலுத்தியுள்ளது. தங்கள் நிறுவனத்தின் நிதி நிலை வலுவாக இல்லை என்றும் அரசு இந்த விஷயத்தில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், குறிப்பாக ஜிஎஸ்டி ரீஃபண்ட் தொகையை நிலுவைத் தொகைக்காகக் கழித்துக்கொள்ளலாம். மேலும் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு கால அவகாசமும், வட்டி குறித்தும், அபராத வட்டி குறித்தும் அரசு தெளிவான வழிகாட்டுதலை உருவாக்க வேண்டும் என்றும் அது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.




ரோபோ டாக்டர்

▲ சீனாவின் வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள லியோனிங் மாகாணத்தில் உள்ள ஷெங்யாங் மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ள ரோபோ. இது மனிதர்களின் உடல் வெப்பநிலை, அவர்களுக்கு நோய்த் தொற்று உள்ளதா என்பதை இதை கடந்து செல்லும்போதே கண்டுபிடித்துவிடும். நோய்த் தொற்று உள்ளவர்கள் மருத்துவமனையினுள் நடமாடுவதைக் கட்டுப்படுத்த நிறுவப்பட்டுள்ளது.

# பிளிப்கார்ட் மீதான திவால் நடவடிக்கை ரத்து

● தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உத்தரவு

■ புதுடெல்லி

பிளிப்கார்ட் நிறுவனம் மீதான திவால் நடவடிக்கை உத்தரவை தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் நேற்று ரத்து செய்தது. திவால் நடவடிக்கை தொடர்பாக பிளிப்கார்ட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட சொத்துகளையும், ஆவணங்களையும் மீண்டும் அந்நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டு, திவால் நடவடிக்கையிலிருந்து பிளிப்கார்ட் நிறுவனத்தை என்சிஎல்ஏடி விடுவித்துள்ளது.

வர்த்தக ஒப்பந்தத்தை மீறி மோசடி செய்ததாக கிளவுட்வாக்கர் ஸ்டிரீமிங் டெக்னாலஜிஸ் நிறுவனம், பிளிப்கார்ட் நிறுவனத்தின் மீது தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்திடம் (என்சிஎல்டி) புகார் மனு அளித்தது. அதைத் தொடர்ந்து பிளிப்கார்ட்மீது திவால் நடவடிக்கை மேற்கொள்ள என்சிஎல்டி கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் உத்தரவு பிறப்பித்தது. இந்நிலையில் என்சிஎல்ஏடி அந்த உத்தரவை ரத்து செய்து உள்ளது.

கிளவுட்வாக்கர் ஸ்டிரீமிங் டெக்னாலஜிஸ் நிறுவனத்துக்கும் பிளிப்கார்ட்டுக்கும் இடையே 2016-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. அதன்படி, கிளவுட்வாக்கர் நிறுவனம் வெளிநாடுகளில் இருந்து எல்இடி டிவிகளை இறக்குமதி செய்து பிளிப்கார்ட் நிறுவனத்துக்கு விநியோகம் செய்துவந்தது. ஆனால் சில மாதங்களிலேயே பிளிப்கார்ட் கிளவுட்வாக்கர் நிறுவனத்திடமிருந்து டிவிகளை வாங்குவதை நிறுத்திக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இதனால் இறக்குமதி செய்த டிவிகள் முடங்கியதாகவும் அதனால் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்நிறுவனம் தெரிவித்தது. அந்த வகையில் ஒப்பந்தத்தை மீறி பிளிப்கார்ட் நிறுவனம் ரூ.26.95 கோடி மோசடி செய்ததாக அந்நிறுவனம் குற்றம்சாட்டியது.

கிளவுட்வாக்கர் நிறுவனத்தின் குற்றச்சாட்டை பிளிப்கார்ட் மறுத்தது. ஒப்பந்தத்தின்படி, ரூ.85.57 கோடி செலுத்திவிட்டதாகவும், கிளவுட்வாக்கர் நிறுவனத்தில் கடன் பாக்கி எதுவும் கொண்டிருக்கவில்லை என்றும் பிளிப்கார்ட் கூறியது.

கிளவுட்வாக்கர் புகாரை எதிர்த்து பிளிப்கார்ட் நிறுவனத்தின் இந்திய தலைவர் நீரஜ் ஜெயின் மனு தாக்கல் செய்தார். அம்மனுவை விசாரித்த என்சிஎல்ஏடி, கிளவுட் வாக்கர் நிறுவனம் உரிய ஆவணங்களைச் சமர்பிக்கவில்லை என்று கூறி பிளிப்கார்ட் நிறுவனத்தை திவால் நடவடிக்கையிலிருந்து நேற்று விடுவித்தது.

# தொலைத் தொடர்பு நிறுவனங்களின் உரிமக் கட்டணத்தை குறைக்க வேண்டும்

● செல்லுலார் ஆப்ரேட்டர்கள் சங்கம் வேண்டுகோள்

■ புதுடெல்லி

கடும்நெருக்கடிக்குஉள்ளாகிஇருக்கும் தொலைத் தொடர்பு நிறுவனங்களை மீட்டெடுக்கும் வகையில் மத்திய அரசு ஏஜிஆர் முறையை எளிமைப்படுத்த வேண்டும் என்றும் உரிமக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்றும் இந்திய செல்லுலார் ஆப்ரேட்டர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. தற்போது வங்கிகள் தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதில் கடும் தயக்கம் காட்டி வருகின்றன. இதுகுறித்து மத்திய அரசு வங்கிகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று அவ்வமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்து செல்லுலார் ஆப்ரேட்டர்கள் சங்கத்தின் பொது இயக்குநர் ராஜன் மேத்யூஸ், தொலைத் தொடர்பு செயலர் அனுஷ் பிரகாஷுக்கு எழுதிய கடிதத்தில், 'வங்கிகள் தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு உதவிகள் வழங்க தயக்கம் காட்டுகின்றன. அந்நிறுவனங்களுக்குப் புதிய கடன் உத்திரவாதங்கள் வழங்க வங்கிகள் மறுக்கின்றன' என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசு தொலைத் தொடர்புத் துறைக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை வங்கிகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அவர் கூறினார். அதேபோல் தொலைத் தொடர்பு நிறுவனங்களை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் வகையில் அலைக்கற்றை பயன்பாட்டுக்கான தொகையையும், உரிமக் கட்டணத்தையும் குறைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் இணையக் கட்டணம் மிக மிக குறைவு. சீனா, பிரேசில், ரஷ்யா ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் தொலைத் தொடர்பு நிறுவனங்களின் வருவாய் குறைவு என்பதையும் சுட்டிக்காட்டினார்.

https://t.me/daily_paper

ரிலாக்ஸ்

# மறு ஆக்க கதைகள் சவாலானது!

## 'ஆயுத எழுத்து' தொடரின் நாயகி சரண்யா நேர்காணல்

இதழியல், இலக்கியம், அரசியல்.. இவைதான் எனக்கு பிடித்த இடங்கள். என் பயணமும் இதையொட்டியே இருக்க வேண்டும் என்பதிலும் தெளிவாக இருக்கிறேன். அதனால்தான், திரைப்பட நடிப்பு மீது பெரிதாக ஆர்வம் ஏற்படவில்லை என்கிறார் விஜய் தொலைக்காட்சியின் 'ஆயுத எழுத்து' தொடரின் நாயகி சரண்யா. காளியம்மா – கலெக்டரம்மா ஆகிய இருவர் இடையே நடக்கும் ஆக்ரோஷமான சம்பவங்களை பின்னணியாகக் கொண்டு ஒளிபரப்பாகும் 'ஆயுத எழுத்து' தொடரில் 'கலெக்டரம்மா'வாக ரசிகர்கள் மனதில் இடம்பிடித்திருப்பவர் சரண்யா. அவருடன் உரையாடியதில் இருந்து..

● **விஜய் தொலைக்காட்சியில் நீங்கள் நடித்த 'நெஞ்சம் மறப்பதில்லை' தொடர் அளவுக்கு 'ஆயுத எழுத்து' தொடர், ரசிகர்கள் வட்டத்தை ஏற்படுத்தி கொடுத்துள்ளதா?**

செய்தி வாசிப்பாளராக, தொகுப்பாளினியாகவே சுற்றிக்கொண்டிருந்த நிலையில் 6 மாதம் உற்சாகமாக நடித்துவிட்டு வரலாமே என்று நினைத்துதான் விஜய் தொலைக்காட்சியின் 'நெஞ்சம் மறப்பதில்லை' தொடருக்கு வந்தேன். சின்னத்திரையில் நடிக்க வந்து இரண்டரை ஆண்டுகள்தான் ஆகின்றன. என்னமோ எனக்கும், நடிப்புக்கும் பல வருஷ பந்தம் என்பதுபோல அப்படி ஒரு அங்கீகாரம். அதற்கு 'நெஞ்சம் மறப்பதில்லை' தொடர் முக்கிய காரணம். நான் ஐஏஎஸ் படிச்சு கலெக்டர் ஆகணும்னு என் அப்பாவுக்கு ரொம்ப ஆசை. ஆனால், இதழியல் படித்து ஊடகத் துறைக்குள் வந்ததால், அந்த ஆசை நிறைவேறவில்லை. இப்போது என்னை 'கலெக்டர்' ஆக்கி அழகு பார்க்கிறது 'ஆயுத எழுத்து' தொடர். ரசிகர்களும் 'கலெக்டரம்மா' என்று செல்லமாக அழைப்பது ரொம்ப மகிழ்ச்சி.

● **சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகத் தொடங்கிய சில வாரங்களிலேயே 'ரன்' தொடரில் இருந்து வெளியேறியது ஏன்?**

'நெஞ்சம் மறப்பதில்லை' தொடர் முடிந்ததும், தொடர்களில் நாயகியாக நடிக்க பல தொலைக்காட்சிகளில் இருந்தும் வாய்ப்பு வந்தது. திரில்லர் களமான 'ரன்' தொடரை தேர்ந்தெடுத்தேன். சில அத்தியாயங்கள் நடித்தாலும், அது அற்புதமான அனுபவம். சில தனிப்பட்ட காரணங்களால் வெளியேறினேன், தொலைக்காட்சி மற்றும் தயாரிப்பு தரப்பின் அன்போடுதான் விடைபெற்றேன். எனக்கு பிறகு, அத்தொடரில் நாயகனாக நடிக்கும் கிருஷ்ணாவின் மனைவி சாயாசிங் என் கதாபாத்திரத்தை ஏற்றார். அதுவும் சிறப்பாகவே அமைந்தது.



● **திரைப்படம் போல, சின்னத்திரையிலும் மறு உருவாக்க (ரீமேக்) கலாச்சாரம் அதிகரிக்கிறதே?**

டப்பிங் தொடர்கள் அந்நியமாக இருந்தது உண்மை. ஆனால், வேறொரு மொழியில் வெற்றி பெற்ற தொடரை நம் கலாச்சாரம், வாழ்வியலுக்கு ஏற்ப மாற்றி வழங்குவது வரவேற்கத்தக்கதே. என் 'நெஞ்சம் மறப்பதில்லை' தொடரே பெங்காலியில் இருந்து மறு ஆக்கம் செய்யப்பட்டதுதான். என்ன மாதிரி கதை, கதைக் களத்தை மறு ஆக்கம் செய்கிறோம் என்பது முக்கியம். பெங்காலி தொடர்களில் பெண்கள் கம்பீரமாக, வீரம் மிக்கவர்களாக இருப்பார்கள். இங்கு கம்பீரமான பெண்கள் பெரும்பாலும் வில்லி பாத்திரத்தில்தான் பொருந்துகிறார்கள். நாயகி கதாபாத்திரம் மென்மையானதாக இருக்கிறது. இதுபோன்ற விஷயங்களை சரிசெய்தால் ரீமேக்கிலும் வெற்றி பெறலாம். நேரடியாக ஒரு கதையை சொல்வது எளிது. ரீமேக் சவாலானது.

● **நடிகை பிரியா பவானிசங்கர், 'புதிய தலைமுறை' தொலைக்காட்சியில் உங்களோடு சக செய்தி வாசிப்பாளராக பயணத்தை தொடங்கியவர்தானே..**

சின்ன பெண்களாக இருவரும் செய்திப் பிரிவில் வேலை பார்த்த காலம் அது. அப்போதே அரசியல் உட்பட பல துறைகளிலும் தொலைக்காட்சி தரப்பு எங்களுக்கு வாய்ப்பு தந்தது. அந்த சுதந்திரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டோம். இப்போதும் வலைதளங்களில் அரசியல், சமூக கருத்துகளை நாங்கள் பகிர்வதற்கு அதுவே அடிப்படை. ஒரு காலகட்டத்தில் இருவரும் திரைத்துறைக்கு வந்தோம். இதழியல், இலக்கியம், அரசியல் சார்ந்து தமிழ் மொழியில் இயங்குவதே என் விருப்பம். அதற்கு திரைக் களம் தேவை இல்லை என்பதால், அதில் ஆர்வம் காட்டவில்லை. எப்போதும் தொடர்களே போதும் என்பதில் தெளிவாக இருக்கிறேன். பிரியா பவானிசங்கர் போலவே வாணி போஜனும் நெருங்கிய தோழி. நெருங்கிய தோழிகளின் வளர்ச்சியும், பங்களிப்பும் மிகுந்த மகிழ்வை கொடுக்கிறது!

# சின்னத்திரையோரம்

மஹா

## திருமணங்கள் உருவாகும் கதை!

திருமணத்துக்கு தயாராகும் தம்பதிகளுக்காக 'திருமணங்கள் உருவாகும் கதை' என்ற பெயரில் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சி ஒளிபரப்பாகி வருகிறது. நடிகையும், தொகுப்பாளினியுமான வைஷாலி தணிகா இதை தொகுத்து வழங்குகிறார்.

"எளிமையாக திருமண வரவு – செலவு கணக்கில் தொடங்கி, மண்டபம், மண்டப அலங்காரம், புடவைகள், நகைகள், சமையல் வரை அனைத்து விஷயங்களையும் தனித் தன்மையோடு வழங்குவதுதான் திருமண நிகழ்ச்சியின் சிறப்பு. வரவேற்பு, பெண் அழைப்பு, மாப்பிள்ளை அழைப்பு, மெகந்தி திருவிழா, திருமண வைபவம் என பல நிகழ்வுகள் ஒரு திருமண நிகழ்ச்சியை ஒட்டி அரங்கேறும். திருமணம் செய்துகொள்ள இருக்கும் தம்பதிகள், அவர்களது வீட்டாருக்கு பெரிய குறிப்பேடு போன்ற நிகழ்ச்சியாக இதை வழங்கி வருகிறோம். உடை, கூந்தல், முக அலங்காரம், நகைகள் என பல பரிமாணங்களை அலசி ஆராய்கிறோம். சமீபத்தில்கூட 'அரண்மனை', 'ஏரி', 'கிராமம்' என பல்வேறு மையக் கருத்துகளுடன் கூடிய திருமண வைபவ நிகழ்ச்சியை இதன்மூலம் வழங்கினோம். இதுபோல இன்னும் ஏராளமான அம்சங்கள் வர இருக்கின்றன" என்கிறார் தொகுப்பாளினி வைஷாலி தணிகா.



▲ வைஷாலி தணிகா

## நடுவர்கள் ஓர் அறிமுகம்!

எட்டு சீசன்களை கடந்து 9-வது சீசனாக விஜய் தொலைக்காட்சியின் 'கலக்கப்போவது யாரு?' நிகழ்ச்சி ஒளிபரப்பாகிவருகிறது. இதில் இந்த வாரம் 'நடுவர்கள் அறிமுக வாரம்'. இதுகுறித்து நிகழ்ச்சி தரப்பில் கூறியதாவது:

'கலக்கப்போவது யாரு?' 9-வது சீசனுக்காக தமிழகம் முழுவதிலும் இருந்து 60-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். கடந்த 3 வாரங்களாக நடந்த தேர்வில் தணிக்கை செய்யப்பட்டு, 30 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பல்வேறு விதமான காமெடி தர்பார் அலப்பறைகளை அரங்கேற்ற காத்திருக்கின்றனர். சிவா – கிரி, காயத்ரி, ப்ரகதீஷ் – செந்தில் என சில போட்டியாளர்கள் இந்த வாரம் சிறப்பான நகைச்சுவையை வழங்க உள்ளனர்.

மேலும், இந்த வாரம் நடுவர்கள் அறிமுக வாரம் என சிறப்பு நிகழ்ச்சியாக ஒளிபரப்பாக உள்ளது. அதில், ரம்யா பாண்டியன், வனிதா விஜயகுமார், ஈரோடு மகேஷ், மதுரை முத்து, ஆதவன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர். அவர்கள் தனித்தனியாக அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றனர். நடுவர்களில் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு நடுவர் தனியே நிகழ்த்தும் நகைச்சுவை நிகழ்ச்சியும் இடம்பெறும். அந்த வகையில், மதுரை முத்து நீண்ட இடைவெளிக்கு பிறகு தனியே நிகழ்த்தும் நகைச்சுவை சரவெடிகள் இந்த வாரம் இடம்பெற உள்ளன.



▲ 'கலக்கப்போவது யாரு' சீசன்-9 நடுவர் குழு.

டெஸ்டில் புஜாரா ஸ்ட்ரைக்கை ரொடேட் செய்யும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அவருடன் பேட் செய்யும் எதிர் முனை வீரருக்கு நெருக்கடி ஏற்படும்.

● திலீப் வெங்சர்க்கார், இந்திய கிரிக்கெட் முன்னாள் வீரர் ●





பேட்டிங்கில் விராட் கோலி வலுவாக மீண்டு வருவார் என்று எதிர்பார்க்கிறேன். புஜாராவும் ரன்கள் சேர்க்க வேண்டும். இவர்கள் தங்களது பேட்டிங்கை 3 இலக்க ரன்களாக மாற்றுவது மிகவும் முக்கியம்.

● வாசிம் ஜாஃபர், இந்திய கிரிக்கெட் முன்னாள் வீரர் ●



▲ சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்வர் கோப்பைக்கான மாநில அளவிலான ஹாக்கி, வாலிபால் போட்டிகளை தமிழக பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தொடங்கி வைத்தார்.

ஐ லீக் கால்பந்து

## இந்தியன் ஏரோஸ் அணியுடன் சென்னை சிட்டி இன்று மோதல்

■ மும்பை

ஐ லீக் கால்பந்து தொடரில் இன்று மாலை 5 மணிக்கு மும்பையில் நடைபெறும் ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான சென்னை சிட்டி அணி, இந்தியன் ஏரோஸ் அணியை எதிர்த்து விளையாடுகிறது.

சென்னைசிட்டி 13 ஆட்டங்களில் விளையாடி 4 வெற்றி, 4 டிரா, 5 தோல்விகளுடன் 16 புள்ளிகள் பெற்று பட்டியலில் 7-வது இடத்தில் உள்ளது. இந்தியன் ஏரோஸ் 13 ஆட்டங்களில், 2 வெற்றி, 2 டிரா, 9 தோல்விகளுடன் 8 புள்ளிகள் பெற்று பட்டியலில் கடைசி இடத்தில் (11-வது) உள்ளது.

சென்னை சிட்டி அணி கடைசியாக விளையாடிய 3 ஆட்டங்களிலும் வெற்றியை பதிவு செய்யவில்லை. இதனால் வெற்றிப் பாதைக்கு திரும்புவதில் அந்த அணி முனைப்பு காட்டக்கூடும். இந்த சீசனில் இரு அணிகளும் 2-வது முறையாக சந்திக்கின்றன. கோவையில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சிட்டி 1-0 என்ற கோல் கணக்கில் இந்தியன் ஏரோஸை வீழ்த்தியிருந்தது.

சென்னை சிட்டி அணியின் கேப்டன் ராபர்டோ எஸ்லாவா கூறும் போது, “ஒவ்வொரு ஆட்டமும் ஒரு வாய்ப்புதான். கால்பந்தை பொறுத்தவரை விஷயங்களை கணிக்க முடியாது, ஆட்டம் இரு வழிகளிலும் செல்லக்கூடும்.

நாங்கள் எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்கிறோம் என்றே நினைக்கிறேன். நாங்கள் எதையும் மாற்றத் தேவையில்லை. மாற்ற வேண்டியது ஒன்று மட்டுமே. அது அதிர்ஷ்டம்தான். ஒவ்வொரு ஆட்டத்திலும் கோல் அடிப்பதற்கான தெளிவான வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆனால் அவற்றை எங்களால் கோல்களாக மாற்ற முடியவில்லை. இந்த விஷயத்தில் நாங்கள் கூடுதல் முனைப்புடன் செயல்பட வேண்டும்” என்றார்.

மகளிர் டி 20 உலகக் கோப்பை

# அரை இறுதியில் இந்தியா

● ஷஃபாலி வர்மா, பந்து வீச்சாளர்கள் அசத்தல்

■ மெல்பர்ன்

மகளிர் டி 20 உலகக் கோப்பையில் நியூஸிலாந்து அணியை 4 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இந்திய மகளிர் அணி லீக் சுற்றில் 3-வது வெற்றியை பதிவு செய்ததுடன் அரை இறுதி சுற்றுக்கு முன்னேறியது.

ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த இந்திய மகளிர் அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 133 ரன்கள் எடுத்தது. ஸ்மிருதி மந்தனா 11 ரன்களில் தஹுஹு பந்தில் போல்டான நிலையில் மற்றொரு தொடக்க வீராங்கனையான ஷஃபாலி வர்மா மட்டையை சுழற்றினார். இதனால் பவர்பிளேவில் 49 ரன்கள் சேர்க்கப்பட்டது.

அவருக்கு உறுதுணையாக விளையாடி வந்த தானியா பாட்டியா 25 பந்துகளில், 3 பவுண்டரிகளுடன் 23 ரன்கள் எடுத்த நிலையில் ரோஸ்மேரி பந்தில் ஆட்டமிழந்தார். 2-வது விக்கெட்டுக்கு ஷஃபாலி வர்மாவுடன் இணைந்து தானியா பாட்டியா 51 ரன்கள் சேர்த்தார். இதையடுத்து களமிறங்கிய ஜெமிமா ரோட்ரிக்ஸ் 10, கேப்டன் ஹர்மான்பிரீத் கவுர் 1 ரன்னில் நடையை கட்டினர்.

ஷஃபாலி வர்மா 34 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 46 ரன்கள் எடுத்த நிலையில் அமெலியா கெர் பந்தில் ஹேலி ஜென்சனிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது ஸ்கோர் 13.5 ஓவர்களில் 95 ஆக இருந்தது. இதன் பின்னர் களமிறங்கிய வீராங்கனைகளிடம் இருந்து பெரிய அளவிலான ரன் குவிப்பு வெளிப்படவில்லை. தீப்தி சர்மா 8, வேதா கிருஷ்ணமூர்த்தி 6, ராதா யாதவ் 14 ரன்களில் வெளியேறினர். ஷிகா பாண்டே 10 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

134 ரன்கள் இலக்குடன் பேட் செய்த நியூஸிலாந்து மகளிர் அணி 8.1 ஓவர்களில் 33 ரன்களை சேர்ப்பதற்குள் 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது. ரேச்சல் 12, சுஸி பேட்ஸ் 6, சோஃபி டெவின் 14 ரன்களில் ஆட்டமிழந்தனர்.

சிறிது தாக்குப்பிடித்து விளையாடிய மேடி கிரீன் (24), ராஜேஷ்வரி கெய்க்வாட் பந்திலும், கேட்டி மார்ட்டின் (25), ராதா யாதவ் பந்திலும் வெளியேறினர். 18 ஓவர்களில் நியூஸிலாந்து மகளிர் அணியானது 5 விக்கெட்கள் இழப்புக்கு 100 ரன்கள் எடுத்திருந்தது. 12 பந்துகளில் வெற்றிக்கு 34 ரன்கள் தேவையாக இருந்த நிலையில் பூணம் யாதவ் வீசிய 19-வது ஓவரில் அமெலியா கெர் 4 பவுண்டரிகள் உட்பட 18 ரன்களை விளாசினார்.

இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. ஷிகா பாண்டே வீசிய கடைசி ஓவரில் 16 ரன்கள் தேவையாக இருந்த நிலையில் முதல் பந்தை ஹேலி ஜென்சன் பவுண்டரிக்கு விரட்டினார். அடுத்த 3 பந்துகளிலும் தலா ஒரு ரன் சேர்க்கப்பட்டது. 5-வது பந்தை அமெலியா கெர் பவுண்டரிக்கு அடிக்க ஆட்டத்தின் பரபரப்பு அதிகமானது.

கடைசி பந்தில் 4 ரன்கள் சேர்க்கப்பட்டால் ஆட்டம் சூப்பர் ஓவருக்கு செல்லும் என்ற சூழ்நிலை உருவாக ஷிகா பாண்டே ஆஃப் ஸ்டெம்புக்கு நன்கு வெளியே வீசிய பந்தை அமெலியா கெர், ஸ்கூப் ஷாட் மேற்கொள்ள முயன்றார். ஆனால் பந்து அவரது கால்காப்பில் பட்டு ஏமாற்றம் அளித்தது. இதனால் லெக் பை மூலம் ஒரு ரன் எடுக்க அமெலியா கெர் ஓடினார். மறுமுனையில் ஹேலி ஜென்சன் (11) 2-வது ரன்னுக்கு ஓட முயன்ற போது ரன் அவுட் ஆனார்.

முடிவில் நியூஸிலாந்து மகளிர் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 130 ரன்கள் சேர்த்து தோல்வி அடைந்தது. அமெலியா கெர் 19 பந்துகளில், 6 பவுண்டரிகளுடன் 34 ரன்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்திய அணி சார்பில் தீப்தி சர்மா, ஷிகா பாண்டே, ராஜேஷ்வரி கெய்க்வாட், பூணம் யாதவ், ராதா யாதவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

3 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 3-வது வெற்றியை பதிவு செய்தது. இதன் மூலம் இந்திய அணி ஏ பிரிவில் 6 புள்ளிகளுடன் முதல் அணியாக அரை இறுதியில் கால் பதித்தது. இந்தியா தனது முதல் இரு ஆட்டங்களில் ஆஸ்திரேலியா, வங்கதேசத்தை வீழ்த்தியிருந்தது. இந்தியா தனது கடைசி லீக் ஆட்டத்தில் நாளை இலங்கையுடன் மோதுகிறது.



▲ அதிரடியாக விளையாடிய இந்தியாவின் ஷஃபாலி வர்மா.



▲ டேவிட் வார்னர்

## ஐபிஎல் தொடரில் வார்னருக்கு மீண்டும் கேப்டன் பதவி

■ புதுடெல்லி: ஐபிஎல் டி 20 கிரிக்கெட் தொடரில் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் கேப்டனாக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார் ஆஸ்திரேலியாவின் அதிரடி வீரரான டேவிட் வார்னர்.

பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் தடைபெற்ற டேவிட் வார்னர் கடந்த 2018-ம் ஆண்டு ஐபிஎல் டி 20 தொடரில் ஹைதராபாத் அணியின் கேப்டன் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார்.

தடைக்கு பிறகு கடந்த ஆண்டு வார்னர், ஐபிஎல் தொடரில் விளையாடிய போதிலும் கேன் வில்லியம்சனே, ஹைதராபாத் அணியை வழிநடத்தினார்.

இந்நிலையில் மார்ச் 29-ம் தேதி தொடங்கும் ஐபிஎல் டி 20 தொடரின் 13-வது சீசனுக்கு ஹைதராபாத் அணியின் கேப்டனாக டேவிட் வார்னர் மீண்டும் செயல்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 33 வயதான வார்னர் தலைமையின் கீழ் ஹைதராபாத் அணி கடந்த 2016-ம் ஆண்டு ஐபிஎல் தொடரில் வாகை சூடியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சீசனில் ஹைதராபாத் அணி தனது முதல் ஆட்டத்தில் ஏப்ரல் 1-ம் தேதி நடப்பு சாம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணியை எதிர்கொள்கிறது. - பிடிஐ



▲ மெக்சிகோவின் அகாபுல்கோ நகரில் நடைபெற்று வரும் மெக்சிகோ ஓபன் டென்னிஸ் தொடரின் 2-வது சுற்றில் செர்பியாவின் இளம் வீரரான மியோமிர் கெக்மனோவிச்சுக்கு எதிராக பந்தை திருப்புகிறார் 2-ம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால். இந்த ஆட்டத்தில் ரபேல் நடால் 6-2, 7-5 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார். படம்: ஏஎப்பி

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான

## டி 20 தொடரை வென்றது ஆஸ்திரேலியா

■ கேப்டவுன்

தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான 3-வது டி 20 கிரிக்கெட் ஆட்டத்தில் 97 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி தொடரை 2-1 என கைப்பற்றி கோப்பையை வென்றது.

தென் ஆப்பிரிக்காவின் கேப்டவுன் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடைசி டி 20 ஆட்டத்தில் முதலில் பேட் செய்த ஆஸ்திரேலிய அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 193 ரன்கள் குவித்தது. தொடக்க வீரர்களான டேவிட் வார்னர் 37 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 57 ரன்களும், கேப்டன் ஆரோன் பின்ச் 37 பந்துகளில், ஒரு சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 55 ரன்களும் விளாசினர்.



▲ தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான டி 20 கிரிக்கெட் தொடரை வென்ற ஆஸ்திரேலிய அணியினர் கோப்பையுடன் கொடுத்த உற்சாக போஸ்.

முதல் விக்கெட்டுக்கு இந்த ஜோடி 11.3 ஓவர்களில் 120 ரன்களை வேட்டையாடியது. மேத்யூ வேட் 10, மிட்செல் மார்ஷ் 19, அலெக்ஸ் காரே 7 ரன்களில் ஆட்டமிழந்தனர். இறுதிகட்ட ஓவர்களில் ஸ்டீவ் ஸ்மித் அதிரடியாக விளையாடி 15 பந்துகளில், 2 சிக்ஸர்களுடன் 30 ரன்கள் சேர்த்தார்.

194 ரன்கள் இலக்குடன் பேட் செய்த தென் ஆப்பிரிக்க அணி மிட்செல் ஸ்டார்க், ஆஷ்டன் அகர், ஆடம் ஸம்பா ஆகியோரது பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 15.3 ஓவர்களில் 96 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக வான் டெர் டஸ்சென் 24, ஹன்ரிச் கிளாசென் 22, டேவிட் மில்லர் 15, டுவைன் பிரிட்டோரியஸ் 11 ரன்கள் சேர்த்தனர்.

கேப்டன் குயிண்டன் டி காக் (5), டுபிளெஸ்ஸிஸ் (5) உட்பட மற்ற எந்த பேட்ஸ்மேன்களும் இரட்டை இலக்க ரன்களை எட்டவில்லை. ஆஸ்திரேலிய அணி சார்பில் மிட்செல் ஸ்டார்க் 3, ஆஷ்டன் அகர் 3, ஆடம் ஸம்பா 2 விக்கெட்கள் கைப்பற்றினர். 97 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி 3 ஆட்டங்கள் கொண்ட டி 20 கிரிக்கெட் தொடரை 2-1 என கைப்பற்றி கோப்பையை வென்றது. முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 107 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. 2-வது ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்க அணி 12 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டிருந்தது. ஆட்ட நாயகனாக மிட்செல் ஸ்டார்க், தொடர் நாயகனாக ஆரோன் பின்ச் தேர்வு செய்யப்பட்டனர்.

கிறைஸ்ட்சர்ச்சில் 2-வது டெஸ்ட் நாளை தொடக்கம்

# மீண்டெழுமா இந்திய கிரிக்கெட் அணி

■ கிறைஸ்ட்சர்ச்

இந்தியா - நியூஸிலாந்து அணிகள் இடையிலான 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிறைஸ்ட்சர்ச் நகரில் உள்ள ஹக்லி ஓவல் மைதானத்தில் நாளை அதிகாலை 4 மணிக்கு தொடங்குகிறது.

வெலிங்டனில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் விராட் கோலி தலைமையிலான இந்திய அணியை 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டிருந்தது. ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப்பில் இந்திய அணிக்கு இது முதல் தோல்வியாக அமைந்தது. இந்த தோல்வியால் தொடரில் 0-1 என பின்தங்கிய நிலையில் 2-வது டெஸ்ட் போட்டியை எதிர்கொள்கிறது இந்திய அணி. பசுந்தரை ஆடுகளமான ஹக்லி ஓவலில் இந்திய அணி கூடுதல் திறனுடன் செயல்பட்டால் மட்டுமே நியூஸிலாந்து அணிக்கு பதிலடி கொடுத்து டெஸ்ட் தொடரை சமன் செய்ய முடியும் என்ற நிலை உள்ளது.

வெலிங்டன் போட்டியில் ஒரு இன்னிங்ஸில் கூட இந்திய அணி 200 ரன்களை சேர்க்கவில்லை. மயங்க் அகர்வால், அஜிங்க்ய ரஹானே ஆகியோர் மட்டுமே ஓரளவு ரன்கள் சேர்த்தனர். சேதேஷ்வர் புஜாரா, ஹனுமா விகாரி உள்ளிட்ட சில பேட்ஸ்மேன்கள் தற்காப்பு ஆட்டம் என்ற பெயரில் அடித்து விளையாடக்கூடிய பந்துகளில் கூட ரன்கள் சேர்க்க முயற்சி செய்யாதது பெரிய பின்னடைவை கொடுத்தது.

அதீத தடுப்பாட்டத்தால் எதிர் தாக்குதல் தொடுக்கும் திறனை மறந்தது போன்று இந்திய பேட்ஸ்மேன்கள் செயல்பட்டது நியூஸிலாந்து பந்து வீச்சாளர்கள் மேலாதிக்கம் செலுத்த வழிவகுத்திருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக வேகம், ஸ்விங் பந்து வீச்சு ஆடுகளத்தால் முதல் நாளிலேயே இந்திய அணி மனரீதியான போராட்டத்தை எதிர்கொள்வதில் தேக்கம் அடைந்தது. பேட்டிங்கில் எதிரொலித்த இந்த தாக்கம் பந்து வீச்சுத் துறையையும் விட்டுவைக்கவில்லை.

இஷாந்த் சர்மா மட்டுமே நெருக்கடி கொடுத்த நிலையில் அவருக்கு உறுதுணையாக செயல்படுவதில் ஜஸ்பிரித் பும்ரா, மொகமது ஷமி ஆகியோர் சுணக்கம் அடைந்தனர். நியூஸிலாந்து வீரர்களின் பந்துகள் நன்கு ஸ்விங் ஆன நிலையில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சு துறை கூட்டாக தாக்கத்தை ஏற்படுத்தத் தவறியது.

முதல் இன்னிங்ஸில் ஒரு கட்டத்தில் நியூஸிலாந்து அணி 216 ரன்களுக்கு 6 விக்கெட்களை இழந்திருந்தது. ஆனால் எஞ்சிய விக்கெட்களை இந்திய பந்து வீச்சாளர்கள் விரைவாக கைப்பற்றத் தவறினர். இதன் விளைவால் நியூஸிலாந்து அணி பெரிய அளவிலான முன்னிலையை பெற்றது. இதனால் பந்து வீச்சு துறையிலும் இந்திய அணி எழுச்சி காண்பது அவசியம்.

அநேகமாக இன்றைய ஆட்டத்தில் மொகமது ஷமி, ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் நீக்கப்பட்டு உமேஷ் யாதவ், ரவீந்திர ஜடேஜா சேர்க்கப்படக்கூடும். பேட்டிங்கில் விராட் கோலி, புஜாரா, ஹனுமா விகாரி ஆகியோர் மேம்பட்ட திறனை வெளிப்படுத்தும் பட்சத்தில் பெரிய அளவிலான ஸ்கோரை குவிக்கலாம். இதன் வாயிலாக பந்து வீச்சு துறையை கூடுதல் நம்பிக்கையுடன் செயல்பட வழிவகுக்கலாம்.

நியூஸிலாந்து அணியானது மீண்டும் ஒரு முறை உயர்மட்ட செயல்திறனை வெளிப்படுத்தும் நோக்கில் களமிறங்கக்கூடும். டிரென்ட் போல்ட், டிம் சவுதி, கைல் ஜேமிசன் ஆகியோரை உள்ளடக்கிய வேகக்கூட்டணி வெலிங்டன் டெஸ்ட் போட்டியில் 18 விக்கெட்களை வேட்டையாடி அணியின் வெற்றியில் பிரதான பங்கு வகித்தனர்.

கிறைஸ்ட் சர்ச் ஆடுகளமும் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமானது என்பதால் இந்த மூவர் கூட்டணி இந்திய பேட்டிங் வரிசைக்கு கடும் சவால் அளிக்கக்கூடும். இவர்களுடன் ‘ஷார்ட் பிட்ச்’ பந்து வீச்சில் கை தேர்ந்த நீல் வாக்னரும் மிரட்ட ஆயத்தமாகி உள்ளார். நீல் வாக்னர் களமிறங்கும் பட்சத்தில் சுழற்பந்து வீச்சாளரான அஜாஸ் படேல் நீக்கப்படக்கூடும்.

### பிரித்வி ஷா காயம்



இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க வீரரான பிரித்வி ஷா இடது பாதத்தில் ஏற்பட்ட வீக்கம் காரணமாக நேற்று பயிற்சியில் கலந்து கொள்ளவில்லை. வீக்கத்துக்கான காரணத்தை கண்டறிய பிரித்வி ஷாவிற்கு ரத்த பரிசோதனை செய்யப்பட உள்ளது. மருத்துவ அறிக்கை சாதகமாக இருந்தால் மட்டுமே கிறைஸ்ட் சர்ச்சில் நாளை தொடங்கும் 2-வது டெஸ்ட் போட்டியில் பிரித்வி ஷா இடம் பெறுவார். இதற்கிடையே நேற்றைய பயிற்சியின் போது ஷுப்மன் கில் அதிக கவனத்தை ஈர்த்தார். அவரது வலை பயிற்சி பேட்டிங்கை நீண்ட நேரம் பார்வையிட்ட பயிற்சியாளர் ரவி சாஸ்திரி சில ஆலோசனைகளையும் வழங்கினார். பிரித்வி ஷா முழு உடற்தகுதியை அடையாவிட்டால் அவருக்கு பதிலாக ஷுப்மன் கில் இடம் பெறக்கூடும். வெலிங்டனில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் பிரித்வி ஷா முறையே 16 மற்றும் 14 ரன்கள் மட்டுமே சேர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**முதல் முறை:** கிறைஸ்ட் சர்ச்சில் உள்ள ஹெக்லி ஓவல் மைதானத்தில் இந்திய அணி இதற்கு முன்னர் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றது இல்லை. மாறாக இதே நகரில் உள்ள ஏஎம்ஐ மைதானத்தில் நியூஸிலாந்துக்கு எதிராக 4 டெஸ்டில் விளையாடி உள்ளது. இதில் 2 தோல்வி, 2 டிராவை பதிவு செய்துள்ளது இந்திய அணி. ஏஎம்ஐ மைதானத்தில் 2006-ம் ஆண்டுக்குப் பிறகு சர்வதேச டெஸ்ட் போட்டிகள் நடத்தப்படுவது இல்லை.

**ரத்தான போட்டி:** ஹெக்லி ஓவல் மைதானத்தில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் நியூஸிலாந்து - வங்கதேசம் இடையே நடைபெற இருந்த டெஸ்ட் போட்டி ரத்து செய்யப்பட்டிருந்தது. இந்த மைதானம் அருகே இருந்த மசூதியில் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டதில் 49 பேர் இறந்ததை அடுத்து டெஸ்ட் போட்டியை ரத்து செய்துவிட்டு வங்கதேச வீரர்கள் தாயகம் திரும்பினர். தாக்குதல் நடைபெற்று சுமார் ஓராண்டு ஆன நிலையில் தற்போது நியூஸிலாந்து - இந்தியா டெஸ்ட் போட்டி நடைபெ உள்ளது.

### மைதான ராசி

- ஹெக்லி ஓவல் மைதானத்தில் கடந்த 2014-ம் ஆண்டு முதல் சர்வதேச டெஸ்ட் போட்டி நடத்தப்பட்டு வருகிறது.
- இங்கு இதுவரை நியூஸிலாந்து அணி 6 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 4 வெற்றி, ஒரு டிரா, ஒரு தோல்வியை பதிவு செய்துள்ளது. இதில் 3 வெற்றி, ஒரு டிரா வில்லியம்சன் தலைமையில் கிடைக்கப் பெற்றவையாகும்.
- இலங்கையை இரு முறையும் பாகிஸ்தான், வங்கதேச அணிகளை ஒரு முறையும் ஹெக்லி ஓவல் மைதானத்தில் வீழ்த்தியுள்ளது நியூஸிலாந்து அணி. அதேவேளையில் ஆஸ்திரேலிய அணியிடம் தோல்வி கண்டது. இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தை டிரா செய்திருந்தது.



**நேரம்:** அதிகாலை 4.00; **நேரலை:** ஸ்டார் ஸ்போர்ட்ஸ்

அரசு ஊழியர்கள் பணியின்போது

# அடையாள அட்டை அணியாவிட்டால் நடவடிக்கை

● துறை தலைவர்களுக்கு பணியாளர் நலத்துறை கடிதம்

■ சென்னை

அரசு ஊழியர்கள் பணியின்போது புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அணியாவிட்டால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி, துறைத் தலைவர்களை பணியாளர் நலத்துறை செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழக அரசில் 12 லட்சத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு அவரவர் சார்ந்த துறைகளில் இருந்து புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பணியில் இருக்கும்போது அடையாள அட்டையை கட்டாயம் அணிந்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் அரசு ஊழியர்கள் இதை கடைபிடிப்பதில்லை.

▼ புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அணியாத அரசு ஊழியர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்நிலையில் சென்னை உயர் நீதிமன்றம் கடந்த 2018-ம் ஆண்டு ஜூலை 16-ம் தேதி பிறப்பித்த உத்தரவில், ‘அடையாள அட்டை அணிவதை கட்டாயமாக அமல்படுத்த வேண்டும். விதிகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்று கூறியிருந்தது. இதைத் தொடர்ந்து, அனைத்து அரசு ஊழியர்களும் பணியின்போது அடையாள அட்டை அணிவதை உறுதிப்படுத்த வலியுறுத்தி, கடந்த 2018-ம் ஆண்டு ஆகஸ்ட் 23-ம் தேதி பணியாளர் நலன் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை செயலர் கடிதம் எழுதினார்.

இருப்பினும், பல ஊழியர்கள் புகைப்பட அடையாள அட்டை அணியாமல் பணியாற்றுவதாக பணியாளர் நலத் துறைக்கு புகார்கள் வந்தன. இதையடுத்து, அனைத்து துறை செயலர்கள், துறை அலுவலகங்களுக்கு புதிய கடிதம் ஒன்றை பணியாளர் நலத் துறை செயலர் ஸ்வர்ணா அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில், “அரசு ஊழியர்கள் பணியின்போது, அரசு அறிவித்துள்ள விதிகளின்படி உருவாக்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அணிவது கட்டாயம் என்பதை தெரிவிக்கும் வகையில், அனைத்து துறைகளின் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் கீழ் பணியாற்றும் அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகளை வழங்க வேண்டும். அடையாள அட்டை அணியாத பட்சத்தில், அவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று அறிவுறுத்தியுள்ளார்.



▲ பெங்களூருவில் உள்ள ஹெச்.ஏ.எல். திடலில் நேற்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இலகு ரக போர் ஹெலிகாப்டர் இறுதி இணைப்பு கூடத்தை திறந்து வைத்தார். அப்போது ஹெ.ஏ.எல். தலைவரும், நிர்வாக இயக்குநருமான ஆர்.மாதவன் உடனிருந்தார்.



▲ கடந்த ஜூலை மாதம் கர்நாடக முதல்வராக பதவியேற்ற எடியூரப்பா நேற்று தனது 78வது பிறந்தநாளை முன்னிட்டு, சொந்த வீட்டை காலி செய்து அரசு இல்லமான காவேரியில் குடும்பத்தினருடன் குடியேறினார்.

# தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத்தேர்வு மார்ச் 2-ம் தேதி தொடங்குகிறது

E-Paper

■ சென்னை

தமிழகத்தில் பிளஸ் 2 தேர்வு மார்ச் 2-ம் தேதியும், பிளஸ் 1 தேர்வு மார்ச் 4-ம் தேதியும் தொடங்குகிறது.

இந்த 2019-20-ம் கல்வியாண்டுக்கான பிளஸ் 2 பொதுத்தேர்வுகள் வரும் மார்ச் 2-ம் தேதி தொடங்கி 24-ம் தேதி வரை நடைபெறுகிறது. அதே போல், பிளஸ் 1 பொதுத்தேர்வானது மார்ச் 4-ம் தேதி தொடங்கி 26-ம் தேதி வரையும், 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 27-ம் தேதி தொடங்கி ஏப்ரல் 13-ம் தேதி வரை நடைபெறுகிறது.

இதில், பிளஸ் 2- பொதுத் தேர்வை பொறுத்தவரை, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 7 ஆயிரத்து 276 மேல்நிலைப்பள்ளிகளில் இருந்து 8 லட்சத்து 16 ஆயிரத்து 359 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களில் 19 ஆயிரத்து 166 தனித்தேர்வர்கள் என 8 லட்சத்து 35 ஆயிரத்து 525 பேர் தேர்வு எழுதுகின்றனர். சென்னையில் மட்டும், 410 பள்ளிகளில் இருந்து 160 மையங்களில் 47 ஆயிரத்து 264 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர்.

அதே போல் மார்ச் 4-ம் தேதி தொடங்கும் பிளஸ் 1- பொதுத்தேர்வை தமிழகம், புதுச்சேரியில் 7 ஆயிரத்து 400 பள்ளிகளில் இருந்து 8 லட்சத்து 32 ஆயிரத்து 475 மாணவ, மாணவியர் எழுதுகின்றனர். மேலும், கடந்தாண்டு நடைபெற்ற மார்ச், ஜூன் மேல்நிலை முதலாண்டு பொதுத்தேர்வில் தேர்ச்சிபெறாமல், தற்போது பிளஸ் 2 பயிலும் 50 ஆயிரத்து 650 பள்ளி மாணவர்கள் தேர்ச்சி பெறாத பாடங்களுக்கு மீண்டும் தேர்வு எழுதுகின்றனர்.

மார்ச் 27-ம் தேதி தொடங்கும் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வை தமிழகம் மற்றும்புதுச்சேரியில் 12 ஆயிரத்து 687 பள்ளிகளில் இருந்து 9 லட்சத்து 45 ஆயிரத்து 6 மாணவர்கள், தனித்தேர்வர்கள் 10 ஆயிரத்து 742 பேர் என 9 லட்சத்து 55 ஆயிரத்து 748 மாணவர்கள் எழுதுகின்றனர்.

### கடும் நடவடிக்கை

தேர்வை பொறுத்தவரை, தேர்வு மைய வளாகத்துக்குள் செல்போன் எடுத்து வருதல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. தேர்வின் போது ஒழுங்கீனத்தில் ஈடுபட்டால் கடும் தண்டனைகள் வழங்கப்படும் என்றும் இதற்கு உடந்தையாக செயல்படும் கல்வி நிறுவனம் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசுத்தேர்வுகள் துறை இயக்குநர் எச்சரித்துள்ளார்,

## புகுஷிமா விவகாரம் ஐஏஇஏ விளக்கம்

■ டோக்கியோ

ஜப்பானில் சுனாமியால் பாதிக்கப்பட்ட புகுஷிமா அணுமின் நிலையத்தின் கதிர்வீச்சு கலந்த நீரை கடலில் திறந்துவிடும் அந்நாட்டு அரசின் திட்டத்துக்கு உலகின் அணுசக்திகண்காணிப்பு அமைப்பான சர்வதேச அணு சக்தி கழகம்(ஐஏஇஏ) ஆதரவு தெரிவித்துள்ளது.

சர்வதேச அணுசக்தி கழக இயக்குநர் ரஃபேல் கிராஸி நேற்று டோக்கியோவில் செய்தியாளர்களிடம் கூறும்போது, “நிபுணர் குழுவின் பரிந்துரைகள் பொருத்தமானதாக தோன்றுகிறது. என்றாலும் அந்த நீரை எப்படி அகற்றுவது எப்போது அகற்றுவது என்பதை ஜப்பான் அரசுதான் முடிவு செய்ய வேண்டும். இத்தகைய நீரை கடலில் திறந்துவிடுவது உலகில் புதிய நடைமுறை அல்ல. எனினும் அதனால் பாதிப்பு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்” என்றார்.

# காரைக்காலில் இருந்து இலங்கைக்கு விரைவில் பயணிகள் கப்பல் போக்குவரத்து

● மத்திய இணையமைச்சர் மன்சுக் மாண்டவியா தகவல்

■ புதுச்சேரி

காரைக்கால் - இலங்கை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து விரைவில் தொடங்கப்படும் என மத்திய கப்பல் போக்குவரத்து துறை இணை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

புதுச்சேரி யூனியன்பிரதேசத்துகுட்பட்ட காரைக்காலில் இருந்து இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்குவது தொடர்பாக புதுச்சேரி தலைமைச் செயலகத்தில் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

மத்திய கப்பல் போக்குவரத்து இணையமைச்சர் மன்சுக் மாண்டவியா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் புதுச்சேரி துறைமுகத் துறை அமைச்சர் கந்தசாமி, சுற்றுலாத் துறை அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவ், இந்திய கடலோரக் காவல்படை அதிகாரிகள் மற்றும் இந்திய இலங்கை துறைமுகத்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



▲ காரைக்காலில் இருந்து இலங்கைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்குவது தொடர்பாக புதுச்சேரியில் நடந்த கூட்டத்தில் மத்திய இணையமைச்சர் மன்சுக் மாண்டவியா பேசினார். உடன் புதுச்சேரி அமைச்சர்கள் கந்தசாமி,மல்லாடிகிருஷ்ணாராவ், வைத்திலிங்கம் எம்.பி.

கூட்டத்துக்கு பின்னர் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

காரைக்காலில் இருந்து இலங்கையில் ஜாப்னா துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து திட்டத்தை விரைவில் செயல்படுத்த இருக்கிறோம். இதற்காக புதுச்சேரி தலைமைச் செயலர் தலைமையில், சுற்றுலாத் துறை, துறைமுகத் துறை செயலர்கள் அடங்கிய குழு அமைக்கப்படும். அந்த குழுவினரின் பரிந்துரையின் பேரில் திட்டம் குறித்து விரைந்து முடிவு செய்யப்படும்.

பொது மற்றும் தனியார் ஒத்துழைப்புடன் மத்திய, மாநில அரசுகளின் ஆதரவோடு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தக் கப்பல் போக்குவரத்து மூலம் ஆன்மிக பயணமாக இலங்கையில் இருந்து அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் காரைக்காலுக்கு வருகை தருவார்கள். இதனால் காரைக்கால் அதைச் சுற்றியுள்ள தமிழகப் பகுதியில் சுற்றுலா மற்றும் தொழில்துறை வளர்ச்சி பெறும்” என்றார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவ் கூறும்போது, “கப்பல் போக்குவரத்து தொடங்கிய பிறகு காரைக்காலில் இருந்து இலங்கையை 3 மணி நேரத்தில் அடையலாம். இதற்காக ரூ.7 ஆயிரம் கட்டணம் நிர்ணயிக்கப்படும். 4 ஆண்டு முயற்சிக்கு தற்போது பலன் கிடைத்துள்ளது. நிதிச்சுமை இல்லாத வகையில் திட்டத்துக்கு முழு ஒத்துழைப்பு வழங்க புதுச்சேரி அரசு தயாராக உள்ளது. இது குறித்து விரைவில் இறுதி முடிவு எடுக்கப்படும், என்றார்.

திமுக பொதுச் செயலாளர்

# க.அன்பழகனுக்கு தீவிர சிகிச்சை

● மு.க.ஸ்டாலின் நேரில் நலம் விசாரிப்பு

■ சென்னை

உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள திமுக பொதுச் செயலாளர் க.அன்பழகனுக்கு (98) தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

வயது மூப்பு காரணமாக ஏற்பட்ட உடல் நலக் குறைவால் கடந்த ஓராண்டுக்கும் மேலாக மருத்துவமனையிலும், வீட்டிலும் சிகிச்சை பெற்று வந்த அன்பழகனுக்கு கடந்த 24-ம் தேதி மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்துசென்னைகிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அக்கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மருத்துவமனைக்கு சென்று அன்பழகனின் உடல்நலம் குறித்து விசாரித்தனர்.

இந்நிலையில், அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படாததால் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு செயற்கை சுவாசக் கருவி பொருத்தப்பட்டுள்ளதாகவும், அவரது உடல்நிலையை மருத்துவர்கள் குழு தீவிரமாக கண்காணித்து வருவதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.



திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், நேற்றும் மருத்துவமனைக்கு சென்று அன்பழகன் உடல்நலம் குறித்து விசாரித்தார். திமுக பொருளாளர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு உள்ளிட்டோரும் உடன் சென்றனர். க.அன்பழகனின் உடல்நிலை குறித்தும், அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் ஸ்டாலினிடம் மருத்துவர்கள் எடுத்துக் கூறினர்.

திமுக நிர்வாகிகள், எம்.பி., எம்எல்ஏக்கள், முன்னாள் அமைச்சர்கள் பலரும் அப்போலோ மருத்துவமனைக்குச் சென்று அன்பழகன் குடும்பத்தினரிடம் உடல்நலம் விசாரித்தனர்.

## பிறந்த நாள்: ஸ்டாலின் வேண்டுகோள்

வரும் மார்ச் 1–ம் தேதி தனக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்க வர வேண்டாம் என்று திமுகவினருக்கு அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கை: திமுக பொதுச்செயலாளரும் எனது பெரியப்பாவுமான க.அன்பழகன் வயது முதிர்வு காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

இதனால் மார்ச் 1–ம் தேதி எனது பிறந்தநாளை கொண்டாடும் மனநிலையில் இல்லை. எனவே, திமுக நிர்வாகிகள், தொண்டர்கள், என்மீது அன்பு கொண்ட நண்பர்கள் யாரும் மார்ச் 1–ம் தேதி என்னை நேரில் சந்தித்து வாழ்த்துச் சொல்ல வரவேண்டாம் என பணிவன்புடன் வேண்டுகிறேன். தமிழர் நலன்காக்க தன்னை ஒப்படைத்துக் கொண்ட அன்பழகன் நலம் பெற அனைவரும் தங்களது உள்ளார்ந்த நல்லெண்ணத்தை வெளிப்படுத்திக் கொள்வோம். இவ்வாறு ஸ்டாலின் கூறியுள்ளார்.

மிகவும் வயதானவராக கூறப்பட்ட

# சுதாகர் சதுர்வேதி பெங்களூருவில் காலமானார்

பெங்களூரு

கர்நாடக மாநிலம் துமக்கூருவை சேர்ந்தவர் சுதாகர் கிருஷ்ண ராவ். கடந்த 1897-ம் ஆண்டு ஏப்ரல் 20-ம் தேதி இவர் பிறந்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

இதனால் இந்தியாவில் மிகவும் வயதானவராக இவர் கருதப்பட்டார். இவர் ஹரித்துவாரில் உள்ள குருகுலத்தில் நான்கு வேதங்களையும் கற்றுத் தேர்ந்து, ‘சதுர்வேதி’ என பட்டம் பெற்றார்.

தொடக்கத்தில் ஆரிய சமாஜத்தில் இணைந்த சுதாகர் சதுர்வேதி பின்னர் காந்தியுடன் இணைந்தார். காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அவரது சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றார். கடந்த 1919-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் தேதி நடந்த ஜாலியன்வாலா பாக் படுகொலை உட்பட பல்வேறு சுதந்திர கால சம்பவங்களை நேரில் கண்ட சாட்சியாக விளங்கினார்.



▲ சுதாகர் சதுர்வேதி

முதுமை காலத்தில் பெங்களூருவில் உள்ள ஜெயநகரில் தனது உறவினர்களுடன் வசித்த சுதாகர் சதுர்வேதி நேற்று காலமானார். அவரது மறைவுக்கு கர்நாடக முதல்வர் எடியூரப்பா, முன்னாள் முதல்வர் குமாரசாமி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கோவிட்-19 காய்ச்சலால் சவுதி அரசு உத்தரவு எதிரொலி

# 67 இந்தியர்களை விமானத்தில் ஏற்ற இலங்கை விமான நிறுவனம் மறுப்பு

■ மதுரை

கோவிட்-19 காய்ச்சல் பரவலைத் தடுக்க இந்தியப் பயணிகளை அனுமதிக்க சவுதி அரசு மறுத்ததால், உம்ரா பயணிகள் 67 பேரை விமானத்தில் ஏற்ற ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மறுத்துவிட்டது.

மதுரையிலிருந்து நேற்று காலை 10 மணிக்கு இலங்கை செல்ல ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவன விமானம் தயாராக இருந்தது. இந்த விமானத்தில் உம்ரா பயணத்துக்காக இலங்கை வழியாக சவுதி செல்ல 67 பேர் தயாராக இருந்தனர்.

உடைமைகள் பரிசோதனை முடிந்த நிலையில் கோவிட்-19 காய்ச்சல் பரவலைக் காரணம் காட்டி இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகளை அனுமதிக்க சவுதி அரசு மறுத்துவிட்டது. இந்தத் தகவல் அப்போதுதான் விமான நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து 67 பயணிகளையும் விமானத்தில் ஏற்ற ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் மறுத்துவிட்டது. இதையடுத்து 67 பயணிகளும் ஏமாற்றத்துடன் மதுரை விமான நிலையத்திலிருந்து திரும்பிச்சென்றனர்.

இதுகுறித்து ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரைச் சேர்ந்த பயணி முகம்மது ரபீக் கூறுகையில், முதல்முறையாக இப்போதுதான் உம்ரா பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டோம். இதற்காக மிகவும் ஆவலுடன் வந்தோம். விமானத்தில் ஏறும் சமயத்தில் திடீரென சவுதி அரசின் உத்தரவால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளோம். அனுமதி அளிப்பதும், மறுப்பதும் சவுதி அரசின் உரிமை என்றாலும் அதை முன்கூட்டியே தெரிவித்திருக்க வேண்டும். விமானத்தில் ஏறும்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எங்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. எனினும் எங்களால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் ஊர் திரும்புகிறோம் என்றார்.

### சர்வதேச விமான சேவை

ஈரானில் கோவிட்-19 காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. அங்கிருந்து விமானத்தில் பாகிஸ்தானுக்கு திரும்பிய 2 பயணிகள் இந்த காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து ஈரானுடனான விமானப் போக்குவரத்தை பாகிஸ்தான் முழுமையாக ரத்து செய்துள்ளது. இதேபோல தென் கொரியா, இத்தாலியில் கோவிட்-19 காய்ச்சல் வேகமாக பரவி வருவதால் அந்த நாடுகளுடனான விமான சேவைகளை பல்வேறு நாடுகள் ரத்து செய்துள்ளன.



▲ 2008-ம் ஆண்டு மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கானது மும்பையில் உள்ள என்ஐஏ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான பாஜக எம்.பி. பிரக்யா சிங் தாக்குர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜரானார். படம்: பிடிஐ